Ontario

# ஒன்டேரியோவில்

# குடும்ப சட்டம்

## (குடும்ப சட்டத்தை) பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன

இச்சிறு புத்தகம் இச்சட்டத்தை பற்றிய தகவல் அது எழுதப்பட்ட சமயத்தில் இருந்தது போல கொண்டுள்ளது. சட்டம் மாறலாம். தற்போதைய தகவல்களுக்கு அட்டர்னி ஜெனரல் அமைச்சகத்தின் ***www.attorneygeneral.jus.gov.on.ca*** இணையதளத்தில் பெற்றுக்கொள்ளுங்கள். இச்சிறு புத்தகம் சட்ட ரீதியான ஆலோசனையையும் கொண்டிருக்கவில்லை அல்லது வழக்கறிஞர்கள் அல்லது பிற நிபுணர்களின் சிறப்பு ஆலோசனைக்கு பதிலாகவும் நியமிக்கப்படவில்லை.

© Queen's Printer for Ontario, 2009
அட்டர்னி ஜெனரல் அமைச்சகத்தினால் அச்சிடப்பட்டது.

**ISBN 978-1-4249-8371-1 (PDF)**

இது *ஒன்டேரியோவில் குடும்பச் சட்டம் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன,* சரிபார்த்தது, மார்ச் 2006 என்பதன் ஒரு மொழி பெயர்ப்பாகும்.

*ஒன்டேரியோவில் குடும்பச் சட்டம் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன* என்ற இது ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் பிற மொழிகளிலும் கிடைக்கிறது.

கனடாவின் நீதித்துறையின் குழந்தை மையமாகக் கொண்ட குடும்ப நீதி நிதி உதவியால் இந்த பிரசுரம் சாத்தியமானது.

*ஆகஸ்ட் 1999*
*மார்ச் 2002*
சரிப்பார்த்தது. மார்ச் ***2006***

# இச்சிறு புத்தகத்தில்.....

அறிமுகம்…………………………………………………………………………………………..3

I. **குடும்பச் சட்டம் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்……………...5**

திருமணம் செய்து கொள்வது………………………………………………………………………5

ஒன்றாய் வாழ்வது……………………………………………………………………………….. 7

பிரிவது மற்றும் உங்களுக்கு இடையே பிணக்குகளைத் தீர்த்துக் கொள்வது……... …10

ஒரு மத்தியஸ்தரைப் பார்ப்பது……...………………………………………………………….12

ஒரு சமரச நீதிபதியைப் பார்ப்பது……………………………...…………………………….14

ஒரு வழக்கறிஞரைத் தேர்வு ய்வது……………….. ………………………………………….15

நீதிமன்றத்திற்குச் செல்வது ………………………………………………………………...…17

விவாகரத்து பெறுவது……………………………………………………………………………19

II. **உங்கள் சட்டரீதியான உரிமைகள் மற்றும் கடமைப்பாடுகள் ……………………….....…20**

குடும்ப இல்லத்தில் தங்கியிருப்பது………………...…………………………………………20

உங்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது……………………………………….....21

உங்கள் குழந்தைகளுக்கு நிதி ஆதாரம் தருவது…………………………………...……..25

உங்கள் வாழ்க்கைத் துணைவருக்கு நிதி ஆதாரம் தருவது…………………….....……..30

உங்கள் ஆதரவும பண வரவுகளை அமல் படுத்துவது…………………………....…….32

உங்கள் சொத்துக்களைப் பிரித்தல்……………………………………………………………..35

உங்கள் கணவர் அல்லது மனைவி இறந்த பின்னர் சொத்துக்களைப் பிரிப்பது ………43

III **வீட்டிற்குள் வன்முறை………………………………………………………………...………..46**

நின்தனையால் பாதிக்கப்பட்டோருக்கு சட்டங்கள்……………………………………….....48

IV **இதைப்பற்றுய கூடுதல் தகவல்களை காண்பதற்கு……………………………..…………….52**

## அறிமுகம்

இச்சிறு புத்தகம் ஒன்டேரியோவில் குடும்பச் சட்டம் பற்றியதாகும். நீங்கள் பிரிந்தால் உங்களைப் பாதிக்கக்கூடிய சட்டங்களைப் பற்றிய தகவல்களை இது கொண்டுள்ளது. அவற்றில் உங்கள் குழந்தைகளின் கவனிப்பு மற்றும் ஆதரவு, உங்களின் அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையின் ஆதரவு மற்றும் உங்கள் சொத்தின் பிரிவினை பற்றிய விஷயங்களும் அடங்கியுள்ளது.[1]

முக்கிய முடிவுகள் எடுக்கும் முன்பாக, உங்களது உரிமைகள் மற்றும் கடமைப்பாடுகளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். குடும்பச் சட்டம் என்பது சிக்கலான ஒன்றாக இருக்கக்கூடும் மற்றும் ஒரு சிறுபுத்தகத்தில் உங்களது எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளிப்பதோ அல்லது நீங்கள் தெரிந்து கொள்ளத் தேவையான ஒவ்வொன்றையும் கூறவோ சாத்தியமில்லை. சட்டம் பற்றியும் உங்களது தேர்வுகள் பற்றியும் நீங்களே தெரிந்து கொள்வதற்குப் பல வழிகள் உள்ளன. ஒரே அல்லது எதிர் பாலினமாக இருந்தாலும் சரி, பொதுவாக ஒன்டேரியோ குடும்பச் சட்டம் ஜோடிகளுக்கு சமமாகப் பொருந்துகிறது. .

நீங்கள் பிரிந்துள்ளீர்கள் அல்லது பிரிவதற்கு சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், உங்கள் நிலைமை பற்றி ஒரு வழக்கறிஞரிடம் பேசுவது ஒரு நல்ல யோசனை ஆகும். வழக்கறிஞர் ஒருவர் உங்களுக்குக் குறிப்பிட்ட சட்டம் பற்றிய தகவளையும் மற்றும் அது உங்களை எப்படி பாதிக்கக்கூடும் என்றும் கூறலாம்..

கூடுதல் தகவல்களுக்கு உங்கள் உள்ளுர் குடும்ப நீதிமன்றத்திற்குச் செல்வதும் ஒரு நல்ல இடமாகும். சில நீதிமன்றங்கள் பிரிகின்ற குடும்பங்களைப் பாதிக்கும் விஷயங்கள் பற்றிய பெற்றோர் தகவல் தொடர்களை வழங்குகின்றன. எல்லா குடும்ப நீதிமன்றங்களிலும் குடும்பச் சட்ட தகவல் மையங்கள் உள்ளன. அவை கீழ்கண்டவை உட்பட ஒரு வரிசையான தகவல்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்றன.:

- பிரிகின்ற குடும்பங்களுக்குத் தொடர்பான தலைப்புகளில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பிற எழுதப்பட்ட பொருட்கள்;
- செயல்முறைக்கு வழிகாட்டிகள்;
- சமுதாயத்தில் உள்ள சேவைகளுக்கு, ஆலோசனை போன்றவற்றிற்குப் பரிந்துரைகள்;
- நீதிமன்ற நடைமுறை பற்றிய தகவல்கள் மற்றும் நீதிமன்ற படிவங்கள்;
- குடும்பச் சட்ட பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம், சமரச நீதிபதி உட்பட பல்வேறு வழிகள் மற்றும்

**பக்கங்கள்**
**11, 13 & 58**

[1] நீங்கள் பெடரல் *இந்தியன் ஆக்டின்* கீழ் பதிவு செய்த ஒரு இந்தியர் என்றால் இச்சிறு புத்தகத்தில் உள்ள சொத்து பிரிப்பு மற்றும் ஆதரவு பண வரவுகளுக்கு வரிவிதிப்பு சம்பந்தமானது பொருந்தாமல் இருக்கலாம். கூடுதல் தகவல்கள் இச்சிறு புத்தகத்தின் பின்பக்கம் கிடைக்கிறது.

ஒத்துழைக்கும் குடும்பச் சட்டம் மற்றும் நீதிமன்றம் செல்வது இவைகள் பற்றிய தகவல்கள் மற்றும் அறிவுரை மற்றும்

- குடும்பச் சட்டம் பற்றிய ஞானம் கொண்ட சட்ட உதவி வழக்கறிஞர்களிடமிருந்து சட்ட சம்பந்தமான தகவல்கள் மற்றும் அறிவுரை.

ஒன்டேரியோவில், குடும்பச்சட்டத்தைக் கவனிக்கும் மூன்று வித்தியாசமான நீதிமன்றங்கள் உள்ளன.

சில சமுதாயங்களில், குடும்பச் சட்ட விஷயங்கள் சுப்பீரியர் கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸின் குடும்ப நீதிமன்றம் (Family Court of the Superior Court of Justice) மூலமாகக் கவனிக்கப்படுகின்றன. இந்த நீதிமன்றங்கள் விவாகரத்து, பாதுகாப்புப் பொறுப்பு, அணுகுவது, சொத்துப் பிரிவினை, தத்து எடுத்தல் மற்றும் குழந்தை பாதுகாப்பு உட்பட எல்லா குடும்ப சட்டப் பிரச்சனைகளைக் கையாளலாம். இந்த நீதிமன்றங்களில் குடும்ப சட்டத் தகவல் மையங்களும் உள்ளன மற்றும் பொது மக்களுக்கு குடும்ப மத்தியஸ்த சேவைகள் மற்றும் பெற்றோர் தகவல் தொடர்களை அவை அளிக்கின்றன.

பிற சமுதாயங்களில், குடும்ப சட்ட விஷயங்கள் இரண்டு தனியான நீதிமன்றங்களில் கையாளப்படுகின்றன. உங்களுக்குத் தீர்க்கப்பட வேண்டிய குடும்ப சட்ட விஷயங்கள் எது என்று உங்களுக்குத் தெரிந்திருக்கத் தேவையுள்ளது.:

- ஒரு விவாகரத்து மட்டும் பெற்றால் போதும் என்று நீங்கள் விரும்பினால், ஒரு விவாகரத்து பெற்று பாதுகாப்புப் பொறுப்பு பெறுவது, விவாகரத்தின் பகுதியாக அணுகுவது அல்லது ஆதரவைக் கேட்க நீங்கள் விரும்பினால், நீங்கள் கண்டிப்பாக சுப்பீரியர் கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸிற்குச் (Superior Court of Justice) செல்ல வேண்டும்.. உங்கள் குடும்ப சொத்து பிரிப்பது தொடர்பான விஷயங்களைத் தீர்வு செய்ய நீங்கள் விரும்பினால் கண்டிப்பாக நீங்கள் இந்த நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும்.

- ஒரு விவாகரத்தை நீங்கள் நாடவில்லை, ஆனால் ஆதரவு மட்டும் கேட்க அல்லது பாதுகாப்புப் பொறுப்பு அல்லது உங்கள் குழந்தைகளை அணுகுவது தொடர்பான விஷயங்களைத் தீர்வு செய்ய விரும்புகிறீர்கள் என்றால் நீங்கள் சுப்பீரியர் கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸிற்குச் செல்லாம், ஆனால் நீங்கள் ஒன்டேரியோ கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸுக்கும் (Ontario Court of Justice) செல்லலாம். இந்த நீதிமன்றம் மேலும் தத்து எடுத்தல் மற்றும் குழந்தை பாதுகாப்பு விஷயங்களையும் கேட்கிறது.

நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் உங்களுக்கிடையே உள்ள பிரச்சனைகளை தனிப்பட்ட உடன்பாடு, பேச்சுவார்த்தை, மத்தியஸ்தர், சமரச நீதிபதி அல்லது நீதிமன்றத்திற்குச் சென்று தீர்க்கலாம். இச்சிறு புத்தகம் இந்த ஒவ்வொரு விருப்பத் தேர்வு பற்றியும் சில தகவல்களை அளிக்கிறது..

**குடும்ப நீதிமன்றங்கள் மற்றும் சேவைகள் மற்றும் அவைகளுக்காக நீங்கள் அழைக்கக்கூடிய அல்லது எழுதக்கூடிய இடங்கள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, தயவசெய்து பக்கம் 53 ல் ”கூடுதல் தகவல்களைக் காண்பது” பகுதியில் இந்த பகுதிக்குச் செல்லுங்கள்.**

**பக்கம் 53**

# I. குடும்ப சட்டம் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்

## திருமணம் செய்து கொள்வது

**ஒன்டேரியோவில்**, **ஒரு மக்கள் சமுதாய விழாவில் அல்லது ஒரு மத சம்பந்தமான சேவையில் ஒரு** தம்பதி **திருமணம் செய்து கொள்ளலாம்**.

நீங்கள் திருமணம் செய்து கொண்டதும், சட்டம் உங்கள் திருமணத்தை ஒரு சமத்துவமான பொருளாதார பங்குதார அமைப்பாக நடத்துகிறது. உங்கள் திருமணம் முடிவுற்றால், நீங்கள் திருமணம் ஆகியிருந்த பொழுது பெற்ற சொத்தின் மதிப்பு மற்றும் உங்கள் திருமணத்தில் கொண்டு வந்திருந்த சொத்து மதிப்பின் உயர்வு இவை இரண்டாகப் பிரிக்கப்படும்: ஒரு பாதி உங்களுக்கு மற்ற பாதி உங்கள் கணவருக்கு அல்லது மனைவிக்கு உரியது ஆகும். இந்த விதிக்கு விலக்குகள் இல்லை.

நீங்கள் மற்றும் உங்கள் கணவர் அல்லது மனைவிக்கு குடும்ப இல்லத்தில் தங்குவதற்கு ஒரு சமமான உரிமை உள்ளது என்று சட்டம் மேலும் சொல்கிறது. நீங்கள் பிரிந்தால், யார் தொடர்ந்து அங்கு தங்குவது என்று நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

**பக்கம்**
**19**

அத்துடன், உங்கள் திருமணம் முடிவுறும் பொழுது உங்களுக்கும் மற்றும் உங்கள் குழந்தைகளுக்கும் நிதி ஆதரவு உரிமை இருக்கலாம் என்று ஒன்டேரியோவின் குடும்ப சட்டங்கள் சொல்கின்றன.

**பக்கங்கள்**
**24 & 29**

தங்களது உறவுமுறைக்கு சட்டம் ஏற்றபடியாக இல்லை என்று உணரும் ஜோடிகள் பிற ஏற்பாடுகளை ஒரு திருமண ஒப்பந்தத்தில் செய்து கொள்ளலாம்.

திருமண ஒப்பந்தங்கள் மிகவும் முக்கியமான சட்டப்படியான ஆவணங்கள் ஆகும். உங்கள் முடிவு பற்றி நீங்கள் கவனமாக யோசிக்க வேண்டும். ஒரு திருமண ஒப்பந்தத்தைக் கையொப்பமிடுமுன் ஒரு வழக்கறிஞரிடம் பேசவும் மற்றும் நிதித் தகவல்களைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளவும்.

ஒரு திருமண ஒப்பந்தத்தில் உங்கள் திருமணத்தின் பொழுது ஒருவருக்கொருவர் என்ன எதிர்பார்க்கலாம் என்று நீங்கள் கூறலாம். உங்கள் திருமணத்தினுள் நீங்கள் கொண்டு வரும் சொத்தைப் பட்டியலிடலாம் மற்றும் அதன் மதிப்ப மற்றும் அது யாருக்குச் சொந்தமானது என்றும் கூறலாம். உங்கள் திருமணம் முறிந்தால் மிகச் சரியாக எவ்வாறு நீங்கள் பிரிப்பீர்கள் என்று கூறலாம். உங்கள் சொத்தினைச் சமமாக நீங்கள் பிரிக்க வேண்டியதில்லை. உங்கள் திருமணம் முறிந்தால் எவ்வாறு ஆதரவு நிதி வழங்குவது பற்றி நீங்கள் விளக்கலாம். உங்கள் குழந்தைகளின் கல்வி மற்றும் மதரீதியாக வளர்ப்பது பற்றி அவர்கள் பிறக்கும் முன்பே திட்டங்களும் இடலாம்.

ஒரு திருமண ஒப்பந்தத்தில் சில விஷயங்களை நீங்கள் இட முடியாது. உங்கள் திருமணம் முறிந்தால் குழந்தைகளின் பாதுகாப்பு, பொறுப்பு, மற்றும் அணுகும் ஏற்பாடுகள் பற்றி உறுதிமொழிகள் செய்ய முடியாது. ஒவ்வொரு வாழ்க்கைத் துணைவருக்கும் அவர்களின் இல்லத்தில் வசிப்பதற்கு ஒரு சம உரிமை உள்ளது என்று சொல்லும் சட்டத்தை நீங்கள் மாற்ற முடியாது.

**Q** ***நாங்கள் ஏற்கனவே திருமணம் செய்துள்ளோம் மற்றும் ஒரு திருமண ஒப்பந்தம் எங்களிடம் இல்லை. நாங்கள் நினைக்கிறோம் தற்பொழுது ஒன்று வைத்துக் கொள்வது ஒரு நல்ல யோசனை என்று. இது மிகவும் தாமதமா?***

**A** இல்லை, அது மிகவும் தாமதமில்லை. நீங்கள் திருமணம் முடித்த பின்னர் ஒரு திருமண ஒப்பந்தத்தில் நீங்கள் கையொப்பமிடலாம். அது கண்டிப்பாக எழுத்தில் இருக்க வேண்டும் மற்றும் நீங்கள் மற்றும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் ஒரு சாட்சி முன்னர் கையொப்பமிட்டு சாட்சியும் கையொப்பமிட வேண்டும். உங்கள் ஒப்பந்தத்தை நீங்களே எழுதினால், நீங்கள் கைபொப்பமிடும் முன்னதாக உங்கள் ஒவ்வொருவரின் சொந்த வழக்கறிஞர் அதைச் சரிபார்க்க வேண்டும்.

**Q** ***ஒரு சில மாதங்களில் நான் திருமணம் செய்ய உள்ளேன். எனக்குச் சொந்தமாக நிறைய இல்லை ஆனால் என் தாய் தான் மணம் முடிக்கையில் பெற்ற சைனா பாத்திரங்கள் என் வசம் உள்ளன. அது $2,000 மதிப்பு வாய்ந்தது. நான் மணம் முடிக்கையில், அந்த சைனா செட் என் கணவருக்கும் உரிமையாகி விடுமா?***

**A** இல்லை. அந்த சைனா பாத்திரங்கள் உங்களது சொத்து ஆகும். உங்கள் திருமணம் முறிந்தால், அந்த சைனா பாத்திரங்களை நீங்களே வைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த சைனா பாத்திரங்களின் மதிப்பு உங்கள் திருமணம் முறியும் பொழுது அதிகரித்திருந்தால், நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் அதிகரித்த மதிப்பைப் பகிர்ந்து கொள்வீர்கள்..

ஒரு திருமண ஒப்பந்தம் உங்களிடம் இருந்தால், அந்த சைனா பாத்திரம் உங்களது சொத்து என்றும் மற்றும் உங்கள் திருமணத்தின் பொழுது அதன் மதிப்பு ஏதும் உயர்ந்தால் திருமண முறிவின் பொழுது உங்கள் வாழ்க்கைத் துணைவருடன் பகிர்ந்து கொள்ளப்படாது என்று அதில் கூறலாம்.

## ஒன்றாய் வாழ்வது

**திருமணம் செய்யாமல் யாருடனும் நீங்கள் வசித்தால்**, ஒரு பொதுவான சட்ட உறவுமுறையில் நீங்கள் இருக்கிறீர்கள் அல்லது சேர்ந்து வசிக்கிறீர்கள் என்று மக்கள் சொல்கிறார்கள்.

## சொத்து

பொதுவான சட்ட தம்பதிகளுக்குத் திருமணமான தம்பதிகளைப் போன்ற உரிமைகளான சேர்ந்து தாங்கள் வசிக்கும் பொழுது தாங்கள் வாங்கிய சொத்தினைப் பகிர்வதற்கு கிடையாது. வழக்கமாக, பர்னிச்சர், வீட்டுப் பொருட்கள் மற்றும் பிற சொத்து இவை யாவும் வாங்கிய நபருக்குச் சொந்தமாகும். பொதுவான சட்ட தம்பதிகளுக்கு, இந்த உறவுமுறைக்கு தாங்கள் கொண்டு வந்த சொத்தின் மதிப்பு உயர்வை தங்களுக்கிடையே பகிர்வதற்கான உரிமையும் கிடையாது.

உங்கள் வாழ்க்கைத் துணைக்குச் சொந்தமான சொத்திற்கு நீங்கள் பங்களித்திருந்தால், அதன் பங்கில் உங்களுக்கு ஒரு உரிமை இருக்கலாம். உங்கள் வாழ்க்கைத் துணை திருப்பித் தர சம்மதம் அளித்தால் ஒழிய, உங்கள் பங்களிப்பை நிரூபிப்பதற்கு நீங்கள் நீதிமன்றத்தை நாட வேண்டியிருக்கும்.

## ஆதரவு

உங்களது பொதுவான சட்ட உறவுமுறை முறிந்தால், மற்றும் உங்களுக்கு ஆதரவாக போதிய பணம் உங்களிடம் இல்லையென்றால், நீங்கள் உங்கள் வாழ்க்கைத் துணையை ஆதரவு தருவதற்குக் கேட்கலாம். மூன்று வருடங்களுக்கு நீங்கள் சேர்ந்து வாழ்ந்திருந்தால், அல்லது நீங்கள் குறைந்த காலத்திற்கு சேர்ந்து வாழ்ந்திருக்கிறீர்கள் மற்றும் ஒன்றாய் ஒரு குழந்தையைத் தத்து எடுத்திருந்தீர்கள் அல்லது எடுத்தீர்கள் என்றால் நீங்கள் உங்களுக்கான ஆதரவைக் கேட்கலாம். உங்கள் வாழ்க்கைத் துணை, இல்லை என்று கூறினால், நீங்கள் ஒரு நீதி மன்றத்திற்குச் செல்லலாம் மற்றும் நீங்கள் ஆதரவு பெற வேண்டும் என்று முடிவு செய்ய ஒரு நீதிபதியைக் கேட்கலாம்.

உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் குழந்தை இருந்தால் அல்லது ஒன்றாகத் தத்து எடுத்திருந்தால், அந்த குழந்தைக்கு நீங்கள் ஆதரவு கேட்கலாம். ஒரு பொதுவான சட்ட உறவுமுறையில் வசிக்கும் பெற்றோர்களின் குழந்தைகளுக்கும் திருமணமான ஜோடிகளின் குழந்தைகளைப் போன்றே தங்களது பெற்றோரின் ஆதரவுக்கு அதே உரிமைகள் உண்டு. நீங்கள் சேர்ந்து வசித்த பொழுது உங்கள் குழந்தையை உங்கள் வாழ்க்கைத் துணை தனது குழந்தையைப் போன்று நடத்தினாலும், நீங்கள் ஆதரவு கேட்கலாம். உங்கள் வாழ்க்கைத் துணை ஆதரவைத் தர மாட்டார் என்றால், நீதிமன்றத்திற்கு நீங்கள் செல்லலாம் மற்றும் அந்த குழந்தைக்கு ஆதரவு தரும்படி உங்கள் வாழ்க்கைத் துணைக்கு ஆணையிடும்படி ஒரு நீதிபதியைக் கேட்கலாம். ஆதரவின் அளவு *குழந்தை ஆதரவு வழிகாட்டிகளில்* அமைக்கப்பட்டுள்ளது.

உங்களது அல்லது உங்கள் குழந்தைக்கு ஆதரவு ஆணையின் ஒரு பகுதியாக, நீங்கள் சேர்ந்து வாழ்ந்த பொழுது நீங்கள் பகிர்ந்து கொண்ட வீட்டில் வசிப்பதற்கும் நீங்கள் கேட்கலாம். அந்த வீடு உங்களுக்குச் சொந்தமானது இல்லை என்றாலோ, அல்லது அந்த லீசில் உங்கள் பெயர் இல்லை என்றாலோ கூட நீதிபதி இதை ஆணையிடலாம். திருமணமான தம்பதிகளுக்கு இது வித்தியாசமானது ஆகும். திருமணமான தம்பதிகளுக்கு அந்த வீட்டில் தங்கியிருப்பதற்கு தானாகவே ஒரு சம உரிமை உள்ளது.

நீங்கள் ஆதரவைப் பெறா விட்டால், அந்த வீடு உங்களுக்கு உரிமையற்றது என்றால் அதில் தங்கியிருப்பதற்கு உங்களுக்கு உரிமையில்லாமல் போகலாம்.

பொதுவான சட்ட உறவுமுறையில் உள்ள தம்பதிகள் தங்களது உரிமைகளைக் காத்திட ஒரு இணைந்து வசிக்கும் ஒப்பந்தத்தில் கையொப்பமிடலாம்.

ஒரு இணைந்து வசிக்கும் ஒப்பந்தம் உங்களது நிதி மற்றும் குடும்ப ஏற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் என நீங்கள் இருவரும் விரும்புவதைத் தெளிவாக எடுத்துரைக்கலாம். நீங்கள் சேர்ந்து வசிக்கும் பொழுது நீங்கள் வாங்குவது யாருக்குச் சொந்தம் என்று அது கூறலாம். அந்த உறவுமுறை முறிந்தால் எவ்வளவு ஆதரவு தரப்படும் மற்றும் உங்களது சொத்து எவ்வாறு பிரிக்கப்படும் என்று அது கூறலாம். அந்த உறவுமுறை முறிந்தால் யார் வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று அது கூறலாம்.

உங்கள் உறவுமுறை முறிந்தால் யாரிடம் பாதுகாப்பு பொறுப்பு இருக்கும், அல்லது அணுகும் உரிமை என்பது பற்றி அது கூற முடியாது. உறவுமுறை முடியும் முன்பு நீங்கள் இதை முடிவு செய்ய இயலாது.

இணைந்து வாழும் ஒப்பந்தம் ஒன்றை அதை சட்டப்படியாக இருப்பதற்கு ஒரு சாட்சியின் முன்னிலையில் நீங்கள் இருவரும் கையொப்பமிட வேண்டும். சாட்சியும் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும்.. இணைந்து வாழும் ஒப்பந்தம் ஒன்றை நீங்கள் கையொப்பமிட்டிருக்கும் பொழுது, அது சொல்வதை நீங்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். உங்களில் ஒருவர் அந்த ஒப்பந்தத்தை விரும்பாவிட்டால், அந்த ஒப்பந்தத்தில் ஒரு மாற்றத்திற்குப் பேசிப் பார்க்கலாம். எந்த மாறுதலும் எழுத்தில் இருக்க வேண்டும் மற்றும் ஒரு சாட்சியின் முன்னிலையில் கையொப்பமிட்டிருக்க வேண்டும். நீங்கள் சம்மதிக்க முடியாவிட்டால், மற்றும் நீங்கள் பிரிந்திருந்தால், ஒரு நீதிமன்றத்திற்கு நீங்கள் சென்று அதை மாற்ற நீதிபதி ஒருவரைக் கேட்க வேண்டியிருக்கும்.

நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு வித்தியாசமான வழக்கறிஞருடன் பேச வேண்டும் மற்றும் இணைந்து வாழும் ஒப்பந்தம் ஒன்றைக் கையொப்பமிடு முன் நிதித்தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும்.

***Q*** ***நாங்கள் சேர்ந்து வசிக்கிறோம் மற்றும் இணைந்து வாழும் ஒப்பந்தம் ஒன்று எங்களிடம் கிடையாது. எங்களில் ஒருவர் இறக்கும் பொழுது எங்களுக்குச் சொந்தமான பொருட்கள் மற்றும் எங்களது சேமிப்புகளுக்கு என்ன நிகழும்?***

***A*** உங்களது சொத்துக்கு என்ன நிகழும் என்று கச்சிதமாகச் சொல்லும் ஒரு உயில் இல்லாமல் நீங்கள் இறக்கும் பொழுது, உங்கள் சொத்து உங்கள் ரத்த உறவுகளுக்குச் செல்லும் -எடுத்துக்காட்டாக, உங்கள் குழந்தைகள், உங்கள்

உங்கள் சொத்தின் பகுதிக்கு உரிமை கோர வேண்டுமானால், உங்கள் பொதுவான சட்ட வாழ்க்கைத் துணை அவர் அல்லது அவள் சொத்தை அடையத் தான் பணம் செலுத்தியதை நிரூபிக்க நீதிமன்றம் செல்ல வேண்டியிருக்கும் . இது காலம் எடுக்கக்கூடியது மற்றும் செலவு மிகுந்தது ஆகும். இந்த காரணங்களால், பொதுவான சட்ட உறவுமுறையில் வாழும் மக்கள் ஒவ்வொருவரும், தங்களில் ஒருவர் இறந்து விட்டால் யாருக்குத் தங்கள் சொத்து சேர வேண்டும் என்று சொல்லும் ஒரு உயிலை வைத்துக் கொள்ள வேண்டும் .

**Q** ***இங்கே ஒன்றாக நாங்கள் வந்து சேர்ந்த பொழுது, நாங்கள் வழக்கறிஞர்களிடம் சென்று இணைந்து வாழும் ஒப்பந்தம் ஒன்றைக் கையொப்பமிட்டோம். திருமணம் செய்து கொள்வதற்கு நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். எங்களது இணைந்து வாழும் ஒப்பந்தம் என்ன ஆகும்?***

**A** நீங்கள் திருமணம் செய்யும் பொழுது, உங்களது இணைந்து வாழும் ஒப்பந்தம் உங்கள் திருமண ஒப்பந்தம் ஆகிறது. நீங்கள் இருவரும் அதை மாற்ற விரும்பினால், ஒரு புதிய ஒப்பந்தத்தை நீங்கள் கையொப்பமிடலாம்..

# பிரிவது மற்றும் உங்களுக்கு இடையே உள்ள பிரச்சனைகளைத் தீர்வு செய்வது

**நீங்கள் பிரிந்து விட்டீர்கள், ஒன்றாய் வசிக்கவில்லை மற்றும் மீண்டும் நீங்கள் சேர்ந்து வாழ்வதற்கு வாய்ப்பு இல்லை. நீங்கள் பிரியும் பொழுது, செய்ய வேண்டிய முடிவுகள் பல உள்ளன.**

உங்களில் யார் உங்கள் வீட்டில் தங்குவது, யார் குடும்பக் கடன்களை அடைப்பது, எவ்வளவு ஆதரவுப் பணம் தருவது, உங்கள் சொத்தை நீங்கள் எப்படிப் பிரிப்பது, மற்றும் உங்கள் குழந்தைகளை யார் கவனிப்பது என்ற ஏற்பாடுகளைச் செய்யத் தேவை உள்ளது.

பல வழிகளில் விஷயங்களை நீங்கள் தீர்வு செய்யலாம்.

1. ஒரு முறைசாரா ஏற்பாடு ஒன்றை நீங்கள் செய்து கொள்ளலாம், அது வாய்மொழியாக அல்லது எழுத்தில் இருக்கலாம்.

2. விஷயங்களைப் பொறுத்தவரையில் நீங்கள் சம்மதித்து உங்கள் முடிவுகளை ஒரு தனி ஒப்பந்தமாக எழுதி வைத்துக் கொள்ளலாம். ஒரு தனி ஒப்பந்தமானது சட்டப்படியானதாக இருப்பதற்கு ஒரு சாட்சியின் முன்பாக உங்கள் இருவராலும் கையொப்பமிட்டுருக்கப்பட வேண்டும். அந்த சாட்சியும் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

3. ஒரு மத்தியஸ்தர் அல்லது ஒரு சமரச நீதிபதியை நீங்கள் உபயோகிக்கலாம்.

4. ஒத்துழைக்கும் குடும்பச் சட்டத்தை நீங்கள் பயன்படுத்தலாம். (இந்த விருப்பத்தேர்வை நாடுவதற்கு நீங்கள் ஆர்வமாக இருந்தால், நீங்கள் கண்டிப்பாக ஒரு வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.)

5. நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று முடிவு செய்யக் கோரலாம்.

உங்களுக்கிடையே உள்ள பிரச்சனைகள எவ்வாறு தீர்ப்பது என்று நீங்கள் இருவர் சம்மதிப்பது எப்பொழுதுமே நல்லதாகும். நீதிமன்ற நடவடிக்கைகள் மிகவும் செலவு மிக்கதாக இருக்கலாம் மற்றும் நீண்ட காலம் பிடிக்கலாம். நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் ஒரு ஒப்பந்தத்திற்கு வர முடியவில்லை என்றால், நீங்கள் ஒருவருக்கொருவர் பேசுவதற்கும், ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திடவும், ஒரு மத்தியஸ்தர் உதவக்கூடும். வழக்கறிஞர் ஒருவரும் உங்களுக்கு விஷயங்களை முடிப்பதில் உதவலாம், ஆனால் ஒரே வழக்கறிஞர் உங்கள் இருவருக்கும் உதவ முடியாது என்பதை நினைவு கூறுங்கள்.

ஒரு பிரிவு ஒப்பந்தம் கையொப்பமிடுவது மிக முக்கியமான நடவடிக்கை ஆகும். உங்கள் முடிவுகள் உங்களை இப்பொழுதும் உங்கள் குழந்தைகளை வாழ்க்கை முழுவதும் பாதிக்கலாம். அந்த ஒப்பந்தத்தை உங்களில் ஒருவர் விரும்பவில்லை என்று முடிவு செய்தால், ஒரு புதிய ஒப்பந்தத்தைப் பேசி முடிப்பதற்கு நீங்கள் முயற்சி செய்யலாம். உங்களால் சம்மதிக்க முடியாவிட்டால் நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும் மற்றும் நீதிபதி ஒருவர் அதை மாற்றக் கேட்க வேண்டியிருக்கும். ஒரு பிரிவு ஒப்பந்தம் என்பது நீங்கள் கண்டிப்பாக மதிக்க வேண்டிய ஒரு ஒப்பந்தம் ஆகும். உங்கள் முடிவுகளின் எல்லா சட்டப்படியான விளைவுகளையும் நீங்கள் தெரிந்து கொள்வதை உறுதி செய்வதற்கு ஒரு வழக்கறிஞரிடம் நீங்கள் பேச வேண்டும்.

நீங்கள் முடிவுகள் எதையும் எடுக்கும் முன்பாக உங்கள் வாழ்க்கைத் துணைவரின் நிதி விஷயங்களைப்பற்றிய பூராண மற்றும் உண்மையான தகவல்களுக்கு உங்களுக்கு உரிமை உள்ளது. உங்களுக்குத் தேவையான எல்லா தகவல்களும் உங்களிடம் கிடைக்கும் வரை எதையும் கையொப்பமிட வேண்டாம். என்ன எழுதப்பட்டிருக்கிறது என்றும், நீங்கள் அதை ஒத்துக் கொள்கிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பிரிவு ஒப்பந்தம் ஒன்று வைத்துக் கொள்ளும் முடிவை சட்டம் உங்களிடமே விடுகிறது. எழுதப்பட்டு மற்றும் கையொப்பமிட்ட பிரிவு ஒப்பந்தம் ஒன்று உங்களிடம் இல்லாவிட்டால் நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் ஒரு குறிப்பிட்ட வழியில் விஷயங்களைத் தீர்த்துக் கொள்வதாக உறுதி செய்துள்ளதை நிரூபிக்கக் கடினமாக இருக்கலாம். உங்கள் முறைசாரா ஒப்பந்தத்தை உங்கள் வாழ்க்கைத் துணை மதிப்பதை நிறுத்தி விட்டால் இது ஒரு பிரச்சனை ஆகி விடக்கூடும்.

உங்களுக்கு இடையே உள்ள விஷயங்களைத் தீர்த்துக் கொள்வதில் சிறந்த வழியை முடிவு செய்வது உங்களது மற்றும் உங்கள் வாழ்க்கைத் துணையைப் பொறுத்தது ஆகும். உங்களுக்குச் சிறந்தது எது என்று நீங்கள் முடிவு செய்வதில் உதவிட ஒரு வழக்கறிஞர், மத்தியஸ்தர் அல்லது சமரச நீதிபதி உதவலாம்.

***Q*** ***எங்களது பிரிவு ஒப்பந்தத்தை உருவாக்கும் பொழுது என் மனைவி அவளது வருமானம் பற்றிய உண்மையைச் சொல்ல வில்லை என்று தற்பொழுது தான் கண்டு பிடித்தேன். அவள் கூறியதைப் போல் இரு மடங்கு சம்பாதிக்கிறாள் எனத் தெரிகிறது. தற்பொழுது இதைத் தெரிந்து கொண்டதும், அவளுக்கு மிகவும் மிகையாக நான் ஆதரவுப் பணம் தந்து வருகிறேன் என்று நான் நினைக்கிறேன். நான் என்ன செய்யலாம்?***

***A*** உங்கள் பிரிவு ஒப்பந்தத்தை மாற்றக் கோரி ஒரு நீதிபதியைக் கேட்க நீங்கள் நீதிமன்றம் செல்வதற்ககான சூழ்நிலைகளில் இது ஒன்றாகும். ஒரு தம்பதியினர் ஒத்துக் கொண்ட ஒரு பிரிவு ஒப்பந்தத்தை வழக்கமாக ஒரு நீதிபதி மாற்ற மாட்டார். இருப்பினும், ஒரு நபர் நாணயம் இல்லாதவராகவும் மற்றும் அந்த நபர் ஒப்பந்தம் செய்த பொழுது தனது வருமானம், சொத்து அல்லது கடன்கள் பற்றிய துல்லியமான தகவல்களைத் தரவில்லை என்றும் ஒரு நீதிபதி கண்டால் அவர் அல்லது அவள் அந்த ஒப்பந்தத்தை மாற்றலாம்.

### பொதுவான சட்ட தம்பதிகள்

**Q** ***திருமணம் செய்து கொள்ளாமல் 11 வருடங்களாக நாங்கள் சேர்ந்து வசித்து வருகிறோம் மற்றும் எங்களுக்கு ஒரு குழந்தை உள்ளது. நாங்கள் சேர்ந்து வாங்கிய ஒரு வீடு மற்றும் ஒரு கார் மற்றும் நிறைய பர்னிச்சர்கள் உள்ளன. எங்களுக்கிடையே சமூக உறவு இல்லை மற்றும் பிரிவது பற்றி நாங்கள் பேசி வருகிறோம். ஒரு பிரிவு ஒப்பந்தத்தை நாங்கள் எழுதலாமா?***

**A** ஆம். பொது சட்ட தம்பதிகள், திருமணமான தம்பதிகளைப் போன்றே பிரிவு ஒப்பந்தங்களை எழுதவும் கையொப்பமிடவும் செய்யலாம். உங்களது ஒப்பந்தத்தில் நீங்கள் இருவரும் விரும்புவது எதையும் சேர்க்கலாம். ஒப்பந்தத்தைக் கையொப்பமிடு முன்பாக நீங்கள் ஒவ்வொருவரும் வேறுவேறு வழக்கறிஞர்களைப் பார்ப்பது முக்கியமாகும்.

# மத்தியஸ்தர் ஒருவரைப் பார்ப்பது

**மத்தியஸ்தர்கள்** பொதுவாக சமூகப் பணியாளர்கள், வழக்கறிஞர்கள், மனோதத்துவ நிபுணர்கள், அல்லது பிற தொழில்முறையாளர்கள் ஆவார்கள். இந்த தொழில் முறையாளர்கள் குடும்ப மத்தியஸ்தர்களாகப் பணி புரியும் பொழுது, அவர்களின் பணி நீங்கள் விரும்புவது என்ன என்பதைக் கேட்டறிந்து, ஆதரவுப் பணம் தருவது, சொத்துப் பிரிவினை, குழந்தைகளின் பாதுகாப்புப் பொறுப்பு மற்றும் அவர்களை அணுகும் உரிமை, அல்லது பிற ஏதேனும் விஷயங்கள் பற்றி நீங்கள் ஒரு ஒப்பந்தத்தை எட்டுவதற்கு உதவுவதும் ஆகும்.

மத்தியஸ்தர்கள் யார் பக்கமும் சாய மாட்டார்கள் அல்லது உங்களுக்காக முடிவுகள் எடுக்க மாட்டார்கள். அவர்கள் உங்களுக்கு சட்ட அறிவுரை தர இயலாது.

நீங்கள் ஒரு மத்தியஸ்தரைப் பார்க்கும் முன்பாக உங்களுக்குச் சொந்தமான வழக்கறிஞருடன் நீங்கள் பேச வேண்டும். மத்தியஸ்தம் தொடங்கும் முன்பாக, சட்டம் மற்றும் உங்கள் உரிமைகள் மற்றும் கடமைப்பாடுகளை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ளத் தேவை உள்ளது. பொதுவாக உங்கள் வழக்கறிஞர் உங்களுடன் மத்தியஸ்தத்திற்கு வர மாட்டார்.

ஒவ்வொருவருக்கும் மத்தியஸ்தம் பொறுத்தமாக இருக்காது, குறிப்பாக வன்முறை அல்லது நிந்தனை இருந்து வந்துள்ள வழக்குகளில். உங்கள் வாழ்க்கைத் துணைக்கு நீங்கள் பயந்தால், அல்லது அச்சுறுத்தப்பட்டால் மத்தியஸ்தம் ஒரு நல்ல யோசனையாக இல்லாமல் இருக்கலாம்.

உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் விரும்புவதைக் கூற முடியும் மற்றும் உங்கள் யோசனைகளை நீங்கள் தற்காக்க முடியும் என்று நீங்கள் நம்பிக்கையாக உணர்ந்தால் மத்தியஸ்தத்திற்கு முயற்சிக்க நீங்கள் விரும்பலாம். ஒரு மூன்றாம் நபரின் உதவியுடன் விஷயங்களைத் தீர்வு செய்வதற்கு அது உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தரலாம்.

மத்தியஸ்தம் செல்லும் விதத்தைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியற்று உணர்ந்தால், எந்த நேரமும் நீங்கள் விலகலாம். உங்களுக்குப் பதிலாக ஒரு வழக்கறிஞர் பேச்சு வார்த்தை நடத்தலாம். ஒரு ஒப்பந்தத்தை எட்ட முடியாவிட்டால், நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று நீதிபதி ஒருவர் முடிவு செய்யச் செய்யலாம்.

நீங்கள் கையொப்பம் இடுவதற்கு முன்பாக மத்தியஸ்தத்தில் எட்டிய எந்த ஒப்பந்தத்தையும் ஒரு வழக்கறிஞரிடம் நீங்கள் காட்ட வேண்டும்.

***Q*** ***மத்தியஸ்தம் வேலை செய்யவில்லை என்றால், மத்தியஸ்தத்தின்போது கூறியதை மத்தியஸ்தர் நீதிமன்றத்தில் சொல்லலாமா?***

***A*** நீங்கள் தேர்வு செய்திருக்கும் மத்தியஸ்தம் "திறந்ததா" அல்லது "மூடியதா" என்பதை பொருத்தது. மத்தியஸ்தம் ஆரம்பிக்கும் முன்பாக இந்த விஷயத்தை நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் முடிவு செய்வீர்கள். திறந்த மத்தியஸ்தத்தில், மத்தியஸ்தர் மத்தியஸ்தத்தின் பொழுது என்ன நிகழ்ந்தது என்று ஒரு முழு அறிக்கை எழுதுகிறார் மற்றும் அவர் அல்லது அவள் முக்கியம் என நினைக்கும் எதையும் சேர்க்க முடியும், மற்றும் அந்த தகவல்கள் நீதிமன்றத்திற்குக் கிடைக்கிறது. மூடிய மத்தியஸ்தத்தில், மத்தியஸ்தரின் அறிக்கை எந்த ஒப்பந்தத்தை நீங்கள் எட்டினீர்கள் என்று மட்டுமே சொல்லும், அல்லது நீங்கள் ஒரு ஒப்பந்தத்தை எட்டவில்லை என்று இருக்கும்.

***Q*** ***மத்தியஸ்தர் ஒருவரை நான் எப்படிக் கண்டுபிடிப்பது? மத்தியஸ்தர் ஒருவர் சிறந்தவர் என்று எவ்வாறு நான் அறிவது?***

பக்கம் 58

***A*** மத்தியஸ்தர் பெயர்களை குடும்ப மத்தியஸ்தத்திற்கான ஒன்டேரியோ கூட்டமைப்பின் மூலமாக நீங்கள் பெறலாம். வழக்கறிஞர்களும் உள்ளூர் மத்தியஸ்தர்களின் பெயர்களைப் பெரும்பாலும் தெரிந்திருப்பார்கள். சில சமுதாயங்களில், சுப்பீரியர் கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸின் குடும்ப நீதிமன்றத்துடன் இணைந்துள்ள மத்தியஸ்த சேவைகள் உள்ளன. அவ்விடங்களில், குறுகிய விஷயங்களைத் தீர்வு செய்வதற்கு தலத்திலேயே கட்டணமின்றி இலவச சேவைகள் வழங்கப்படுகின்றன. அதிக சிக்கலான விஷயங்களுக்கு வெளியே வழங்கப்படும் மத்தியஸ்த சேவைகள் கிடைக்கின்றன. வெளியே வழங்கப்படும் சேவைகளுக்கு உங்கள் வருமானத்திற்கு ஏற்ப கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன.

தற்பொழுது மத்தியஸ்தர்களுக்கான தொழில்முறை உரிமம் வழங்கும் கூட்டமைப்பு எதுவும் கிடையாது. ஒரு மத்தியஸ்தரது அனுபவம் மற்றும் பயிற்சி பற்றிக் கேட்பது உங்களைப் பொறுத்தது ஆகும். உங்களுக்குத் திருப்தி இல்லா விட்டால், அல்லது வசதியாக நீங்கள் உணரா விட்டால், மற்றொரு மத்தியஸ்தரைப் பாருங்கள்.

**Q** ***மத்தியஸ்தம் செலவு மிக்கதா?***

**A** மத்தியஸ்தத்தின் செலவு மாறுபடுகிறது. சில சமுதாயக் குழுக்கள் உங்கள் வருமானத்திற்கு ஏற்ப ஒரு கட்டணத்திற்கு மத்தியஸ்த சேவைகளைத் தருகின்றன. தனிப்பட்ட மத்தியஸ்தர்கள் தங்களுக்குள் வர்த்தகரீதியில் உள்ளனர் மற்றும் அவர்களது கட்டணம் மிகவும் மாறுபடுகின்றன.

## சமரச நீதிபதி ஒருவரைப் பார்ப்பது

சமரச நீதிபதிகள் வழக்கமாக, தங்களது நிலையில் தங்களுக்குப் பொருத்தமான வெளிப்பாட்டை ஏற்க முடியாத மக்களுக்கு பாரபட்சமற்ற முடிவெடுப்பவர்களாகச் செயல்படும் வழக்கறிஞர்கள், குழந்தை மனோதத்துவ நிபுணர்கள் அல்லது முன்னாள் நீதிபதிகள் ஆவார்கள். மத்தியஸ்தர்களைப் போலல்லாமல், சமரச நீதிபதிகளுக்கு, தம்பதிகள் நடுவண் நடைமுறையை ஏற்றால் அதைப் பிணைக்கும் முடிவுகளைச் செய்திட அதிகாரம் உண்டு. சில விதிவிலக்குகளைத் தவிர்த்து, நடுவரின் முடிவே இறுதியானது மற்றும் இரு தரப்பினரும் கண்டிப்பாக அதைப் பின்பற்ற வேண்டும்.

வழக்கறிஞர்கள் மக்களை ஒரு நடுவரிடம் பரிந்துரைக்கலாம் ஏனென்றால் ஒன்று அல்லது மேற்பட்ட பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வை அவர்களால் பேசி முடிக்க முடிந்திருக்காது. உதாரணமாக, உங்கள் வாழ்க்கைத் துணைக்கு ஆதரவுப் பணம் தருவதற்கு நீங்கள் சம்மதித்திருப்பீர்கள், ஆனால் எவ்வளவு மற்றும் எவ்வளவு காலம் என்று இருக்காது. நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் சம்மதித்தால், உங்களுக்காக முடிவெடுக்க ஒரு நடுவரை நீங்கள் கேட்கலாம்.

ஒரு நடுவருக்கான கட்டணம் பொதுவாக உங்களிடமும் மற்றும் பிற நபரிடமும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஒரு நடுவரைப் பார்ப்பதற்கு முன்பாக உங்களுக்குச் சொந்தமான வழக்கறிஞருடன் நீங்கள் ஒவ்வொருவரும் பேச வேண்டும்.

குடும்ப சட்ட வழக்குகளில் நடுவண் முறை மிகவும் சாதாரணமாகி வருகிறது, எனவே நடுவண் முறை நியாயமாக இருப்பதை உறுதி செய்ய இந்த வழக்குகளை நடத்தும் சமரச நீதிபதிகளுக்குப் புதிய விதிகளும் புதிய நடைமுறைகளும் முன் வைக்கப்படுகின்றன. இந்த புதிய விதிகள் அமலில் உள்ளதா என்று நீங்கள் சோதிக்க வேண்டும், ஏனென்றால் இச்சிறு புத்தகம் பிரசுரம் ஆகும் பொழுது இன்னமும் அவை சட்டமாக்கப்படவில்லை.

இந்த மாற்றங்கள் அமலுக்கு வரும் பொழுது, சமரச நீதிபதிகள் தங்கள் முடிவுகள் திறம்பட இருப்பதற்கு கனடாவின் சட்டங்களின் கீழ் முடிவுகளை எடுக்க வேண்டும். நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் பிரச்சனைகள் எழுந்த பின்னரே நடுவண் முறைக்கு சம்மதிக்க வேண்டும், ஒரு திருமண ஒப்பந்தம் அல்லது சேர்ந்து வசிக்கும் ஒப்பந்தத்தில் பல வருடங்களுக்கு முன்னதாகவே குறிக்கக்கூடாது. அதே போல் நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் உங்களுக்குச் சொந்தமான வழக்கறிஞரிடம், நடுவண் முறையை நீங்கள் தொடங்கும் முன்பாக தனித்தனியாக அறிவுரை பெற வேண்டும். சமரச நீதிபதிகளுக்கான புதிய விதிகள், அவர்களுக்கு பயிற்சி இருப்பதையும்,

அவர்கள் குடும்ப வன்முறையைப் புரிந்து கொள்வதையும், மற்றும் அவர்கள் தங்களது நடுவண் பதிவுகளை வைத்திருப்பதையும் உறுதி செய்யும்.

## வழக்கறிஞர் ஒருவரைத் தேர்வு செய்வது

உங்கள் குடும்ப சட்டப் பிரச்சனைகளைத் தீர்வு செய்ய உதவுவதற்கு ஒரு வழக்கறிஞரை நீங்கள் தேடினால், குடும்ப சட்டப் பணி புரிவதில் அனுபவம் உள்ள யாரையேனும் பாருங்கள். ஒரு நண்பர் அல்லது ஒரு உறவினர் மூலமாக ஒரு வழக்கறிஞரின் பெயரை நீங்கள் பெற இயலும். வழக்கறிஞர் பரிந்துரை சேவையை நீங்கள் அழைத்தால் வழக்கறிஞர் ஒருவரது பெயரைப் பெறலாம். அவர் இலவசமாக ஒரு அரை மணி நேர அறிவுரை அளிப்பார். உங்கள் வருமானம் சிறிது என்றால், அல்லது சமூக உதவியில் நீங்கள் இருக்கிறீர்கள் என்றால், சட்ட உதவிக்கு நீங்கள் தகுதி பெறலாம். சட்ட உதவி உங்களது சட்டச் செலவுகள் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் அளித்து உதவலாம். உங்கள் சமுதாயத்தில் சட்ட உதவி ஒன்டேரியோ அலுவலகத்தின் எண் தொலைபேசி டைரக்டரியில் உள்ளது. சட்ட உதவிக்கு நீங்கள் விண்ணப்பித்தால், உங்கள் வருமானம், கடன்கள் மற்றும் சொத்துகள் இவற்றுக்கு சான்று வழங்கிட வேண்டும். நீங்கள் பணி புரிந்தால், உங்கள் வழக்கறிஞரது செலவுகளைப் பகுதியாக அல்லது முழுவதுமாகத் திருப்பி அளிப்பதற்கு நீங்கள் சம்மதிக்க வேண்டியிருக்கலாம்.

**பக்கம் 58**

**பக்கம் 58**

உங்கள் வழக்கறிஞர் சட்டம் பற்றி எடுத்துரைக்கலாம் மற்றும் உங்களுக்கு உதவக்கூடிய சமுதாயத்தில் உள்ள சேவைகள் பற்றியும் உங்களுடன் பேசலாம்.

உங்கள் வழக்கறிஞருடன் நீங்கள் நடத்திய உரையாடல்கள் ரகசியமானவை ஆகும். உங்கள் அனுமதியில்லாமல் நீங்கள் என்ன கூறினீர்கள் என்று உங்கள் வழக்கறிஞர் பிறரிடம் கூற முடியாது.

உங்கள் வழக்கை உங்கள் வழக்கறிஞர் கையாளும் விதம் பற்றி நீங்கள் மகிழ்ச்சியற்று இருந்தால், அவ்வாறு கூறுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. உங்கள் வழக்கறிஞருடன் பேசித் தீருங்கள். உங்கள் வழக்கறிஞர் உங்களுக்காகப் பணி புரிகிறார்.

**Q** ***திருமணம் செய்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, பிரிந்திட நாங்கள் முடிவு செய்துள்ளோம். எங்களது பர்னிச்சர் மற்றும் எங்களது வீட்டுப் பொருட்களை எவ்வாறு பிரிப்பது என்று நாங்கள் பேசியிருக்கிறோம். எங்களுக்குக் குழந்தைகள் ஏதும் இல்லை. இருந்தாலும் ஒரு வழக்கறிஞரை நாங்கள் பார்க்கத் தேவை உள்ளதா?***

**A** ஆம். நீங்கள் ஒவ்வொருவரும் வேறு வேறான ஒரு வழக்கறிஞரைப் பார்க்க வேண்டும். தற்பொழுது அவசியம் எனத் தோன்றாது, ஆனால் பின்னர் பல பிரச்சனைகளில் இருந்து அது உங்களைக் காக்கலாம்.

உங்கள் சொந்த வழக்கறிஞர் உங்கள் நலன்களைப் பார்த்துக் கொள்ளலாம், நீங்கள் யோசித்திராத விஷயங்கள் பற்றி அவர் கூறலாம் (பென்ஷன் உரிமைகள் அல்லது வரிகள் போன்றவை) மற்றும் நீங்கள் எதற்கெல்லாம் ஒப்புதல் தருகிறீர்கள் என்று நீங்கள் புரிந்து கொள்வதை உறுதி செய்யலாம்.

**Q** ***என் கணவருக்கு ஒரு நல்ல வேலை இருக்கிறது மற்றும் நல்ல சம்பளம் பெறுகிறார். கடந்த 10 வருடங்களாக எங்களது குழந்தைகளைக் கவனித்துக் கொண்டு நான் வீட்டிலிருந்து வருகிறேன். ஒரு வழக்கறிஞருக்கான பணம் என்னிடம் இல்லை. நான் என்ன செய்வது?***

**A** உங்கள் சமுதாயத்தில் சட்ட உதவி அலுவலகத்தை நீங்கள் அழைக்க வேண்டும். ஒரு வழக்கறிஞருக்குப் பணம் தர இயலாமல் இருப்பதால் சட்ட உதவிக்கு நீங்கள் தகுதி பெறலாம். எதிர்காலத்தில் உங்கள் வாழ்க்கைத் துணையிடமிருந்து நீங்கள் பணம் அல்லது சொத்து பெறுவீர்கள் என்றாலும், உங்கள் வாழ்க்கைத் துணையிடமிருந்து பணம் பெற்றதும் சட்ட உதவியைத் திருப்பித் தரும் நிபந்தனையின் கீழ் நீங்கள் சட்ட உதவி பெறலாம்.

**Q** ***என் வாழ்க்கைத் துணை என்னை நிந்தனை செய்தார். நான் வெளியேறி விட வேண்டும் என எனக்குத் தெரியும், ஆனால் நான் செல்வதற்கு இடம் ஏதும் இல்லை மற்றும் ஒரு வழக்கறிஞருக்குத் தருவதற்கு என்னால் இயலாது. சட்ட அறிவுரையை நான் எவ்வாறு பெறுவது?***

**A** நீங்கள் நிந்தனை செய்யப்பட்டிருந்தால், அவசரகால சட்ட சேவைகளை சட்ட உதவி ஒன்டேரியோ மூலமாகப் பெறுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. வழக்கறிஞர் ஒருவருடன் இலவசமாக இரண்டு மணி நேரங்கள் நீங்கள் பேசலாம். இந்த இலவச சட்ட சேவையை எப்படிப் பெறுவது என்று உங்களுக்கு ஒரு பெண்களின் புகலிடம், ஒரு சட்ட உதவி அலுவலகம் அல்லது ஒரு சமுதாய சட்ட கிளினிக் கூறலாம்.

**பக்கங்கள்**
**58 & 59**

# நீதிமன்றத்திற்குச் செல்வது

நீங்களும் உங்கள் வாழ்க்கைத்துணையும் உங்களுக்கிடையே உள்ள பிரச்சனைகளை எவ்வாறு தீர்ப்பது என்பதை சம்மதிக்க முடியாவிட்டால், நீங்கள் நீதி மன்றத்திற்குச் சென்று நீதிபதி ஒருவரிடம் உங்களுக்காக முடிவு செய்யக் கேட்கலாம்.

சில நேரங்களில் ஒரு விஷயத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும் நீங்கள் சம்மதிக்கலாம், குழந்தைகளின் பாதுகாப்புப் பொறுப்பு அல்லது குடும்ப இல்லத்திற்கு என்ன நேரும் என்பது போன்றது. நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று அந்த ஒரு விஷயத்தை நீதிமன்றம் முடிவு செய்யக் கேட்கலாம்.

குழந்தைகள் பற்றியும் தர வேண்டிய ஆதரவு பற்றியும் பல முடிவுகளை விரைவாக எடுக்க வேண்டியிருக்கலாம். உடனடியாக செய்ய வேண்டியது பற்றி நீங்கள் சம்மதிக்க முடியாவிட்டால், ஒரு தற்காலிக உத்தரவு கேட்டு நீதிமன்றத்திற்கு நீங்கள் செல்லலாம். இந்த உத்தரவு குழந்தைகளின் பாதுகாப்புப் பொறுப்பு, மற்றும் குழந்தைகளைப் பார்க்க அனுமதி, குடும்ப இல்லத்தில் யார் தங்கியிருக்கலாம், எவ்வளவு ஆதரவுப் பணம் தரப்பட வேண்டும் என்ற விஷயங்களைப் பற்றி இருக்கலாம்.

நீதிமன்றம் மாறுபாடாக உத்தரவிட்டால் தவிர, தற்காலிக உத்தரவு, உங்கள் வழக்கை முழுமையாக நீதிமன்றம் கேட்பதற்கு நேரம் கிடைக்கும் வரை அமலில் இருக்கும். அதன் பிறகு நீதிமன்றம் ஒரு இறுதி முடிவை எடுக்கும்.

பெரும்பாலான வழக்குகளில், நீதிமன்றம் ஒரு கலந்தாய்வுக் கூட்டம் அல்லது ஒரு உடன்படிக்கை மாநாட்டைத் திட்டமிடும். இந்த மாநாடுகள் உங்களுக்கு மற்றும் உங்கள் வாழ்க்கைத் துணை மற்றும்/அல்லது உங்களுக்குப் பிரதிநிதியாக அனுப்பினால் உங்கள் வழக்கறிஞர்கள், நீதிபதி ஒருவரைச் சந்தித்து அவருடன் உங்கள் வழக்கில் உள்ள விஷயங்களை விவாதிப்பதற்கு வாய்ப்புகளை வழங்குகின்றன. அந்த நீதிபதி, நீங்கள் ஏற்கனவே ஒரு மத்தியஸ்தரைப் பார்க்கவில்லை என்றால் பார்க்கும்படி பரிந்துரை செய்யலாம். சில சமயங்களில், நீதிபதி, உங்கள் வழக்கின் ஒரு விசாரணையில் ஒரு நீதிபதி முடிவு செய்யக்கூடியது பற்றி அவர் அல்லது அவளது கருத்தைக் கூறலாம். நீதிபதியின் கருத்து உங்கள் வழக்கின் பிரச்சனைகளை முடிவு செய்திடாது. இருப்பினும், அது உங்கள் வாழ்க்கைத் துணையுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வருவதற்கு உங்களுக்கு உதவிடலாம். ஒவ்வொன்றையும் நீங்கள் சம்மதிக்கா விட்டாலும், சில விஷயங்களில் நீங்கள் சம்மதிக்க இயலும்.

**Q** ***எங்கள் குழந்தைகளின் பாதுகாப்புப் பொறுப்பு பற்றி நாங்கள் சம்மதிக்க முடியவில்லை. நாங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லும் பொழுது, குழந்தைகளும் செல்ல வேண்டுமா?***

**A** நீதிபதி குழந்தைகளின் தேவைகள் மற்றும் உங்கள் ஒவ்வொருவருடனும் அவர்களது உறவுமுறை பற்றிய தகவல்களை அறிய விரும்புவார். நீதிபதிகள் பொதுவாக இவ்வகை வழக்குகளில் குழந்தைகள் சாட்சியம் அளிப்பதைத் தவிர்க்கின்றனர். மேலும் அநேகமாக, நீதிபதி ஒரு மதிப்பீட்டைக் கேட்பார்.

ஒரு மதிப்பீடு என்பது ஒரு சமூகப் பணியாளர், உளவியல் வல்லுநர், மனநோய் மருத்துவர் போன்ற ஒரு நபர் உங்கள் குடும்ப சூழ்நிலை பற்றிச் செய்யும் விபரமான ஆய்வு ஆகும். மதிப்பீடு செய்யும் நபர் வழக்கமாக குடும்பத்து ஒவ்வொரு உறுப்பினரையும் மற்றும் சில நேரங்களில் பிற மக்களையும் சந்திப்பார். பின்னர் அவர்/அல்லது அவள் நீதிமன்றத்திற்கு ஒரு அறிக்கையை எழுதுவார், அதில் பாதுகாப்பு பொறுப்பு மற்றும் அல்லது குழந்தைகளைப் பார்க்கும் உரிமை பற்றிய விஷயங்களில் பரிந்துரைகள் இருக்கும். பெரும்பாலான வழக்குகளில், மதிப்பீட்டிற்கான செலவுகளை நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் ஏற்க வேண்டும்.

சில வழக்குகளில் நீதிபதிகள் குழந்தைகளின் வழக்கறிஞரை ஒரு ஆய்வை நடத்தி பரிந்துரைகளுடன் நீதிமன்றத்திற்கு அறிக்கை தரும்படி கேட்கலாம். குழந்தைகளின் வழக்கறிஞர் ஒரு கிளினிக்கல் ஆய்வாளரை ஆய்வு நடத்துவதற்கு நியமனம் செய்யலாம். அந்த கிளினிக்கல் ஆய்வாளர் குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் பிற மக்களைச் சந்திப்பார்கள்.

**பக்கம் 53**

நீதிமன்ற நடைமுறையின் பொழுது குழந்தைகளுக்குச் சொந்தமான வழக்கறிஞர் இருந்தால் நலன் விளையும் என்று நீதிமன்றம் உணர்ந்தால், குழந்தைகளின் வழக்கறிஞரை நீதிமன்றம், நீதிமன்றத்தில் நலன்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்கு ஒரு வழக்கறிஞரை அளிக்கும்படிக் கேட்கலாம்.

***Q*** ***நீதிமன்றம் செல்வதற்கு ஒரு வழக்கறிஞர் எனக்குத் தேவையா?***

***A*** இல்லை. ஒரு வழக்கறிஞர் இல்லாமல் நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லலாம். அப்பொழுது பொருத்தமான நீதிமன்ற ஆவணங்களை முழுமையாக நிரப்பி கோப்புகள் ஆக்கம் செய்யும் பொறுப்பு உங்களுடையதாக இருக்கும். இந்த படிவங்களை நிரப்புவதற்கான சில தகவல்களை நீங்கள் நீதிமன்றத்தின் குடும்ப சட்ட தகவல் மையத்தில் பெறலாம். நடைமுறைகள் பற்றி உங்களுக்கு உதவக்கூடிய வழிகாட்டிகள் ஏதும் உள்ளனவா என்று நீங்கள் நீதிமன்ற ஊழியரிடமும் கேட்கலாம். உங்களுக்காக நீங்களே நீதிபதி முன்னிலையில் பேசுவீர்கள்.

சில நீதிமன்றங்களில் டூட்டி கவுன்சல் என்று அழைக்கப்படும் வழக்கறிஞர்கள் உள்ளனர். குறைந்த வருவாய் உள்ள மக்களுக்கு செலவில்லாமல் இந்த வழக்கறிஞர்களை லீகல் எய்ட் (சட்ட உதவி)அளிக்கிறது. அவர்களின் பணி மக்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதும் நீதிமன்றத்திற்கு உதவுவதும் ஆகும். சட்டம் பற்றிய சில தகவல்களை அவர்களால் தர இயலும். சில வழக்குகளில், டூட்டி கவுன்சிலும் உங்களின் சார்பாக நீதிமன்றத்திடம் பேசலாம் மற்றும் ஒரு உடன்படிக்கைக்குப் பேச்சு வார்த்தை நடத்த உதவலாம்.

## விவாகரத்து பெறுவது

நீங்கள் பிரியும் பொழுது பிரிவு ஒப்பந்தங்கள் மற்றும் நீதிமன்ற ஆணைகள் குடும்ப விஷயங்களைத் தீர்க்கலாம் ஆனால் அவை சட்டப்படி உங்கள் திருமணத்தை முறிப்பதில்லை. இதைச் செய்வதற்கு ஒரே வழி விவாகரத்து ஒன்று வாங்குவதுதான் வழி. ஒரு நீதிமன்றம் மட்டுமே உங்களுக்கு ஒரு விவாகரத்தை வழங்கக்கூடும்.

உங்கள் திருமணம் முறிந்து விட்டது என்று நிரூபித்து நீங்கள் விவாகரத்து ஒன்று வாங்கலாம். ஒரு வருடமாக நீங்கள் பிரிந்து இருக்கிறீர்கள், அல்லது உங்கள் கணவர் அல்லது மனைவிக்கு மற்றொருவருடன் பாலியல் உறவு இருந்து வந்துள்ளது, அல்லது உங்கள் கணவர் அல்லது மனைவி உடல்ரீதியாக அல்லது மனோரீதியாகக் கொடுமைக்காரராக இருந்து வந்திருக்கிறார் என்று காட்டி நீங்கள் இதை நிரூபிக்கலாம்.

உங்கள் விவாகரத்தின் நிபந்தனைகளை நீங்கள் ஏற்க முடியாவிட்டால், நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று நீதிமன்றம் அவற்றை முடிவு செய்ய விட்டு விடலாம். நீங்கள் ஏற்க முடிந்தால், உங்கள் சம்மதத்தை நீதிமன்றத்தில் கோப்பு ஆக்கம் செய்யலாம். அந்த மாதிரி சமயத்தில், சாத்தியமான அளவில் ஒரு நீதிபதியை நீங்கள் பார்க்கத் தேவையிராது. உங்கள் விவாகரத்து இறுதியானதும், நீங்கள் மறுபடியும் திருமணம் புரியலாம்.

**Q** ***ஐந்து வருடங்களாக நாங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் மற்றும் எங்களது பிரிவு ஒப்பந்தம் செயல்படுவது பற்றி நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். தற்பொழுது விவாகரத்து ஒன்று வாங்குவதற்கு நான் விரும்புகிறேன். காகிதப்பணியை நானே செய்யலாமா?***

**A** ஆம். இருப்பினும், விவாகரத்து ஒன்று பெறுவதன் எல்லா விளைவுகளையும் நீங்கள் புரிந்து கொள்வதை உறுதி செய்ய முதலில் ஒரு வழக்கறிஞருடன் பேசுவது ஒரு நல்ல யோசனை ஆகும். உங்கள் வழக்கறிஞர் ஆதரவு, வரி, பென்ஷன் மற்றும் பிற பிரச்சனைகள் மீது அறிவுரை தரக்கூடும்.

# II. உங்கள் சட்டரீதியான உரிமைகள் மற்றும் கடமைப்பாடுகள்

## குடும்ப இல்லத்தில் தங்கியிருப்பது

குடும்ப இல்லம் என்பது ஒரு சிறப்பு இடமாகும். இது நீங்கள் வசிக்கும் இடம் மற்றும் அங்கு உங்கள் குழந்தைகள் மிகவும் வசதியாக உணர்கிறார்கள். உங்கள் வீடு உங்களுக்குச் சொந்தமாக இருந்தால், அதுவே உங்களுக்குச் சொந்தமானவற்றில் மிகவும் விலை மிகுந்ததும் மதிப்பு மிக்கதும் ஆக இருக்கலாம்.

உங்களுக்குத் திருமணம் ஆகியிருந்தால், ஒரு நீதிபதி உங்களில் ஒருவர் கண்டிப்பாக வெளியேற வேண்டும் என்று முடிவு செய்தால் தவிர உங்கள் இல்லத்தில் தங்கியிருப்பதற்கு உங்கள் இருவருக்குமே ஒரு சம உரிமை உள்ளது.

உங்கள் இல்லத்தில் தங்குவதற்கு உங்கள் இருவருக்குமே ஒரு உரிமை உள்ளதால், உங்களில் எவருமே அதை மற்றவரின் அனுமதி இல்லாமல் உள்வாடகைக்கு விடக்கூடாது, வாடகைக்கு விடக்கூடாது, விற்கக்கூடாது அல்லது அடமானம் வைக்கக்கூடாது. உங்கள் லீஸ் உங்களில் ஒருவர் பெயரில் மட்டுமே உள்ளது அல்லது உங்களில் ஒருவர் மட்டுமே வீட்டிற்குச் சொந்தக்காரர் என்றாலும் இதுவே உண்மையாகும்.

நீங்கள் பிரியும் பொழுது, குடும்ப இல்லத்தில் தங்குவதற்கு நீங்கள் இருவருமே விரும்பலாம். குடும்ப இல்லத்தில் யார் தங்குவது என்று நீங்கள் ஒரு சம்மதத்திற்கு வர முடியாத பொழுது முடிவு செய்ய உங்களுக்கு உதவிட வழக்கறிஞர்கள், ஒரு மத்தியஸ்தர் அல்லது ஒரு நடுவரைப் பயன்படுத்தலாம், அல்லது யார் அதில் தங்குவது என்று நீதிமன்றம் முடிவுசெய்ய நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருக்கலாம்.

பிரிவிற்குப் பிறகு, உங்களில் எவருமே உங்கள் இல்லத்தில் தங்கியிருப்பதற்கு வசதி இருக்காமல் போகலாம்.

உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், குழந்தைகளின் பாதுகாப்புப் பொறுப்பு உள்ள நபர்தான் மிகப் பெரும்பாலும் குடும்ப இல்லத்தில் குழந்தைகளுடன் வசிக்க வேண்டும். ஏற்கெனவே அறிந்த இடம் மற்றும் அண்டைவீட்டுப் புறத்தில் இருப்பது தம் குடும்பத்தின் புதிய நிலைக்கு ஒத்துப்போக குழந்தைகளுக்கு உதவுகிறது.

## பொதுவான சட்ட தம்பதிகள்

**Q** ***நாங்கள் சேர்ந்து வசிக்கும் முன்பாக, எனக்கு ஒரு வீடு சொந்தமாக இருந்தது. அந்த வீடு இன்னமும் என் பெயரிலேயே உள்ளது மற்றும் இன்னமும் நான் அடமானத்தைச் செலுத்துகிறேன். மேரி பழுதுபார்ப்புகள் மற்றும் பராமரிப்புக் கட்டணம் செலுத்துகிறாள். நாங்கள் பிரிந்து விட்டால், அவளுக்கு அந்த வீட்டில் தங்கியிருப்பதற்கு ஒரு உரிமை உள்ளதா ?***

**A** இருக்கலாம். நீதிபதி ஒருவர் மேரிக்கு அல்லது உங்கள் குழந்தைகளுக்கான ஆதரவுப்பணம் தருவதற்கு ஆணையிட்டால், அந்த நீதிபதி மேரி அந்த வீட்டில் தங்கலாம் என்றும் முடிவு செய்யலாம். யார் வீட்டின் சொந்தக்காரர் என்பது முக்கியமில்லை. மேலும் மேரி வீட்டைப் பழுதுபார்த்தது மற்றும் பராமரிப்புக்குத் தான் செலவழித்த பணத்தைத் திருப்பித் தரும்படியும் கேட்கலாம். நீங்களும் மேரியும் திருமணம் செய்தால், உங்கள் உரிமைகள் மாறுகின்றன என்பதை ஞாபகம் வைக்கவும்.

## உங்கள் குழந்தைகளைக் கவனிப்பது

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பொறுப்பானவர்கள். ஒரு குடும்பம் ஒன்றாக வசிக்கும் பொழுது, இரண்டு பங்குதாரர்களுமே குழந்தைகளின் வளர்ப்பு, கல்வி மற்றும் அன்றாட வாழ்க்கை பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்கின்றனர். அப்படிப்பட்ட பெற்றோர் திருமணம் புரிந்தவர்களாயினும் இல்லையெனிலும் இது பொருந்துகிறது.

நீங்கள் பிரியும் பொழுது, உங்கள் குழந்தைகளின் கவனிப்பிற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் வசிப்பதற்கு ஒரு இடம், உணவு மற்றும் உடை தேவையாகும். மிகவும் முக்கியமாக, அவர்களின் பெற்றோர் ஒன்றாய் வசிக்கா விட்டாலும் அவர்கள் அன்பு காட்டப்படுவதாகவும் ஆதரிக்கப்படுவதாகவும் உணரத் தேவை உள்ளது.

நீங்கள் பிரிந்ததும் குழந்தைகளை எவ்வாறு கவனிக்கப் போகிறீர்கள் என்று நீங்கள் இருவரும் ஒன்றாகத் திட்டமிடுவதே நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த விஷயமாகும்.

நீங்கள் ஒன்றாக விஷயங்களில் பணி புரிந்தால், உங்கள் ஏற்பாடுகளை ஒரு பெற்றோர் திட்டத்தில் எழுதி வைக்கலாம். ஒரு பெற்றோர் திட்டம் ஒவ்வொரு பெற்றோரும் எப்பொழுது குழந்தையுடன் நேரம் செலவழிப்பது மற்றும் அவர்களைப் பற்றிய பெரும்பான்மை முடிவுகளை எடுப்பது போன்றவையைக் கொண்டிருக்கலாம். ஒரு பெற்றோர் திட்டம் என்பது உங்கள் இருவரிடையே ஒரு முறைசாரா ஏற்பாடாக இருக்கலாம், அல்லது உங்கள் பிரிவு ஒப்பந்தத்தின் பகுதியாக அல்லது நீதிமன்ற ஆணையாக இருக்கலாம். அந்த ஏற்பாடுகள் முறைசாராதவையாக இருந்தால் அமல்படுத்துவது சிரமமாக இருக்கலாம்.

குழந்தைகளின் பாதுகாப்புப் பொறுப்பு பற்றி நீங்கள் சம்மதிக்க முடியா விட்டால், ஒரு நீதிபதி முடிவு செய்வதற்கு நீங்கள் நீதிமன்றத்திற்குப் போகலாம். அந்த நீதிபதி ஒரு கிளினிக்கல் ஆய்வாளர், சமூகப் பணியாளர், உளவியல் வல்லுநர் அல்லது மனநோய் மருத்துவர் மூலம் ஒரு மதிப்பீட்டைக் கேட்கலாம். அந்த நபர் உங்கள் ஒவ்வொருவருடனும், குழந்தைகளுடனும் மற்றும் சில நேரங்களில் மற்றவர்களுடனும் பேசுவார். அவர் அல்லது அவள், குழந்தைகள் எங்கு வசிக்க வேண்டும் மற்றும் பாதுகாப்பு பொறுப்பு இல்லாத பெற்றோரை அவர்கள் எப்பொழுது பார்க்க வேண்டும் என்று பரிந்துரைத்து நீதிமன்றத்திற்கு ஒரு அறிக்கை எழுதுவார்.

அந்த நீதிபதி பாதுகாப்புப் பொறுப்பு பற்றி ஒரு முடிவு எடுக்கையில் அந்த குழந்தைகளின் மிகச் சிறந்த நலன்கள் பற்றியே நினைக்க வேண்டும். உங்கள் வாழ்க்கைத் துணை உங்களிடம் அல்லது எந்தக் குழந்தையிடம் எப்பொழுதாவது வன்முறையாளராக அல்லது நிந்திப்பவராக இருந்திருக்கிறாரா என்பதை நீதிபதியிடம் தெரிவிக்க வேண்டும் ஏனெனில் நீதிபதி இந்த விஷயத்தைக் கவனிக்கும்படி சட்டம் கேட்கிறது. நீதிபதி நீதிமன்றத்தில் கேட்ட எல்லா தகவல்களையும் பார்ப்பார் மற்றும் தற்பொழுது அந்த குழந்தைகள் எங்கு வசிக்கின்றன என்பதையும் கருத்தில் கொள்வார். அவர்கள் ஒரு பெற்றோரிடமே கொஞ்ச காலத்திற்கு வசித்து வந்திருக்கின்றனர் மற்றும் நல்லபடியாகவே நடந்து கொண்டிருக்கின்றன என்றால், நீதிபதி அதை மாற்றுவதற்கு விரும்பாமல் இருக்கலாம்.

**பாதுகாப்புப் பொறுப்பு :** உங்களது பிரிவு ஒப்பந்தம் அல்லது ஒரு நீதிமன்ற ஆணை உங்கள் குழந்தைகளின் பாதுகாப்புப் பொறுப்பை உங்களுக்கு அளித்தால், குழந்தைகள் உங்களுடன் வசிப்பார்கள். அவர்களின் கவனிப்பு, அவர்களின் கல்வி, அவர்களது மத சம்பந்தமான அறிவுரை மற்றும் அவர்களின் நல்வாழ்வு பற்றிய முடிவுகளை எடுப்பதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது-அந்த ஒப்பந்தம் அல்லது நீதிமன்ற ஆணை மாறாகக் கூறினால் தவிர.

**கூட்டுப் பாதுகாப்புப் பொறுப்பு :** தங்கள் குழந்தைகளின் கூட்டுப் பாதுகாப்புப் பொறுப்பு உள்ள பெற்றோர்கள் அவர்களின் கவனிப்பு பற்றிய முடிவுகளை எடுப்பதற்கு உரிமையைப் பகிர்ந்து கொள்கின்றனர். குழந்தைகள் ஒரு பெற்றோருடன் பாதி நேரத்தைச் செலவழிக்கலாம் மற்றும் பாதி நேரத்தை மற்றொருவருடனும் செலவழிக்கலாம் அல்லது மற்றொருவரைக் காட்டிலும் கூடுதலாக ஒரு பெற்றோருடன் நேரத்தைக் கழிக்கலாம். இரண்டு பெற்றோர்களுமே குழந்தைகள் பற்றிய முடிவுகள் எடுப்பதில் ஈடுபடுகின்றனர். கூட்டுப் பாதுகாப்புப் பொறுப்பிற்கு, பெற்றோர்கள் ஒன்றாக வசிக்கா விட்டாலும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளக்கூடிய அளவிலும் ஒத்துழைக்கும் நிலையிலும் இருக்க வேண்டியுள்ளது.

**பார்க்க அனுமதி :** உங்கள் குழந்தையின் பாதுகாப்பு பொறுப்பு உங்களுக்கு இல்லையென்றால், குழந்தைகளின் சிறந்த நலன்களுக்கு உகந்தது இல்லை என்று நீதிமன்றம் முடிவு செய்தால் தவிர அவர்களுடன் நேரம் கழிப்பதற்கு உங்களுக்கு ஒரு உரிமை உள்ளது. ஒரு பெற்றோர் திட்டம், பிரிவு ஒப்பந்தம் அல்லது நீதிமன்ற ஆணையில் குழந்தைகளைப் பார்ப்பதற்கான ஏற்பாடுகளை விபரமாக எழுதிக் கொள்ளலாம். அந்த திட்டம், ஒப்பந்தம் அல்லது ஆணை, உதாரணமாக குழந்தைகள் ஒவ்வொரு மறு வார இறுதியிலும் உங்களுடன் இருப்பார்கள் என்று கூறலாம்.

அல்லது, குழந்தைகளைப் பார்ப்பதற்கான உங்களது ஏற்பாடுகள் திறந்தே இருக்கலாம். மற்றொரு பெற்றோருடன் ஒரு மேலும் தளர்வான வழியில் ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வசதியாக அமைக்கலாம். இந்த வகையான சந்திக்கும் ஏற்பாட்டை அமல்படுத்துவது கடினமாகும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம், கல்வி மற்றும் பொதுவான நிலவரம் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு உங்களுக்கும் உரிமை உள்ளது. உங்கள் குழந்தைகளின் கூட்டுப் பாதுகாப்பு பொறுப்பு உங்களுக்கு உள்ளது அல்லது உங்களது பிரிவு ஒப்பந்தம் அல்லது நீதிமன்ற ஆணை, முடிவுகள் எடுப்பதில் உங்களுக்குப் பங்கு உண்டு என்று கூறினால் தவிர இந்த விஷயங்களில் முடிவெடுப்பதில் பங்கேற்கும் உரிமை உங்களுக்கு இல்லை.

நீங்கள் குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிப்பீர்கள் அல்லது பாதுகாப்புப் பொறுப்பு உள்ள பெற்றோருக்கு நீங்கள் தீங்கு விளைவிப்பீர்கள் அல்லது பாதுகாப்பு பொறுப்பு உள்ள பெற்றோரிடம் திரும்பவும் நீங்கள் குழந்தையை ஒப்படைக்க மாட்டீர்கள் என்று ஒரு பயம் இருந்தால் குழந்தைகளை நீங்கள் பார்ப்பதற்கு நீதிமன்றம் அனுமதி மறுக்கலாம்,

**மேற்பார்வை செய்யப்பட்ட பார்க்கும் அனுமதி:** குழந்தைகளின், மற்றும்/ அல்லது பெற்றோர் ஒருவரின் பாதுகாப்பிற்குக் கவலைகள் உள்ள பட்சத்தில், குழந்தைகளைப் பார்ப்பதற்கான வருகைகளைக் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்று பெற்றோர்களும் ஒத்துக் கொள்ளலாம், அல்லது நீதிமன்றம் கேட்டுக் கொள்ளலாம். இதன் பொருள் என்ன என்றால் உங்கள் குழந்தைகளை நீங்கள் பார்க்கப் போகும் பொழுது வேறு யாராவது ஒருவர் உடனிருக்க வேண்டும் என்பதாகும். சில நேரங்களில் ஒரு நண்பர் அல்லது உறவினர் வருகைகளை மேற்பார்வை செய்யலாம் என பெற்றோர்கள் சம்மதிக்கலாம். வருகைகளை மேற்பார்வை செய்வதற்கு பெற்றோர்கள் ஒரு சமூகப் பணியாளர் போன்ற ஒரு தொழில் முறையாளரைப் பணம் கொடுத்து பணயளிக்கலாம். ஒன்டேரியோவின் பல சமூகங்களில், அரசினால் நிதி அளிக்கப்பட்ட சூப்பர்வைஸ்டு அக்செஸ் மையங்கள், பயிற்சி பெற்ற தொழில்முறையாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களை ஊழியர்களாகக் கொண்டுள்ளன. சூப்பர்வைஸ்டு அக்செஸ் மையங்களின் ஊழியர்களுடன் உடன்பாட்டின்படி, குடும்பங்கள் கண்காணிப்பு வருகைகள் அல்லது கண்காணிப்பில் குழந்தைகளை விட்டு வருவது மற்றும் / அல்லது கூட்டி வருவது இவற்றிற்கு மையத்திற்கு வரலாம்.

**பக்கம் 59**

## பாதுகாப்புப் பொறுப்பு மற்றும் பார்க்க அனுமதி ஆணைகளை அமல்படுத்துவது

பாதுகாப்புப் பொறுப்பு அல்லது பார்க்க அனுமதிக்கான ஒரு நீதிமன்ற ஆணையைப் பணிந்து நடக்கா விட்டால், அந்த ஆணையை அமல்படுத்தச் சொல்லி நீங்கள் நீதிமன்றத்தைக் கேட்கலாம். அந்த நீதிமன்றம் பெற்றோர்களை குழந்தைகளுக்காகச் செய்யப்பட்ட பாதுகாப்பு பொறுப்பு மற்றும் பார்க்க அனுமதிக்கான ஏற்பாடுகளை மதிக்கும்படிச் செய்ய முயற்சிக்கும். நீதிமன்றம் அவ்விரு பெற்றோர்களையும் என்ன நிகழ்கிறது என்று விளக்கிட நீதிமன்றத்திற்கு வரச் சொல்லிக் கேட்கலாம். ஒரு நல்ல காரணம் இல்லாமல் பார்க்க அனுமதி நிகழவில்லை என்று நீதிபதி திருப்தி அடைந்தால், பாதுகாப்பு பொறுப்பு உள்ள பெற்றோருக்கு அபராதம் விதிக்கலாம் அல்லது அவர்களை சிறைக்குக்கூட அனுப்பலாம். பாதுகாப்பு பொறுப்பு மற்றும் பார்க்க அனுமதி ஏற்பாடுகளில் தீவிரமான பிரச்சனைகள் இல்லை என்றால், நீதிமன்றம் ஏற்பாடுகளை மாற்றலாம்.

ஒரு பிரிவு ஒப்பந்தத்தில் செய்துள்ள பாதுகாப்பு பொறுப்பு மற்றும் பார்க்க அனுமதி ஏற்பாடுகளை அமல்படுத்தச் சொல்லி நீதிமன்றத்தையும் நீங்கள் கேட்கலாம்.

**Q** ***எங்களது பிரிவு ஒப்பந்தம் என் மனைவிக்கு எங்கள் குழந்தைகளின் பாதுகாப்பு பொறுப்பும் எனக்கு பார்க்கும் உரிமையும் உள்ளது என்று கூறுகிறது. என் மனைவி குழந்தைகளை நன்கு கவனிக்கிறாள் என்று நான் நினைக்கவில்லை. என் குழந்தைகள் என்னுடன் வசித்தால் அவர்கள் நன்றாக இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். எங்களது பிரிவு ஒப்பந்தம் மாற்றப்படலாமா?***

**A** ஒரு வேளை இருக்கலாம். உங்கள் வாழ்க்கைத் துணையுடன் ஒரு புதிய பாதுகாப்பு பொறுப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள நீங்கள் முயற்சிக்கலாம். அது சாத்தியமில்லா விட்டால், உங்கள் குழந்தைகளின் பாதுகாப்பு பொறுப்பை உங்களுக்குத் தரும்படிக் கேட்க நீதிமன்றத்திற்கு நீங்கள் செல்லலாம். ஒரு மாற்றம் செய்வது குழந்தைகளின் மிகச் சிறந்த நலன்களுக்கு உகந்தது என்று நினைத்தால் நீதிமன்றம் பாதுகாப்பு பொறுப்பு மற்றும் பார்க்க அனுமதி ஏற்பாடுகளை தனியான ஒரு பிரிவு ஒப்பந்தத்தில் மாற்றலாம்.

**Q** ***என் வாழ்க்கைத் துணையும் நானும் கடந்த வருடம் பிரிந்த பொழுது, நான் அந்த அபார்ட்மெண்ட்டில் தங்கினேன். குழந்தைகள் என்னுடன் இருக்கிறார்கள் மற்றும் அவர்களின் மற்றொரு பெற்றோரை எப்பொழுதாவது பார்க்கின்றனர். எனக்கு என் குழந்தைகளின் சட்டப்படியான பாதுகாப்பு பொறுப்பு உள்ளதா?***

**A** உடனடியாக தற்பொழுது, உங்களுக்கு உண்மையான நடப்பிலுள்ள பாதுகாப்பு பொறுப்பு என்று அழைக்கப்படுவது உள்ளது. அதன் பொருள் என்ன என்றால், உண்மையில், உங்களுக்கு சட்டப்படியான பாதுகாப்பு பொறுப்பு உள்ளது போன்று உங்கள் குழந்தைகளின் பாதுகாப்பு பொறுப்பை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் மற்றும் அவர்களின் கவனிப்பு மற்றும் வளர்ப்பதில் முக்கிய முடிவுகள் எடுத்து வருகிறீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணை இந்த ஏற்பாட்டை ஏற்றுக் கொண்டிருக்கிறார். உங்கள் நிலையில் நீதிமன்றம் மாறுதல்கள் செய்வதற்கு மிகவும் வாய்ப்பில்லை.

இருப்பினும், உங்கள் பாதுகாப்புப் பொருப்பு உரிமைகளை தெளிவாக ஒரு நீதிமன்ற ஆணை அல்லது ஒப்பந்தத்தில் அமைக்காவிட்டால், குறிப்பாக நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்து வந்ததை மறுத்தீர்கள் என்றால் அவைகளை அமல்படுத்துவது கடினமாகிவிடும்.

நீங்கள் மற்றும் உங்கள் வாழ்க்கைத் துணை உங்களுக்கு பாதுகாப்புப் பொறுப்பு உள்ளது என்று சொல்லும் ஒரு பிரிவு ஒப்பந்தத்தைக் கையொப்பமிடும் பொழுது அல்லது ஒரு நீதிமன்றம் உங்களுக்கு அந்த உரிமை உள்ளது என்று சொல்லும் பொழுது உங்களுக்கு சட்டப்படியான பாதுகாப்புப் பொறுப்பு இருக்கும்.

**Q** *பெரும் வாக்குவாதங்களுக்குப் பிறகு மற்றும் நீதிமன்றத்தில் நிறைய நேரம் செலவழித்த பிறகு, எங்களது குழந்தைகளுக்கான பாதுகாப்புப் பொறுப்பிற்கான ஒரு நீதிமன்ற ஆணையை நான் பெற்றேன். அவர்களின் தந்தைக்கு பார்க்கும் உரிமை உள்ளது. அவரது குடும்பம் கனடாவிற்கு வெளியே வசிக்கிறது. அவர் என் குழந்தைகளை தனது குடும்ப இல்லத்திற்கு எடுத்துச் சென்று விடுவார் மற்றும் மறுபடியும் நான் அவர்களைப் பார்க்க மாட்டேன் என்று நான் அஞ்சுகிறேன். நான் என்ன செய்யலாம்?*

**A** உங்கள் வாழ்க்கைத் துணை அந்த குழந்தைகளை உங்களிடமிருந்து பறித்துச் சென்றால், அவர் ஒரு தீவிரமான குற்றத்தைச் செய்து வருகிறார். காவல் துறையினர் அவரைக் கைது செய்யலாம் மற்றும் குழந்தை கடத்தலுக்காகக் குற்றம் சாட்டலாம். குழந்தைகளுடன் அவர் கனடாவை விட்டு வெளியேறுவதைக் கடினமாக்க இப்பொழுது நீங்கள் சில காரியங்கள் செய்யலாம். பல நாடுகளில் இருந்து குழந்தைகளைத் திரும்பவும் இங்கு வரவழைக்க உதவிடப் பன்னாட்டுச் சட்டங்களும் உள்ளன. ஒரு வழக்கறிஞருடன் பேசுங்கள்.

**பக்கம் 54**

குழந்தைகள் நாட்டை விட்டு எடுத்துச் செல்லப்பட உள்ளார்கள் என்று நீங்கள் நினைத்தால், காவல்துறையை உடனே அழையுங்கள்.

# உங்கள் குழந்தைகளுக்கு நிதி ஆதரவு தருதல்

**பெற்**றோர் இருவருக்கும் தங்களது குழந்தைகளுக்கு நிதி ஆதரவு தருவதற்குப் பொறுப்பு உள்ளது. அவர்கள் சேர்ந்து வசிக்கும் பொழுது தங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள் மற்றும் அவர்கள் பிரிந்த பிறகு தொடர்ந்து பகிர்ந்து கொள்கிறார்கள். இந்த பொறுப்பு எல்லா பெற்றோருக்கும் பொருந்துகிறது, அவர்கள் திருமணம் ஆனவர்கள் ஆனாலும் சரி, சேர்ந்து வாழ்ந்தாலும் சரி அல்லது ஒன்றாய் ஒருபொழுதும் வசித்திராமல் இருந்தாலும் சரி இந்த பொறுப்பு பொருந்துகிறது.

குழந்தைகளின் பாதுகாப்பு பொறுப்பு உள்ள பெற்றோர் அவர்களைக் கவனித்துக் கொள்ளவும், அவர்களுக்கு உணவு மற்றும் உடைகள் வாங்கவும், வெளியே செல்வதற்கு மற்றும் செயல்பாடுகளுக்கும் பணம் தரவும், அன்றாடத் தேவைகளைக் கவனித்து வீட்டை நடத்திச் செல்ல வேண்டி உள்ளது,

குழந்தைகளின் பாதுகாப்பு பொறுப்பு இல்லாத பெற்றோர், குழந்தைகளின் பாதுகாப்பு பொறுப்பு உள்ள பெற்றோருக்கு குழந்தைகளின் கவனிப்பிற்காகப் பொதுவாக பணம் தர வேண்டும். இந்த பணம் குழந்தை ஆதரவு நிதி என அழைக்கப்படுகிறது.

ஒன்டேரியோவில் குழந்தை ஆதரவுத் தொகையின் அளவு *குழந்தை ஆதரவு வழிகாட்டிகளின்* கீழ் அமைக்கப்பட்டுள்ளது. *வழிகாட்டிகளின்* கீழ், குழந்தை ஆதரவு நிதிகள், பாதுகாப்பு பொறுப்பு இல்லாத பெற்றோரின் அல்லது யாருடன் குழந்தைகள் வழக்கமாக வசிக்கின்றவரின் வருமானம் மற்றும் ஆதரவு தர வேண்டிய குழந்தைகளின் எண்ணிக்கை அடிப்படையில் அமைக்கப்படுகின்றன.

சில வழக்குகளில், வழிகாட்டித் தொகையைக் காட்டிலும் அதிகமாக அல்லது குறைவாக நீதிமன்றம் ஒரு தொகையை ஆணையிடலாம்.

- உதாரணமாக, "விசேடச் செலவுகள்" உள்ள குழந்தைக்கு நீதிமன்றம் வழிகாட்டித் தொகையைக் காட்டிலும் கூடுதலாக வழங்கலாம். இவற்றில், உதாரணமாக குழந்தை கவனிப்புச் செலவுகள், தனியார் பள்ளியின் கற்பிக்கும் கட்டணம், பள்ளிக் கட்டணம் மற்றும் ஹாக்கிக்கான உபகரணம், அல்லது பல் சீரமைப்புக் கட்டணம் போன்றவை உள்ளடங்கும்.

- மிகவும் வரம்புக்கு உட்பட்ட சூழ்நிலைகளில், பணம் தரப்படும் பெற்றோருக்கு அதிக நிதி "தேவையற்ற கஷ்டத்தை" ஏற்படுத்தலாம் என்றால் நீதிமன்றம் வழிகாட்டித் தொகையைக் காட்டிலும் குறைவாகவும் வழங்கலாம். நீதிமன்றம் வழிகாட்டித் தொகையைக் காட்டிலும் குறைவாக வழங்குவது எனக் கருதுவதற்கு, குறைவாகக் கேட்கும் பெற்றோர் அந்த கஷ்டத்தை நிரூபிக்க வேண்டும் மற்றும் அவரது அல்லது அவளது வீட்டில் வாழ்க்கைத் தரம் குழந்தையின் வீட்டை விட வாழ்க்கைத் தரம் கீழாக உள்ளது என்று நிரூபிக்க வேண்டும்.

**Q** ***குழந்தை ஆதரவு வழிகாட்டிகள் எனக்குப் பொருந்துமா என்று எப்படி நான் அறிந்து கொள்வது?***

**A** *வழிகாட்டிகள்* டிசம்பர் 1, 1997க்குப் பிறகு குழந்தை ஆதரவு ஆணைகள் செய்தது அல்லது மாற்றியது அனைத்துக்கும் பொருந்தும்.

**Q** ***குழந்தை ஆதரவு ஆணை செய்த சமயத்தைக் காட்டிலும் தற்பொழுது என் வாழ்க்கைத் துணை அதிகப் பணம் சம்பாதித்து வருகிறார் என்று நான் நினைக்கிறேன். நான் எவ்வாறு கண்டு பிடிப்பது?***

**A** குழந்தை ஆதரவு *வழிகாட்டிகளின்* கீழ், குழந்தை ஆதரவுக்கு உரியவர் ஆதரவு தருபவரை அவரது அல்லது அவளது வருமானம் பற்றிய தகவல்களை வருடம் ஒரு முறை தரும்படிக் கேட்கலாம். அந்த வேண்டுகோள் எழுத்தில் இருக்க வேண்டும். ஆதரவு தரும் நபர் கண்டிப்பாக கீழ்கண்டவை உட்பட நிதித் தகவல்களைத் தர வேண்டும்:

- அவரது அல்லது அவளது மிகச் சமீபத்திய மூன்று வருமான வரி ரிட்டர்ன்களின் பிரதி ஒன்று மற்றும் அந்த ரிட்டர்ன்களுக்கான மதிப்பீட்டின் மற்றும் மறுமதிப்பீட்டின் அறிவிக்கைகள்;

- அந்த நபர் தற்பொழுது வாழ்க்கைச் செலவிற்கு என்ன செய்கிறார் என்ற தகவல்கள். உதாரணமாக, அந்த நபர் ஒரு தொழிலாளி என்றால், அவர் அல்லது அவள் கண்டிப்பாக சமீபத்திய சம்பள-சீட்டுகளைத் தர வேண்டும்; அவர் அல்லது அவள் சுய-வேலைவாய்ப்பு பெற்றவர் என்றால், அவர் அல்லது அவள் கண்டிப்பாக அதன் நிதி அறிக்கைகளைத் தர வேண்டும், மற்றும் ஆதரவு தரும் நபர் தொடர்பான மக்கள் அல்லது நிறுவனங்களுக்குத் தரப்பட்ட எல்லா பணத்திற்கும் ஒரு அறிக்கையும் தர வேண்டும். ஒரு கூட்டுக்கழக நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தக்காரர் அல்லது ஒரு பங்குதார நிறுவனத்தில் பங்குதாரராக உள்ளவர்களுக்குப் பிற தேவைகள் உள்ளன;

- ஒரு டிரஸ்டிலிருந்து வருமானம் அறிக்கை மற்றும் டிரஸ்டின் நிதி அறிக்கைகளின் பிரதிகள்; மற்றும்

- ஏதும் ”விசேடச் செலவுகள்” அல்லது ”தேவையற்ற கஷ்டம்” பற்றிய தற்பொழுதைய தகவல்கள் எழுத்து வடிவில்.

**Q** ***என் வாழ்க்கைத் துணைவரது வருமானம் மாறும் பொழுது என் குழந்தை ஆதரவுத் தொகை தானாகவே மாறுமா?***

**A** உங்கள் வாழ்க்கைத் துணைவரது வருமானம் மாறும் பொழுது, ஒரு புதிய ஆதரவுத் தொகைக்கான ஒரு ஒப்பந்தத்திற்கு நீங்கள் இருவருமே சம்மதிக்க இயலும். இருப்பினும், நீங்கள் சம்மதிக்க முடியாவிட்டால், புதிய தொகை அமைப்பதற்கு நீதிமன்றத்திற்கு நீங்கள் திரும்பவும் செல்ல வேண்டியிருக்கும். இந்த தொகை உங்கள் வாழ்க்கைத் துணைவரது புதிய வருமானத்தின் அடிப்படையில் வழிகாட்டிகளின் கீழ் தீர்மானிக்கப்படும்.

**Q** ***1993ல் செய்த குழந்தை ஆதரவுக்கான ஒரு ஆணை என்னிடம் உள்ளது. என் நண்பர்களில் ஒருவர் குழந்தை ஆதரவுத் தொகைகளைப் பாதிக்கும் வரிச்சட்டங்கள் மாறியுள்ளன என்று கூறினார். இந்த மாறுதல்கள் என்னைப் பாதிக்கிறதா?***

**A** இல்லை. அந்த புதிய சட்டம் மே1, 1997 ற்குப் பிறகு செய்த ஆணைகளை மட்டுமே பாதிக்கிறது. குழந்தை ஆதரவுத் தொகை, ஆதரவு தரும் நபருக்கு ஒரு வரிக்கழிவு அல்ல என்று அந்த சட்டம் தற்பொழுது கூறுகிறது மற்றும் குழந்தை ஆதரவுத் தொகை பெறும் நபர் அந்த ஆதரவுத் தொகைகளுக்கு வரி செலுத்த வேண்டியதில்லை.

நீங்களும் மற்றொறு பெற்றோரும் ஏற்கெனவே உள்ள குழந்தை ஆதரவுத் தொகைக்கு புதிய வரி விதிகள் பொறுத்தப்பட வேண்டும் என்று விரும்பினால், நீங்கள் இருவரும் கனடா வருவாய் ஏஜென்சிக்கு ஒரு படிவத்தில் புதிய விதிகள் உங்களுக்கு பொறுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்டி அனுப்பலாம்.

உங்கள் பழைய ஆணையை மாற்ற வேண்டும் என்று திரும்பவும் நீதிமன்றத்திற்குச் சென்றால், அந்த புதிய வரி விதிகள் தானாகவே உங்கள் புதிய ஆணைக்குப் பொருந்தி விடும்.

**Q** ***என் குழந்தை ஆதரவு ஆணை வழிகாட்டிகளின் கீழ் செய்யப்பட்டது மற்றும் வாழ்க்கைச் செலவுகளின் உயர்வைப் பற்றி அது எதையும் சொல்லவில்லை. ஒரு சில வருடங்களில் பணவீக்கத்தினால் என் ஆதரவுப் பணத்திற்கு மதிப்பிருக்காது. நான் இதை மாற்ற முடியுமா?***

**A** குழந்தை ஆதரவு *வழிகாட்டிகள்* வாழ்க்கைச் செலவுகளின் உயர்வுகளிற்கு மாறுதல் செய்வதில்லை. ஆதரவு தரும் பெற்றோரின் வருமானத்தின் அடிப்படையில் தொகைகள் உள்ளன. அந்த பெற்றோரின் வருமானம் உயரும் பொழுது, உங்கள் குழந்தையின் ஆதரவுத் தொகைகளின் ஒரு உயர்வுக்கு நீங்கள் கேட்கலாம்.

**Q** ***என் நண்பர்களில் ஒருவர், குழந்தை ஆதரவு வழிகாட்டிகள் புதுப்பித்தல் செய்யப்பட்டுள்ன மற்றும் இது நான் பெற உரிமையுள்ள ஆதரவுத் தொகையைப் பாதிக்கும் என்று கூறினார். இந்த மாறுதல்கள் தானாகவே என்னைப் பாதிக்குமா?***

**A** இல்லை. புதுப்பித்த *குழந்தை ஆதரவு வழிகாட்டிகள்,* புதிய *வழிகாட்டிகள்* அமலுக்கு வந்த பிறகு செய்த ஆணைகளை மட்டுமே பாதிக்கின்றன. அந்த புதிய மாற்றங்கள் உங்கள் வழக்கிற்குப் பொருந்துகிறது என்றால், நீங்களும் மற்றொரு பெற்றோரும் ஒரு புதிய ஆதரவுத் தொகைக்கு சம்மதிக்க இயலலாம். இருப்பினும், நீங்கள் சம்மதிக்க முடியா விட்டால், உங்கள் பழைய ஆணையை மாற்றுவதற்கு நீதிமன்றத்திற்குத் திரும்பவும் செல்லலாம். நீதிமன்றம் உங்கள் புதிய ஆணையில் பொருந்தக்கூடிய *குழந்தை ஆதரவு வழிகாட்டித் தொகைகளப் பொறுத்தும்.*

**Q** ***குழந்தை ஆதரவுத் தொகையினை நான் ஓரளவு ஒழுங்காக செலுத்தி வருகிறேன் மற்றும் இப்பொழுது என் மனைவி என் குழந்தைகளை நான் பார்க்கும் பொழுது புதிய விளையாட்டுகளைத் தொடங்கியிருக்கிறாள். கடந்த வார இறுதியில் அவர்களைக் கூட்டி வரச் சென்ற பொழுது அவர்கள் பாட்டி வீட்டிற்குச் சென்றுள்ளதாகக் கூறினாள். என் குழந்தைகளை நான் பார்க்க முடியா விட்டால் நான் ஏன் ஆதரவுத் தொகையைத் தர வேண்டும்?***

**A** சட்டம் தெளிவாக உள்ளது. குழந்தைகளைப் பார்க்கும் ஏற்பாடுகளில் நிகழ்வதைப் பற்றி பொருட்படுத்தாமல் குழந்தை ஆதரவுத் தொகையை நீங்கள் தர வேண்டும். உங்கள் குழந்தைகளின் கவனிப்பிற்கான செலவுகளைப் பகிர்வதற்கு உதவுவதற்கு குழந்தை ஆதரவுத் தொகையை நீங்கள் தருகிறீர்கள். ஆனால் குழந்தைகளைப் பார்க்கும் உங்கள் ஏற்பாடுகள் மதிக்கப்பட வேண்டும் என்ற ஒரு உரிமை உங்களுக்கு உண்டு. ஒரு வழக்கறிஞர், ஒரு மத்தியஸ்தர், அல்லது ஒரு குடும்ப ஆலோசகரிடம் உங்கள் குழந்தைகளைப் பார்ப்பதற்கு உங்களுக்கு உள்ள கஷ்டம் பற்றிப் பேசுங்கள். நீதிமன்றத்திற்குச் செல்லத் தேவையில்லாமல் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நீங்கள் பிரச்சனையைத் தீர்த்துக் கொண்டால் ஒவ்வொருவரும் பலன் பெறுவீர்கள்.

## பொதுவான சட்ட தம்பதிகள்

**Q** *மார்ட்டீனும் நானும் திருமணம் செய்யதுக்கொள்ளவில்லை. எட்டு வருடங்களாக நாங்கள் சேர்ந்து வாழ்ந்து வருகிறோம் மற்றும் நான்கு வயதான இரட்டைக் குழந்தைகள் உள்ளன. மார்ட்டீன் களைத்தும் அலுத்தும் போய் தனியாகப் பிரிந்து செல்ல விரும்புகிறாள். இரட்டையர்களின் பாதுகாப்புப் பொறுப்பை நான் ஏற்பேன் என்று நாங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறோம். மார்ட்டீன் குழந்தை ஆதரவுத் தொகையைத் தர வேண்டுமா?*

**A** ஆம். ஆதரவுத்தொகை *குழந்தை ஆதரவு வழிகாட்டிகளின்* கீழ் அமைக்கப்பட்டிருக்கும். ஆதரவுத் தொகை மார்ட்டீனின் வருவாய் அடிப்படையில் இருக்கும். குழந்தைகளின் பெற்றோர் திருமணம் ஆனவர்களானாலும் சரி இல்லையன்றாலும் சரி, குழந்தைகளுக்கு இரண்டு பெற்றோரிடமிருந்தும் நிதி ஆதரவு பெறுவதற்கு ஒரு உரிமை உண்டு. திருமணமான தம்பதிகளைப் போன்றே பொதுவான சட்ட தம்பதிகளுக்கும் அதே பொறுப்புகள் உண்டு.

## ஒரு பொழுதும் சேர்ந்து வாழ்ந்திடாத பெற்றோர்

**Q** *சிறிது காலம் முன்பு ஜோனுடன் எனக்கு ஒரு குறுகிய கால உறவு இருந்தது. நாங்கள் ஒரு பொழுதும் சேர்ந்து வாழவில்லை. நாங்கள் வெறுமென ஒரு சில முறைகள் டேட்டிங் செய்தோம். அதே நேரத்தில் வேறு ஒருவருடன் அவள் டேட்டிங் வைத்திருந்தாள் என்று நான் கண்டுபிடித்த பொழுது நாங்கள் பிரிந்து விட்டோம். இப்பொழுது ஒரு ஆண் குழந்தை அவளுக்குப் பிறந்திருக்கிறது. அது என்னுடையது என்று அவள் கூறுகிறாள் மற்றும் குழந்தை ஆதரவுக்காக என்னை நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்கிறாள். அந்த குழந்தைக்குத் தகப்பன் நான்தான் என்று நான் நினைக்கவில்லை. அப்படி இருந்தாலும் அந்த குழந்தைக்கு ஆதரவு நான் ஏன் தர வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை.*

**A** நீங்களும் ஜோனும் ஒரு பொழுதும் திருமணம் செய்யவில்லை அல்லது ஒன்றாய் வாழ்ந்ததில்லை என்றாலும் கூட அந்த குழந்தை உங்களுடையது என்றால், அந்த குழந்தைக்கு ஆதரவு தருவதற்கு உங்களுக்கு சட்டப்படியான ஒரு கடமைப்பாடு உள்ளது. அதனுடன் நேரம் செலவழிக்க பார்க்கும் ஒரு உரிமையும் உங்களுக்கு உண்டு. இருப்பினும், அந்த குழந்தை உங்களுடையதல்ல என்று நீங்கள் நம்பினால் தகப்பன் யார் எனக் கண்டு பிடிக்கும் ஒரு பெட்டர்னிட்டி சோதனைக்கு நீங்கள் வேண்டிக் கொள்ளலாம். ஜோன் அதற்கு சம்மதிக்காவிட்டால், நீதிமன்றத்தை பெட்டர்னிட்டி சோதனைக்கு உத்தரவிடும்படி நீங்கள் கேட்கலாம்.

### மாற்றான்-பெற்றோர்கள்-

**Q** ***ஐந்து வருடங்களுக்கு முன் ஜேசனை நான் திருமணம் செய்த பொழுது என் மூன்று-வயது-மகனைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு தனியான தாய் ஆக இருந்தேன். ஒரு சில மாதங்களுக்கு முன்பு வரை நாங்கள் நன்றாகத்தான் இருந்தோம். தற்பொழுது ஒரு பிரிவை நோக்கி நாங்கள் செல்கிறோம் என நான் நினைக்கிறேன். நாங்கள் பிரிந்தால், என மகனிற்காக ஜேசன் குழந்தை ஆதரவுத்தொகை ஏதும் தர வேண்டியிருக்குமா?***

**A** ஜேசன் உங்கள் குழந்தையின் உயிரியல் தகப்பனார் இல்லை என்றால் கூட, அவர் உங்கள் மகனிற்கு ஒரு தகப்பன் என்ற முறையில் பொறுப்புகளை ஏற்றால், குழந்தை ஆதரவுத் தொகை தரும்படி நீங்கள் அவரைக் கேட்பதற்கு உங்களுக்கு ஒரு உரிமை உள்ளது. ஜேசன் உங்கள் குழந்தையை உண்மையில் தனது சொந்த மகனாக நடத்தினாரா மற்றும் ஒரு தகப்பனாக பொறுப்புகளை ஏற்றிருந்தாரா என்று ஒரு நீதிபதி முடிவு செய்யலாம். அப்படியென்றால், நீதிபதி ஜேசனின் வருமானத்தைப் பார்த்து *குழந்தை ஆதரவு வழிகாட்டிகளின் படி* ஆதரவை அமைப்பார்.

## உங்கள் வாழ்க்கைத் துணையை நிதி ரீதியாக ஆதரிப்பது

வாழ்க்கைத் துணை உறவுகளைச் சட்டம் பொருளாதாரப் பங்குதாரர்களாகப் பார்க்கிறது மற்றும் அந்த பங்குதார உறவுமுறைகள் முறியும் பொழுது அதிக பணம் உள்ள நபர் மற்றவருக்கு ஆதரவளிக்க வேண்டும். அதே நேரத்தில், பெரியவர்கள் சுய-சார்பற்றும் தங்களின் மிகச் சிறப்பான திறன்களுடன் தங்களது சொந்த தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கொள்வதையும் சட்டம் எதிர்பார்க்கிறது.

ஒரு திருமண வான்க்கையில், ஒரு நபர் அடிக்கடி வீடு மற்றும் குழந்தைகளை மேற்பார்க்க அதிக நேரம் செலவழிக்கிறார். அந்த நபர் பணித்தளத்தில் நிறைய சம்பாதிப்பதற்கும், அல்லது அதிகத் திறன் பெறுவதற்கு அல்லது ஒரு வர்த்தகம் அல்லது தொழில்முறைப் பணியில் அதிகமாகப் பெறுவதற்கும் அல்லது ஒரு பென்ஷன் திட்டத்தில் ஒரு நீண்ட காலத் திட்டத்திற்குப் பணம் செலுத்துவதற்கும் ஒரு சந்தர்ப்பம் இல்லை. ஒரு திருமணம் முறியும் பொழுது, அந்த நபர் பொருளாதார ரீதியில் ஒரு பயனற்ற நிலையில் உள்ளார்.

ஒரு வாழ்க்கைத் துணை இன்னொருவருக்கு அளிக்க வேண்டிய ஆதரவுத் தொகையை முடிவு செய்வதற்கு, ஆதரவு கேட்பவர் வாழ்வதற்கு எவ்வளவு தேவைப்படுகிறது, மற்றும் மற்ற நபர் எவ்வளவு தரக்கூடும் என்று நீதிபதிகள் கண்டிப்பாகப் பார்க்க வேண்டும் என சட்டம் சொல்கிறது. ஒரு நபர் அவன் அல்லது அவள் நிதி ரீதியாக தன்-நிறைவு அடைவதற்கு அல்லது ஒரு தீவிரமான நிதி நெருக்கடியில் சிக்குவதிலிருந்து தவிர்ப்பதற்கு ஆதரவைக் கோரலாம்.

பொதுவாக, மக்கள் ஒரு குறுகிய காலத்திற்கு திருமணம் ஆனவர்கள் ஒரு குறுகிய-கால அடிப்படையிலேயே ஆதரவு தர முடியும். ஆதரவுத் தொகைகள் நபர் ஒருவருக்கு பள்ளிக்குத் திரும்பவும் அல்லது ஒரு பணிக்குப் பயிற்சி பெறவும் ஒரு வாய்ப்பு அளிக்கலாம்.

பல வருடங்களாகப் பணித்தளத்தை விட்டு வெளியேறி அல்லது பல வருடங்களாக குறைந்த வருவாய் வேலைகளில் இருந்து விட்டு, சில மக்கள் ஒரு பொழுதும் நிதி ரீதியாக தன்-நிறைவு அடைய முடியாமல் போகலாம். அவர்களின் வாழ்க்கைத் துணைகள் நீண்ட-கால ஆதரவு அவர்களுக்குத் தர வேண்டியிருக்கலாம்.

கணக்கில் எடுக்கப்படும் சில விஷயங்கள் கீழ் வருமாறு:

- தம்பதியின் வயது மற்றும் ஆரோக்கியம்;
- கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்புகள்;
- வேலைவாய்ப்புகள் மீது திருமணமான நிலையின் விளைவு;
- திருமணத்தின் பொழுது குடும்பக் கவனிப்பிற்கு அளித்த பங்களிப்பு;
- மற்ற நபரின் வாழ்க்கைத் தொழிலுக்கு அளித்த பங்களிப்பு;
- பிரிவிற்கு முன் குடும்பத்தின் வாழ்க்கைத் தரம்;
- அந்த நபர் தன்-நிறைவு அடைவதற்கு எடுக்கும் காலம்; மற்றும்
- ஒரு செயல்திறன் குறைபாடு உள்ள இளைய அல்லது வயது வந்த குழந்தைகளைக் கவனிப்பதற்காக வீட்டில் தங்கியிருக்கும் தேவை.

கொடுக்கப்படும் ஆதரவுத் தொகை மற்றும் எவ்வளவு காலம் கொடுக்கப்படும் என்று நீங்கள் சம்மதிக்கலாம், மேலும் இதை உங்களது பிரிவு ஒப்பந்தத்தில் சேர்க்கவும். உங்களால் சம்மதிக்க முடியாவிட்டால், நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று நீதிமன்றம் அதை முடிவு செய்ய விட்டு விடலாம்.

சமீபத்தில் சில வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதிகள் வரைவு வாழ்க்கைத் துணை ஆதரவு ஆலோசனை வழிகாட்டிகளைச் சோதித்திடத் தொடங்கியிருக்கின்றனர். இந்த வழிகாட்டிகள் ஆதரவு பெறும் வாழ்க்கைத் துணையின் வயது, திருமணம் செய்து வாழ்ந்த காலம் மற்றும் குழந்தை ஆதரவின் தேவை உண்டா இல்லையா என்ற அடிப்படையில் ஒரு வரிசையான ஆதரவுத் தொகைகள அளிக்கின்றன. அது போன்ற வழக்குகளில் வழங்கப்பட்டவைகளின் அடிப்படையில் ஒரு ஆதரவுத் தொகைக்கான ஒப்பந்தத்தை அடைவதற்கு உங்களுக்கு உதவி செய்திட இந்த வழிகாட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வாழ்க்கைத் துணை ஆதரவு ஆலோசனை வழிகாட்டிகள் இன்னமும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

**Q** ***எவ்வளவு ஆதரவு கேட்பது என்று எவ்வாறு நான் கணக்கிடுவது?***

**A** உங்கள் வருமானம் மற்றும் செலவுகள் பற்றிய விபரங்களை நீங்கள் எழுதி வைக்கத் தேவை உள்ளது. உணவு மற்றும் போக்குவரத்து, மருந்து, பல் மருத்துவ கட்டணங்கள், துணிமணிகள், உலர் சலவைகள், சிகை அலங்காரங்கள், கார்ச்செலவுகள் மற்றும் காப்பீடு போன்ற வீட்டுச் செலவுகள். வீட்டு காப்பீடு,

விடுமுறைகள், பரிசுகள், பொழுதுபோக்கு, வளர்ப்புப் பிராணிகளின் உணவு மற்றும் மிருக வைத்தியரின் கட்டணங்கள் போன்றவற்றில் நீங்கள் எவ்வளவு செலவழிக்கிறீர்கள் என்று பட்டியலிடவும். எவ்வளவு ஆதரவுத் தொகை உங்களுக்குத் தேவை எனக் கணக்கிடும் பொழுது இந்த அனைத்து செலவுகளையும் சேர்த்துக் கொள்ளலாம். வாழ்க்கைத் துணை ஆதரவு ஆலோசனை வழிகாட்டிகள் எவ்வாறு உங்கள் நிலைக்குப் பொருந்தும் என்று உங்கள் வழக்கறிஞரை விளக்கச் சொல்லியும் நீங்கள் கேட்கலாம்.

**Q** ***எனக்கு 55 வயது ஆகிறது. நீதிமன்றம் எனது வாழ்க்கைத் துணையை ஒவ்வொரு மாதமும் $500 அளிக்க ஆணையிட்டது. இப்போதைக்கு இது சரியே, ஆனால் பணவீக்கம் மற்றும் எல்லா பொருள்களின் விலை உயர்வால், ஐந்து வருடங்களில் இது எனக்குப் போதுமானதாக இருக்காது என்று நான் அஞ்சுகிறேன். இதில் நான் எதுவும் செய்யக் கூடுமா?***

**A** ஆம். நீங்கள் நீதிமன்றத்தை நீதிமன்ற ஆணையில் வாழ்க்கைச் செலவு மாற்றத்தைச் சேர்க்கும்படிக் கேட்கலாம். இது ஆதரவுத் தொகைகளை நீங்கள் வசிக்கும் உங்கள் உள்ளூர் பகுதியில் நுகர்வோர் விலை அட்டவணையுடன் இணைக்கிறது. அப்பொழுது உங்கள் ஆதரவுத் தொகைகள் ஒவ்வொரு வருடமும் பண வீக்கத்திற்கு ஏற்ப மாறும்.

### பொதுவான சட்ட தம்பதிகள்

**Q** ***பத்து வருடங்களாக நாங்கள் சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறோம். பெரும்பாலான நேரத்தில், எங்களது நான்கு குழந்தைகளைக் கவனித்துக் கொண்டு நான் வீட்டிலிருந்து வந்திருக்கிறேன். நாங்கள் பிரிந்தால், எனக்கான ஆதரவை நான் பெறக் கூடுமா?***

**A** நீங்கள் ஆதரவைக் கேட்கலாம். பொதுவான சட்ட வாழ்க்கைத் துணைகள் மூன்று வருடங்களுக்கு மேலாக சேர்ந்து வாழ்ந்திருந்தாலோ அல்லது மூன்று வருடங்களுக்குக் குறைவாக சேர்ந்து வாழ்ந்திருந்து ஆனால் ஒரு குழந்தையைப் பெற்றிருந்தாலோ அல்லது இருவரும் சேர்ந்து தத்து எடுத்திருந்திருந்தாலோ தங்களுக்கு ஆதரவு கேட்பதற்கு உரிமை உள்ளது.

## உங்கள் ஆதரவுத் தொகைகளை அமல்படுத்துவது

அனைத்து ஆதரவு ஆணைகளும் ஒன்டேரியோவில் குடும்ப பொறுப்பு அலுவலகத்தில் (எஃப்ஆர்ஓ/**FRO**) தானாகவே கோப்பு ஆக்கப்பட்டு விடுகிறது. குழந்தை மற்றும் வாழ்க்கைத் துணை ஆதரவுத் தொகைகள் ஒரு ஒழுங்கான அடிப்படையில் வழங்கப்படுகிறதா என்று உறுதி செய்வதற்கும் உரிய காலத்தில் வழங்காத அல்லது முழுமையாக வழங்காத ஆதரவு ஆணைகளை அமல்படுத்தவும் எஃப்ஆர்ஓ நடவடிக்கை எடுக்கிறது.

**பக்கம் 56**

## தன்னியக்க ஆதரவுக் கழிவு

நீதிமன்றம் ஒன்று ஒழுங்கான ஆதரவுத் தொகைகளை ஒரு நபருக்கு வழங்கி ஆணையிடும் பொழுது, நீதிமன்றம் ஆதரவு கழிவு ஆணையும் செய்கிறது. நீதிமன்றம் அந்த ஆதரவு கழிவு ஆணையை எஃப்ஆர்ஓ-வுக்கு அனுப்புகிறது. மற்றும் எஃப்ஆர்ஓ அந்த நபரின் பணி அமர்த்துபவருக்கு (அல்லது பிற வருமானம் ஆதரவுக்கு) எழுதி அவரை ஆதரவுத் தொகையை நபரின் வழக்கமான சம்பளக் காசோலையில் இருந்து கழிக்கச் சொல்கிறது. பணி அமர்த்துபவர் அப்பொழுது கண்டிப்பாக பணத்தை எஃப்ஆர்ஓ-வுக்கு அனுப்ப வேண்டும். எஃப்ஆர்ஓ, இம்முறை நீதிமன்ற ஆணையின் கீழ் ஆதரவு பெறும் உரிமை உள்ள நபருக்கு பணத்தை அனுப்புகிறது.

உங்களது ஆதரவு ஏற்பாடுகள் ஒரு உள்ளூர் ஒப்பந்தத்தில் அமைக்கப்பட்டிருந்தால் (திருமண ஒப்பந்தம், பிரிவு ஒப்பந்தம், அல்லது சேர்ந்து வசிக்கும் ஒப்பந்தம்) அல்லது நீதிமன்ற ஆணையைக் காட்டிலும் ஒரு தகப்பன் பெட்டர்னிட்டி ஒப்பந்தம் செய்திருந்தாலும் உங்கள் ஆதரவுத் தொகைகளை எஃப்ஆர்ஓ நடவடிக்கை எடுக்கலாம். அவ்வாறு செய்ய, நீங்கள் கண்டிப்பாக உங்கள் உள்ளூர் ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் *குடும்ப சட்ட விதியில்* உள்ள நடைமுறைப்படியும் நீதிமன்ற விதிகளின்படியும் சமர்ப்பிக்க வேண்டும். உள்ளூர் ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தம் நீதிமன்றத்தில் கோப்பு ஆக்கம் செய்யப்படும் பொழுது, அது எஃப்ஆர்ஓ வில்-கோப்பு ஆக்கம் செய்யப்பட்டு எஃப்ஆர்ஓ உங்களுக்காக ஆதரவுத் தொகைகளை வசூலிக்கலாம்.

## எஃப்ஆர்ஓ-விலிருந்து விலகுவது

சில மக்கள் தங்களது ஆதரவுத் தொகைகள் எஃப்ஆர்ஓ மூலமாக நடவடிக்கை எடுப்பதை விரும்பவில்லை. செலுத்துபவரும் (ஆதரவு தருபவர்) மற்றும் பெறுபவரும் (ஆதரவைப் பெறுவதாக உள்ளவர்) ஏற்றுக் கொண்டால், அவர்கள் எஃப்ஆர்ஓ-விலிருந்து விலகிக் கொள்ளலாம். அவர்கள் இருவரும் தங்களது ஆதரவு ஆணை, உள்ளூர் ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தத்தை விலக்க விரும்புவதாகக் கூறும் ஒரு அறிவிப்பை அவர்கள் இருவரும் கையொப்பமிட்டு எஃப்ஆர்ஓ-வுக்கு அனுப்பி அதைச் செய்யலாம்.

எஃப்ஆர்ஓ இந்த அறிவிப்பைப் பெற்றதும் அந்த வழக்கை மூடி விடுவார். இருப்பினும், பெறுபவர் சமூக உதவி பெற்றுக் கொண்டு இருக்கிறார் மற்றும் ஆதரவு ஆணை சமூக உதவி ஏஜென்சிக்கு ஒதுக்கப்பட்டது என்றால், சமூக உதவி வழங்கும் ஏஜென்சியும் எஃப்ஆர்ஓ-விடமிருந்து ஆதரவு ஆணையை வாபஸ் பெறக் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏதும் சமூக சேவை ஏஜென்சி இதில் ஈடுபட்டிருக்கிறதா மற்றும் அவர்களின் சம்மதமும் தேவையா என்று நீங்கள் உறுதி செய்ய வேண்டும். சமூக சேவை ஏஜென்சிக்கு ஒரு ஒதுக்கீட்டு உறுதியை நிரப்பி அனுப்பி இதை நீங்கள் செய்யலாம். அந்த ஏஜென்சி தாங்கள் ஈடுபட்டிருக்கிறதா என்று அறிவுறுத்தும்.

தொகை தருபவர் ஆதரவு ஆணையுடன் இணங்கி இருக்காவிட்டால், மற்றும் ஆதரவுப் பணம் பாக்கியிருந்தால், தொகை பெறுபவர் செலுத்துபவரின் ஒப்புதல் இல்லாமல் எஃப்ஆர்ஓ விடமிருந்து ஆதரவு ஆணையை வாபஸ் வாங்க முடிவெடுக்கலாம் மற்றும் ஆதரவு ஆணையை நேரடியாக அமல்படுத்தலாம். பெறுபவர் இதை, எஃப்ஆர்ஓ வுக்கு ஆதரவு பெறுபவரால் ஒருதலைப் பட்சமாக வாபஸ் படிவத்தில் கையொப்பமிட்ட அறிவிப்பை அனுப்பிச் செய்யலாம்.

எஃப்ஆர்ஓ இந்த அறிவிப்பைப் பெற்றதும் அது அந்த வழக்கை மூடி விடும் மற்றும் பெறுபவர் ஆதரவு ஆணையை அமல்படுத்தலாம். பெறுபவர் சமூக உதவியைப் பெற்று வருகிறார் என்றால் மற்றும் ஆதரவு ஆணை சமூக உதவி ஏஜென்சிக்கு

ஒதுக்கப்பட்டிருந்தால், சமூக உதவியை அளிக்கும் அந்த ஏஜென்சியும் எஃப்ஆர்ஓ விடமிருந்து ஆதரவு ஆணையை வாபஸ் வாங்க சம்மதிக்க வேண்டும்.

அந்த ஆதரவு ஆணை மறுபடியும் பின் ஒரு தேதியில் எஃப்ஆர்ஓ வசம் சமர்ப்பிக்கப்பட்டால் தருபவர் மற்றும் பெறுபவர் இருவருக்கும் ஒரு கட்டணம் விதிக்கப்படும்.

## உரிய நேரத்தில் அல்லது முழுமையாகத் தரப்படாத ஆதரவுத் தொகைகளை அமல்படுத்துவது

உங்கள் ஆதரவு ஆணை எப்ஆர்ஓ இடம் சமர்ப்பிக்கப்படாவிட்டால், மற்றும் உங்களுக்கு வர வேண்டிய ஆதரவுத் தொகைகள் உரிய நேரத்தில் அல்லது முழுமையாக வழங்கப்படவில்லை என்றால், உங்களுக்குச் சொந்தமான பணத்தை மீட்க உங்கள் சார்பாக நீங்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். நீங்கள் செய்யக்கூடியது:

- பணம் செலுத்தத் தவறியதற்கு ஒரு கேட்பை வேண்டிக் கொள்ளலாம், அதில் தருபவர் ஒரு நீதிபதியிடம் ஏன் ஆதரவுத் தொகையைத் தரவில்லை என்று கண்டிப்பாக விளக்க வேண்டும். அவரது விளக்கத்தால் அந்த நீதிபதி திருப்தி அடையவில்லை என்றால், அந்த நீதிபதி ஆதரவு தரும்படி ஆணையிடலாம். மிகவும் தீவிரமான சந்தர்ப்பங்களில், நீதிபதி தருபவரை ஆதரவுத் தொகை தரத் தவறியதற்காகச் சிறைக்கும் அனுப்பலாம்;

- செலுத்துபவரின் ஊதியங்களை கார்னிஷி (சட்டமுறையாக ஊதியத்தில் ஒரு பங்கை பறிமுதல் செய்வது) செய்யலாம் மற்றும் கார்னிஷ்மெண்ட் அறிக்கைக்குப் பணிய மறுத்தால் அல்லது அலட்சியப்படுத்தினால் அவரது பணி அமர்த்தியவரை நீதிமன்றத்திற்கு அழைக்கலாம்;

- செலுத்துபவரின் வங்கிக் கணக்கை கார்னிஷ் செய்வது;

- செலுத்துபவரின் ஆர்ஆர்எஸ்பி-யைப் பறிமுதல் செய்வது;

- ஆதரவு ஆணையை ஒரு குற்றச்சாட்டாக செலுத்துபவரின் வீடு, பிற கட்டிடச் சொத்தின் மீது அல்லது தனிப்பட்ட சொத்தின் மீது பதிவு செய்யவும்; அல்லது

- செலுத்துபவரின் சொத்திற்கு எதிராக ஒரு ரிட் மனுவைத் தாக்கல்செய்யவும்.

இந்த சட்டப்படியான செயல்களை எடுப்பதற்கு காலம் பிடிக்கலாம் மற்றும் செலவு மிக்கதாயும் இருக்கலாம் மற்றும் உங்களுக்கு உதவிட ஒரு வழக்கறிஞர் உங்களுக்குத் தேவையாக இருக்கலாம். இருப்பினும், நீங்களாகவே உங்கள் ஆதரவுத் தொகைகளுக்காக நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை. உங்கள் சார்பாக எஃப்ஆர்ஓ உங்களுக்குச் சொந்தமான பணத்தை மீட்பதற்கு செயல்படலாம். எஃப்ஆர்ஓ உங்கள் ஆதரவுத் தொகைகளை வசூலிப்பதற்கு மேலே குறிப்பிட்ட எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கலாம். அத்துடன், ஒரு எஃப்ஆர்ஓ இதைச் செய்யக்கூடும்:

- எந்த ஒரு நபர் அல்லது பொது அமைப்பிடமிருந்தோ செலுத்துபவரது வேலை பற்றிய தகவல்மற்றும் நிதிச்சூழ்நிலைல்கள் மற்றும் முகவரியை வேண்டிப் பெறலாம்;

- ஒரு ஆதரவு கழிவு ஆணைக்குப் பணிந்து நடக்காததற்கு அல்லது அலட்சியப்படுத்துவதற்கு செலுத்துபவரைப் பணி அமர்த்தியவரை நீதிமன்றத்திற்கு வரவழைக்கலாம்.;

- பெடரல் மத்திய அரசினால் செலுத்துபவருக்கு தர வேண்டிய பணத்தைக் கழிக்கலாம் (வருமான வரி ரீஃபண்டுகள் மற்றும் வேலைவாய்ப்புக் காப்பீட்டு பயன்கள் உட்பட);

- செலுத்துபவரால் பாக்கி வைக்கப்பட்டுள்ள தொகையை ஒரு கிரெடிட் பீரோவிற்கு அறிவிக்கவும்.;

- செலுத்துபவர் லாட்டரியில் $1,000 க்கு மேலாக ஜெயித்திருந்தால் மற்றும் அந்த லாட்டரி ஒன்டேரியோவில் இருந்தால் நிறுத்தலாம்.;

- செலுத்துபவரது ஓட்டுநர் உரிமையை சஸ்பென்ட் செய்யலாம்; அல்லது

- ஒரு பைலட் உரிமம் அல்லது ஒரு கனடாவின் பாஸ்போர்ட் போன்ற செலுத்துபவரது பெடரல் உரிமங்கள் அல்லது சிறப்புச் சலுகைகளை சஸ்பென்ட் செய்யலாம்.

பின்னாளில் உங்கள் ஆதரவுத் தொகைகளில் பிரச்சனைகள் இருந்தால் மற்றும் எஃப்ஆர்ஓவின் உதவியை நீங்கள் பெற முடிவெடுத்தால் எஃப்ஆர்ஓ-விலிருந்து நீங்கள் விலகியிருந்தால், உங்களது ஆதரவு ஆணை, டொமஸ்டிக் கான்ட்ராக்ட் அல்லது ஒப்பந்தத்தை மறுபடியும் சமர்ப்பிக்கலாம்.

எஃப்ஆர்ஓ-விற்கு தகவல்களை அவ்வப்பொழுது தெரிவிப்பதனால் அது தனது பணியைச் மிக்க சிறப்பாகச் செய்ய இயல்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும். உங்களது தற்பொழுதைய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை எஃப்ஆர்ஓ அறிந்திருப்பதை என்பதை எப்பொழுதும் உறுதி செய்க மற்றும் செலுத்துபவர் வேறு எங்கும் சென்று விட்டார் அல்லது வேலையை மாற்றி விட்டார் என்று நீங்கள் கண்டு பிடித்து, ஒரு வேளை செலுத்துபவர் தெரியப்படுத்தாமல் இருந்தால், நீங்கள் எஃப்ஆர்ஓவிற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

எஃப்ஆர்ஓ உங்கள் ஆதரவுத் தொகைகளைப் பெற முயற்சிப்பதற்கு, உங்களது ஆதரவு ஆணை, டொமஸ்டிக் கான்ட்ராக்ட் அல்லது ஒப்பந்தம் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதும் முக்கியம் ஆகும். இதில் கூடுதல் தகவல்களுக்கு, எஃப்ஆர்ஓ-வின் இணையதளத்தைப் பார்ப்பது உதவிகரமாக இருக்கும். www.theFRO.ca.

**பக்கம் 56**

# உங்கள் சொத்துக்களைப் பிரிப்பது

திருமணமான தம்பதிகளுக்குத் தங்களது திருமண உறவுக் காலத்தில் குழந்தைகளின் கவனிப்பு, வீட்டு நிர்வாகம் மற்றும் வருவாய் ஈட்டுவது போன்றவற்றைப் பகிர்ந்து கொள்ளும் பொறுப்பு இருக்கிறது என்று சட்டம் சொல்கிறது. சட்டத்தின் கண்களில், திருமணம் என்பது ஒரு சமத்துவமான பங்குதார அமைப்பாகும். திருமணம் ஒன்று முறியும் பொழுது, பங்குதார அமைப்பு முறிகிறது மற்றும் சொத்து பிரிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு நபரின் சமமான பங்களிப்பை அங்கீகரிக்க, பொதுவான விதி என்ன என்றால், உங்கள் திருமண உறவுக் காலத்தில் ஈட்டிய மற்றும் நீங்கள் பிரியும் பொழுதும் வைத்திருக்கும் எந்த சொத்தின் மதிப்பும் சமமாகப் பிரிக்கப்பட வேண்டும், 50-50. உங்கள் திருமணத்தினுள் நீங்கள் கொண்டு வந்த சொத்து, உங்கள் திருமணம் முறிந்தால் நீங்களே வைத்துக் கொள்ளலாம். உங்கள் திருமணக் காலத்தின் பொழுது இந்த சொத்தின் மதிப்பு ஏதும் உயர்ந்திருந்தால் அதையும் பிரிக்க வேண்டும்.

இந்த விதிகளுக்கு சில விதிவிலக்குகள் உள்ளன. உங்களின் திருமண முறிவின் முடிவில் நீங்களே சில சொத்துக்களை வைத்துக் கொள்ள சட்டம் அனுமதிக்கிறது. இந்த சொத்து விலக்கப்பட்ட சொத்து என்று அழைக்கப்படுகிறது. அது உள்ளடக்குவது:

- உங்கள் திருமணக் காலத்தில் உங்கள் வாழ்க்கைத் துணையைத் தவிர வேறொருவரிடம் நீங்கள் பெற்ற பரிசுகள்;
- உங்கள் திருமணக் காலத்தில் உங்களுக்கு பரம்பரைச் சொத்தாக வந்த சொத்து;
- யாரேனும் இறந்து அதனால் ஒரு காப்பீட்டு நிறுவனம் அளித்த பணத்தை நீங்கள் பெற்றால்; மற்றும்
- ஒரு தனிப்பட்ட காயத்தால், ஒரு கார் விபத்து போன்றது உங்களுக்கு உரிமையான பணத்தை நீங்கள் பெற்றது.

குடும்ப இல்லம் என்பது இந்த பொது விதிகளில் மற்றும் ஒரு விதிவிலக்கு ஆகும். உங்கள் திருமணம் முறியும் பொழுது, நீங்கள் திருமணம் செய்யும் முன் அந்த வீடு உங்களுக்குச் சொந்தமாக இருந்தாலும் சரி, ஒரு பரிசாகப் பெற்றாலும் சரி அல்லது பரம்பரைச் சொத்தாகப் பெற்றாலும் சரி குடும்ப இல்லத்தின் முழு மதிப்பும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்று சட்டம் சொல்கிறது.

பிற வகைச் சொத்துக்களைப் போன்று இல்லாமல், உங்கள் திருமண சமயத்தில் வீட்டிற்கு இருந்த மதிப்பை உங்களுக்கு வைத்துக் கொள்ள முடியாது.

நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் ஒரு வித்தியாசமான பிரிவினைக்கு ஒத்துக் கொள்ளலாம். அல்லது, சில சூழ்நிலைகளில், வித்தியாசமாகப் பிரிக்க நீதிமன்றத்தை நீங்கள் கேட்கலாம். மிகவும் சிறப்பான சூழ்நிலைகள் இருந்தால் மற்றும் ஒரு 50-50 பிரிவினை உங்களுக்கு உச்சமான அளவில் அநியாயமாக இருக்கும் என்றால் மட்டும் நீதிமன்றம், சொத்தை வித்தியாசமாகப் பிரிக்கும்.

உங்கள் சொத்தின் மதிப்பைக் கணக்கிட்டு உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் இடையே பிரிப்பதற்கு நீங்கள் பின்பற்ற வேண்டிய சட்ட விதிகள் சிக்கலாக இருக்கக்கூடும். உங்கள் வழக்கில் அந்த விதிகள் எவ்வாறு பொருந்துகிறது என்பதற்கு ஒரு வழக்கறிஞரை ஆலோசிப்பது ஒரு நல்ல யோசனை ஆகும்.

அடுத்த பகுதி, இந்த விதிகள் எவ்வாறு வேலை செய்கின்றன என்பது பற்றி உங்களுக்கு ஒரு யோசனையைத் தரும். பொதுவான விதிகளைப் பற்றிய விளக்கமே இது என்பதை ஞாபகம் வையுங்கள். உங்கள் வழக்கின் உண்மைகளில் பொருந்தக்கூடிய பிற விதிகள் மற்றும் விதிவிலக்குகள் இருக்கலாம்.

நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும் முதல் காரியமாகச் செய்ய வேண்டியது, தனித்தனியாக சட்டத்தில் அமைத்த விதிகளின்படி குடும்ப சொத்தில் உங்கள் பங்கின் மொத்த மதிப்பைக் கணக்கிடுவது ஆகும். இதைச் செய்யும் பொழுது நீங்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும். நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றால், உங்கள் சொத்து, கடன்கள் மற்றும் வருமானத்தின் முழு நிதி அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். அது சரியானது என்று நீங்கள் உறுதிமொழி எடுக்க வேண்டும்.

கீழே அமைத்துள்ள 1-4 படிகளை உபயோகித்து குடும்ப சொத்தில் உங்களின் பங்கை நீங்கள் கணக்கிடலாம்:

## படி 1: நீங்கள் பிரிந்த அன்று உங்களிடமிருந்த சொத்தின் மதிப்பைக் கண்டு பிடியுங்கள்

- உங்கள் சொத்து என்பது உங்கள் பெயரில் இருக்கும் அல்லது உங்களுக்குச் சொந்தமானது எதுவும் ஆகும்.

- உங்கள் சொத்து அனைத்தையும் நீங்கள் பட்டியலிட வேண்டும், நாட்டின் பிற பாகங்களில் மற்றும் உலகெங்கும் உள்ளவை உட்பட. உதாரணமாக, உங்கள் சொத்தின் பட்டியல் இவைகளைக் கொண்டிருக்கலாம். உங்கள் வீடு, ஒரு வர்த்தகம், ஒரு கார், பர்னிச்சர், ஒரு இசை கேட்கும் அமைப்பு, துணிமணிகள், விளையாட்டு உபகரணம், நகைகள், வங்கிக் கணக்குகளில் சேமிப்புகள் மற்றும் ஓய்வு நலச் சேமிப்புத் திட்டங்கள், ஒரு பென்ஷனுக்கு உங்களது உரிமை, அந்த பென்ஷனைப் பல வருடங்கள் கழித்து தான் நீங்கள் பெறுவீர்கள் என்றால் கூட.

- உங்கள் இருவரது பெயரில் கூட்டாக நீங்கள் சில சொத்துகளை வைத்திருந்தால், நீங்கள் ஒவ்வொருவரும் அந்த சொத்து மதிப்பில் பாதியை உங்கள் பட்டியலில் இடுங்கள்.

## படி 2: நீங்கள் பிரிந்த அன்று உங்களுக்கு இருந்த கடன்களின் மதிப்பைக் கழியுங்கள்

- கிரெடிட் கார்டுகளில் உள்ள கடன், உங்கள் வீடு மற்றும் ஒரு கார் கடன் இவைகளுக்குச் செலுத்த வேண்டிய தொகை கடன்களின் உதாரணங்கள் ஆகும்.

- பிரிந்த நாளன்று இருந்த அவைகளின் மதிப்பைப் பட்டியலிடவும்.

## படி 3: சட்டம் அனுமதிக்கிற உங்களுக்கு வைத்துக் கொள்ளக் கூடிய சொத்தின் மதிப்பைக் கழித்துக் கொள்ளுங்கள்.

- இந்த சொத்தில், உங்கள் திருமண சமயத்தில் உங்கள் வாழ்க்கைத் துணையிடமிருந்து தவிர மற்றொருவரிடமிருந்து பெற்ற பரிசுகள் மற்றும் பரம்பரை வரவுகள், யாரேனும் இறந்ததால் ஒரு காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்ற பணம், மற்றும் ஒரு தனிப்பட்ட காயத்தின் விளைவால் நீங்கள் பெற்றது அல்லது பெறும் உரிமை இவைகளை உள்ளடக்கியவை ஆகும்.

### படி 4: உங்கள் திருமணத்தினுள் நீங்கள் கொண்டு வந்த சொத்தின் மதிப்பை கடன்களின் மதிப்பால் கழிக்கவும்

- நீங்கள் திருமணம் செய்த பொழுது உங்களுக்குச் சொந்தமான சொத்தின் மதிப்பைக் கூட்டவும்.

- உங்கள் திருமண நாளன்று உங்களுக்குச் சொந்தமாக இருந்தால் கூட உங்கள் குடும்ப வீட்டைச் சேர்க்காதீர்கள்.

- நீங்கள் திருமணம் செய்த பொழுது உங்களுக்கு இருந்த எல்லா கடன்களையும் கழிக்கவும்.

**படிகளின் சுறுக்கம் 1 – 4:**

| பிரிவின் பொழுது சொத்தின் மதிப்பு | *கழிவு* | பிரிவின் பொழுது கடன்களின் மதிப்பு | *கழிவு* | விலக்கப்பட்ட சொத்து | *கழிவு* | திருமணத்தின் பொழுது கடன்களைக் கழித்து சொத்தின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| (படி 1) | | (படி 2) | | (படி 3) | | (படி 4) |

**= குடும்ப சொத்தின் மதிப்பில் உங்களது பங்கு**

அந்த கடைசிப் படி உங்களில் ஒருவர் மற்றவருக்குப் பணம் எதுவும் தர வேண்டுமா என்று உங்களுக்குச் சொல்லும்.

### படி 5: பணம் வர வேண்டியது ஏதாவது உள்ளதா எனக் கண்டு பிடியுங்கள்

- குடும்ப சொத்தில் உங்கள் பங்கின் மதிப்பை உங்கள் வாழ்க்கைத் துணையின் பங்குடன் ஒப்பிடுங்கள்.

- பெரிய தொகையிலிருந்து சிறிய தொகையைக் கழியுங்கள்.

- வித்தியாசத்தை 2 ஆல் வகுங்கள். இந்த தொகையே பெரிய பங்கு உள்ள வாழ்க்கைத் துணை சிறிய பங்கு உள்ள வாழ்க்கைத் துணைக்குக் கண்டிப்பாகத் தர வேண்டியது ஆகும்.

- இந்த பட்டுவாடா தொகை ஒரு சமமாக்கும் பட்டுவாடா தொகை என அழைக்கப்படுகிறது.

**குறிப்பு :** ஒரு நபருக்கு சொத்தைக் காட்டிலும் அதிக கடன்கள் இருந்தால், குடும்ப சொத்தில் அவரது அல்லது அவளது பங்கு சூன்யம் ஆகும்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் பிரிந்த பொழுது வங்கியில் உங்களுக்குக் கடன் $15,000 இருந்தால், மற்றும் உங்களுக்குச் சொந்தமாக $8,000 மதிப்புள்ள சொத்து மட்டும் இருந்தால், ஒரு சமமாக்கும் பட்டுவாடா தொகையைக் கணக்கிடுவதற்காக உங்கள் குடும்ப சொத்தின் மதிப்பு $0 ஆக இருக்கும்.

**உதாரணம்: ஜார்ஜ் மற்றும் மரியா**

| *ஜார்ஜ்* | | | *மரியா* |
|---|---|---|---|
| $47,000 | படி 1: | நீங்கள் பிரிந்த அன்று உங்களிடமிருந்த சொத்தின் மதிப்பைக் கண்டுபிடியுங்கள் | $12,000 |
| -8,000 | படி 2: | நீங்கள் பிரிந்த அன்று உங்களுக்கு இருந்த கடன்களின் மதிப்பைக் கழியுங்கள் | -2,000 |
| -4,000 | படி 3: | உங்களுக்கு வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் அனுமதிக்கும் சொத்தின் மதிப்பைக் கழியுங்கள் | |
| -18,000 | படி 4: | திருமணத்தன்று உங்கள் சொத்தின் மதிப்பில் கடன்களின் மதிப்பைக் கழியுங்கள் | -8,000 |
| **$17,000** | | **குடும்ப சொத்தின் மொத்த மதிப்பு** | **$2,000** |

படி 5: பட்டுவாடா தொகை பாக்கி இருக்கிறதா என்று கண்டு பிடியுங்கள்

$17,000 (பெரிய தொகை) - $2,000 (சிறிய தொகை) = $15,000

$15,000 ÷ 2 = $7,500

இருவருக்கும் ஒரே அளவாக $9,500 இருப்பதற்கு, ஜார்ஜ் ஒரு சமமாக்கும் பட்டுவாடா தொகையான $7,500 ஐ மரியாவுக்கு தர வேண்டும்.

**Q** ***எங்கள் கணக்கீடுகள் எனக்கு $5,000 பட்டுவாடாத் தொகை வர வேண்டும் என்று சொல்கின்றன. இதை நான் ரொக்கமாகப் பெறுகிறேனா?***

**A** அவசியமில்லை. அந்த தொகை ரொக்கமாகக் கொடுக்கப்படக்கூடும். $5,000 மதிப்பில் உங்களுக்கு சொத்து ஆகவும் தரப்படலாம். அல்லது, $5,000 தீரும் வரை உங்கள் வாடகை அல்லது அடமானத்திற்கு அதில் ஒரு தொகை மாதாமாதம் செலுத்தப்படலாம். எவ்வாறு பட்டுவாடா தொகை அளிக்கப்படும் என்று உங்கள் பிரிவு ஒப்பந்தத்தில் நீங்கள் செய்யக்கூடிய பல ஏற்பாடுகளில் ஒன்றாகும். அல்லது, நீதிமன்றத்தில் முடிவு செய்யக்கூடிய விஷயங்களில் இதுவும் ஒன்றாகும்.

**Q** ***நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு வழக்கறிஞரிடம் சென்று எங்களது குடும்ப சொத்தை எப்படிப் பிரிப்பது என்று சட்டம் சொல்வது பற்றி சில தகவல்கள் மற்றும் ஆலோசனையைப் பெற்றோம். தற்பொழுது விஷயங்களைப் பற்றி நாங்களே சொந்தமாக ஒப்பந்தத்திற்கு வந்துள்ளோம். சட்டம் சொல்வதைக் காட்டிலும் எங்களது பிரிவு ஒப்பந்தம் வித்தியாசமாகப் பிரிக்குமா?***

**A** ஆம். உங்கள் பிரிவு ஒப்பந்தத்தில் எந்த வழியிலும் உங்கள் சொத்தைப் பிரிப்பதற்கு உங்களுக்குச் சுதந்திரம் உள்ளது. நீங்கள் உங்களது பிரிவு ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் முன்பாக உங்கள் ஒவ்வொருவரின் வழக்கறிஞரும் அதைப் பார்வையிட வேண்டும். உங்களது பிரிவு ஒப்பந்தத்தைப் பின்னாளில் நீங்கள் எளிதாக மாற்ற முடியாது.

**Q** ***என் தந்தையிடமிருந்து ஒரு காரை நான் பரிசாகப் பெற்றேன். எங்களது திருமணத்தின் பொழுது நான் பெற்ற பரிசுகளின் மதிப்பை நாங்கள் பிரிந்தால், நான் பகிர்ந்திட வேண்டியதில்லை என்று சட்டம் சொல்கிறது என்று நான் அறிவேன். அந்த காரை விற்பதற்கு நான் முடிவு செய்திருக்கிறேன். காரை நான் விற்கும் பொழுது, நான் பெறும் பணம், நாங்கள் பிரியத் தீர்மானித்தால் என் வாழ்க்கைத் துணையுடன் நான் கண்டிப்பாக பகிர்ந்து கொள்ள வேண்டிய சொத்தின் பகுதியாக ஆகி விடுமா?***

**A** அவசியமில்லை. நீங்கள் தனியாக அந்த பணத்தை வைத்திருந்தால், காரின் விற்பனைத் தொகையை எப்பொழுதும் பின் தொடர்ந்து காணக்கூடிய அளவில், உதாரணமாக ஒரு சேமிப்பு பாண்ட்டில் வைத்துக் கொண்டால் உங்கள் திருமண முடிவின் பொழுது நீங்கள் கண்டிப்பாகப் பகிர வேண்டிய சொத்திலிருந்து அதை விலக்கி வைக்கலாம்.

குடும்ப இல்லத்தைப் பாதிக்கும் இந்த பொதுவான விதிக்கு ஒரு முக்கியமான விதிவிலக்கு உள்ளது. கார் விற்பனைத் தொகையை நீங்கள் உங்கள் குடும்ப இல்லத்தின் அடமானத்தொகை செலுத்துவதற்குப் பயன்படுத்தினால் அல்லது இல்லத்தைப் புதுப்பிப்பதற்குப் பயன்படுத்தினால், நீங்கள் பிரியும் பொழுது உங்கள் வாழ்க்கைத் துணையுடன் குடும்ப இல்லத்தின் முழு மதிப்பை உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நீங்கள் கண்டிப்பாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும். குடும்ப இல்லத்தில் ஒரு முறை பணத்தை இட்டு விட்டால் அது கண்டிப்பாக பகிரப்பட வேண்டும், அந்த பணம் ஒரு பரிசாக அல்லது பரம்பரைச் சொத்தாக வந்தாலும் சரி அல்லது உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நீங்கள் பகிரத் தேவையில்லாதது என்று சட்டம் கூறும் பிற சொத்து ஆனாலும் சரி.

**Q** ***என் மனைவியின் தவறால் எங்களது திருமணம் முறிந்துள்ளது. வேறு யாரோ ஒருவரை அவள் பார்க்கத் தொடங்கினாள் மற்றும் இந்த திருமணத்திலிருந்து விலக முடிவெடுத்துள்ளாள். இந்த புதியவன் பெறும் வகையில் என் சொத்தின் மதிப்பை நான் ஏன் அவளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்?***

**A** உங்களது வாழ்க்கைத் துணையின் புதிய உறவுமுறையினால் உங்கள் திருமண முறிவினால் ஏற்பட்ட சொத்து பிரிவினையில் எந்த பாதிப்பும் இல்லை. குடும்ப சொத்து பிரிப்பது பற்றிய சட்டத்தில் உங்கள் திருமணம் ஏன் முறிந்தது என்பது பற்றி எதுவுமில்லை. சட்டம் ஒரு திருமணத்தை ஒரு சமமான பங்குதார அமைப்பாகப் பார்க்கிறது. அது முறிந்ததும், பங்குதார அமைப்புகளின் நிதிப் பலன்கள் சமமாகவும் நியாயமாகவும் பிரிக்கப்பட வேண்டும். யார் மீது தவறு அல்லது யாரைக் குற்றம் சொல்வது என்று பார்க்காமல் கணக்கீடுகள் செய்யப்படுகின்றன.

**Q** ***என் கணவர் 32 வருடங்களாக நிறுவனக் காப்பீட்டு பென்ஷன் திட்டங்களில் செலுத்தி வருகிறார். குழந்தைகளின் மேற்பார்வைக்காக நான் வீட்டில் வசித்து வந்திருக்கிறேன் மற்றும் இப்பொழுது ஒரு சிறிது கூடுதல் பணத்திற்காக நான் தற்காலிக வேலைகளைச் செய்து வருகிறேன். நாங்கள் பிரிந்து விட்டால், அவரது பென்சனில் ஒரு உரிமை எனக்கு உள்ளதா?***

**A** ஆம். பெரும்பாலான வழக்குகளில், ஒரு தொழில்முறை நிதி ஆலோசகர் அல்லது கணக்கீட்டாளர் உங்கள் வாழ்க்கைத் துணையின் பென்ஷன் திட்டத்தை அதன் மதிப்பை நிலைநாட்டுவதற்காகப் பார்வையிட வேண்டும். இந்த தொகை குடும்ப இல்லத்தில் உங்கள் வாழ்க்கைத் துணையின் குடும்ப சொத்தின் பங்கில் சேர்க்கப்படுகிறது. அல்லது, நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையும், அவர் தனது பென்ஷனைப் பெறத் துவங்கும் பொழுது, அதில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தைப் பெறுவீர்கள் என்று ஒப்புக் கொள்ளலாம். அந்த காகிதப்பணி முறையாக செய்து முடிக்கப்படுகிறதா என்று உறுதி செய்வதற்கு ஒரு வழக்கறிஞரை நீங்கள் பார்க்க வேண்டும்.

**முக்கியமானது :** நீங்கள் பிரிந்த உடனே, பென்ஷன் சட்டத்தின் கீழ் நீங்கள் ஒரு வாழ்க்கைத் துணையாக அடையாளப்படுத்தப்படுவதில்லை. உதாரணமாக, நீங்கள் பிரிந்ததும் ஆனால் நீங்கள் ஒப்பந்தம் ஏதும் செய்வதற்கு முன்னால் உங்கள் வாழ்க்கைத் துணை இறந்து விட்டால், உயிர் பிழைத்தவருக்கு உரிய நலன்களில் உங்களுக்கு ஒரு உரிமை இல்லை. அவரது பென்ஷன் மீது உங்கள் உரிமைகள் பற்றி உங்களது ஒப்பந்தம் அல்லது நீதிமன்ற ஆணை தெளிவாக இருப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

**Q** ***கடந்த கோடை காலத்தில், என் சகோதரனும் நானும் என் வீட்டில் கூடுதல் கட்டினோம். அந்த கூடுதல்கட்டிட செலவு $10,000 ஆகியது மற்றும் வீட்டின் மதிப்பை $20,000 உயர்த்தியது. இப்பொழுது என் மனைவி மற்றும் நான் பிரிந்து கொண்டிருக்கிறோம். அந்த $20,000 தொகையை நான் திரும்பப் பெறலாமா?***

**A** இல்லை. உங்கள் குடும்ப இல்லத்தின் முழு மதிப்பையும் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் நீங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும். உங்கள் இல்லத்தினுள் நிறையப் பணம் நீங்கள் இட்டீர்கள் அல்லது வேலை பார்த்தீர்கள் என்பது பொருட்படமாட்டாது. இந்த விதிக்கு மிகவும் குறுகிய விதிவிலக்குகள் உள்ளன.

**Q** ***என் பெற்றோர்கள் இறக்கும் பொழுது தங்களது வீட்டை எனக்கு விட்டுச் சென்றார்கள். அதில் கடந்த இரண்டு வருடங்களாக என் வாலிப நண்பனுடன் நான் வசித்து வந்திருக்கிறேன். திருமணம் செய்து இங்கு குடும்பம் நடத்த நாங்கள் திட்டமிட்டு வருகிறோம். எங்களது திருமணம் சரியாகச் செல்லவில்லை என்றால் வீட்டை அவனிடம் நான் இழக்க விரும்பவில்லை. என்ன நிகழ்ந்தாலும் வீடு என்னுடையதுதான் என்று எங்களது திருமண ஒப்பந்தத்தில் நான் கூற முடியுமா?***

**A** ஆம். உங்கள் திருமண ஒப்பந்தம், வீடு உங்களுக்குச் சொந்தமானது மற்றும் நீங்கள் திருமணம் செய்த பொழுது அதன் மதிப்பு மற்றும் உங்கள் மணவாழ்க்கைக் காலத்தில் ஏதும் மதிப்பு *உயர்ந்தால்* அது உங்களுடையது என்று கூறலாம். ஆனால், உங்கள் திருமணம் முறிந்தால் அந்த குடும்ப இல்லத்தில் தங்குவதற்கு உங்களைப் போன்றே உங்கள் வாழ்க்கைத் துணைவருக்கும் இருக்கும். இதை மாற்றுவதற்கு உங்கள் திருமண ஒப்பந்தத்தில் எதையும் நீங்கள் இட முடியாது.

உங்கள் திருமணம் முறிந்தால், நீங்கள் சம்மதிக்கும் வரை, அல்லது நீதிமன்றம் முடிவு செய்யும் வரை அல்லது பிற ஏற்பாடுகள் வரை உங்கள் வாழ்க்கைத் துணை அந்த வீட்டில் தங்கியிருக்க இயலும்.

**Q** ***நாங்கள் ஒரு பெரிய பால் பண்ணையில் வசிக்கிறோம். அந்த முழுப் பண்ணையும் எங்களது குடும்ப இல்லமாகக் கருதப்படுகிறதா?***

**A** இல்லை. உங்கள் குடும்ப இல்லம் என்பது நீங்கள் வசிக்கும் பண்ணையின் பகுதி, வீடு மற்றும் அதைச் சுற்றிலும் உள்ள சிறிய பகுதி மட்டுமே. மீதமுள்ள பண்ணைப் பகுதி பிற சொத்தைப் போன்றதே ஆகும். இது குடும்ப இல்லங்களுக்காக சிறப்பு விதிகளால் உட்பட்டிருக்கவில்லை.

**Q** ***எல்லாவற்றிளாலும் நான் நிலைகுலைந்திருக்கிறேன், இப்பொழுதே சொத்து விபரங்களின் பட்டியலை இட என்னால் சமாளிக்க முடியவில்லை. இதை இப்பொழுதே நான் செய்ய வேண்டுமா?***

**A** நீங்கள் பிரிந்த நாளிலிருந்து நீதிமன்றத்திற்குச் சென்று சமமாக்கும் பட்டுவாடா தொகையின் அளவு பற்றி ஒரு முடிவைக் கேட்க உங்களுக்கு ஆறு வருடங்கள் உள்ளன. நீங்கள் விவாகரத்து ஒன்று பெற்றால், உங்களுக்கு குறைவான காலமே இருக்கலாம். நீதிமன்றத்திற்குச் செல்ல, நீங்கள் பிரிந்த நாளில் இருந்து ஆறு வருடங்களும், அல்லது உங்கள் விவாகரத்து முடிவான தேதியிலிருந்து இரண்டு வருடங்களும் இருக்கும், இதில் எந்த தேதி முதலில் வருகிறதோ.

**Q** ***நாங்கள் வெளியேறி விட்டால், பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எங்களுக்கு ஒரு வாய்ப்பு வருமுன் எங்களது எல்லா குடும்ப சொத்துக்களும் மறைந்து விடும் என்று நான் கவலைப்படுகிறேன். என் கணவர் நான் பகிர்வதைத் தடுக்க அதைத் தொலைத்து விடுவார் என்று நான் நினைக்கிறேன். இதில் நான் செய்யக்கூடியது எதுவும் உள்ளதா?***

**A** ஆம். நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று உங்கள் வாழ்க்கைத் துணைவர் சொத்துக்களைக் கரைப்பதைத் தடுக்கும்படி நீதிமன்றத்தைக் கேட்கலாம். நீதிமன்றம் அவரை சொத்துக்களை விற்கவோ அல்லது முடிக்கவோ

செய்யக்கூடாது என்று கூறலாம் அல்லது அதைப் பாதுகாக்க வேறு யாராவது ஒருவரது கவனிப்பில் அதை விட ஆணையிடலாம்.

### பொதுவான சட்ட தம்பதிகள்

**Q** ***நாங்கள் திருமணம் செய்யவில்லை ஆனால் 15 வருடங்களாகச் சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறோம். நாங்கள் பிரிந்து விட்டால், எங்களது சொத்துக்களின் மதிப்பை நாங்கள் பகிர்ந்து கொள்ள வேண்டுமா?***

**A** இருக்கலாம். திருமணமான தம்பதிகளுக்கு மட்டுமே குடும்ப சொத்தில் பாதி கிடைப்பதற்குத் தானாகவே சட்ட உரிமை உள்ளது. உங்கள் வாழ்க்கைத் துணைக்குச் சொந்தமான சொத்திற்கு நீங்கள் பங்களிப்பு செய்த தொகையைத் திருப்பித் தரும்படி கேட்கலாம். உங்கள் வாழ்க்கைத் துணைவர் சம்மதிக்கவில்லை என்றால், உங்கள் கோரிக்கைக்காக நீங்கள் நீதிமன்றம் செல்லலாம். ஆனால் அந்த கோரிக்கை மற்றொரு சட்டப் பகுதியின் அடிப்படையில் இருக்கும், குடும்ப சட்டம் அல்ல. அறிவுரைக்கு ஒரு வழக்கறிஞரைக் கேட்கவும்.

## உங்கள் கணவர் அல்லது மனைவியின் மரணத்திற்குப் பிறகு சொத்தைப் பிரிப்பது

உங்கள் கணவர் அல்லது மனைவி இறந்ததும் உங்கள் குடும்ப சொத்தைப் பிரிப்பதற்கு, பிரிவின் பொழுது குடும்ப சொத்தைப் பிரிப்பது பற்றிய சட்டத்தை உபயோகப்படுத்தலாம். இதைச் செய்வதால் பலன்கள் இருக்கலாம்.

உங்கள் குடும்ப சொத்தைப் பிரிப்பதற்கு இந்த சட்டங்களை உபயோகிக்க நீங்கள் விரும்புகிறீர்கள் என்று நீதிமன்றத்திடம் ஒரு ஆவணம் சமர்ப்பிப்பதற்கு உங்கள் கணவரின் அல்லது மனைவியின் மரணத்தின் காலத்திலிருந்து ஆறு மாதங்கள் இருக்கின்றன. ஒரு முடிவு எடுப்பதற்கு முன்பாக நீங்கள் ஒரு வழக்கறிஞரைப் பார்க்க வேண்டும்.

### ஒரு உயில் இருந்தால்

உங்கள் கணவர் அல்லது மனைவி இறக்கும் பொழுது அவர் அல்லது அவளது சொத்தை எவ்வாறு பிரிப்பது என்று கூறும் ஒரு உயிலை விட்டுச் சென்றால் உங்களுக்கு ஒரு தேர்வு உள்ளது. உயிலில் விட்டுச் சென்ற சொத்தை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் அல்லது பிரிவு வழக்கில் பொருந்தக்கூடிய அதே விதிகளை உபயோகப்படுத்தி உங்கள் குடும்ப சொத்தை நீங்கள் பிரிக்கலாம்.

**பக்கம் 35**

உங்கள் கணவர் அல்லது மனைவி அவர் அல்லது அவளது பெரும்பாலான சொத்துக்களை உங்கள் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் அல்லது பிற மக்களுக்கு விட்டுச் சென்றால் இந்த விதிகள் உங்களுக்கு நிதி ரீதியாக அனுகூலமாக இருக்கலாம்.

நீங்கள் பிரிந்து விட்டால் செய்வது போலவே உங்களது எல்லா சொத்தையும் ஒரு பட்டியலிட வேண்டும். உங்கள் சொத்தின் மதிப்பை உங்கள் கணவர் அல்லது உங்கள் மனைவி இறக்கும் முன்னர் மதிப்பு எவ்வாறு இருந்ததோ அதைப் போன்றே நீங்கள் கணக்கிட வேண்டும்.

## உயில் இல்லா விட்டால்

உங்கள் கணவர் அல்லது மனைவி ஒரு உயில் இல்லாமல் இறந்து விட்டால், ஒரு சிறப்புச் சட்டம் உள்ளது. *வாரிசு உரிமைச் சட்ட சீர்திருத்தச் சட்டம்* உள்ளது. அது உயிர் பிழைத்திருக்கும் குடும்பத்தினர் இடையே சொத்தினை எவ்வாறு பிரிப்பது என்று கூறுகிறது.

அந்த சட்டத்திற்கு ஏற்ப சொத்துப் பிரிவினையை நீங்கள் ஏற்கலாம், அல்லது பிரிவினையின் பொழுது பொருந்தும் விதிகளை உபயோகித்து நீங்கள் சொத்தினைப் பிரித்துக் கொள்ளலாம்.

## குடும்ப இல்லத்தில் தங்கியிருப்பதற்கு உங்கள் உரிமை

உங்கள் கணவர் அல்லது மனைவி உங்கள் குடும்ப இல்லத்தைச் சொந்தமாக வைத்திருந்து வேறொருவருக்கு விட்டிருந்தால், அந்த நபர் உங்கள் கணவர் அல்லது மனைவியின் மரணத்தின் மறு நாள் உங்கள் இல்லத்திற்கு உரிமை கொண்டாட முடியாது. உங்கள் குடும்ப இல்லத்தில் 60 நாட்கள் தங்கியிருப்பதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. இந்த சமயத்தில் நீங்கள் வாடகை கொடுக்க வேண்டியதில்லை.

## பணம் தருபவர் இறந்ததும் தொடரும் ஆதரவு பணப் பட்டுவாடாக்கள்

உங்கள் டொமெஸ்டிக் கான்ட்ராக்ட் அல்லது ஒப்பந்தம், அவரது அல்லது அவளது மரணத்திற்குப் பிறகும் உங்கள் வாழ்க்கைத் துணையின் எஸ்டேட் கண்டிப்பாக தொடர்ந்து உங்களுக்கு ஆதரவு பணப்பட்டுவாடாக்களை அளிக்க வேண்டும் என்று கூறலாம்.

டொமெஸ்டிக் கான்ட்ராக்ட், ஒப்பந்தம் அல்லது ஆணை, பணம் தருபவரது மரணத்திற்குப் பிறகு அவை கண்டிப்பாக தொடர வேண்டும் என்று கூறினால் மட்டுமே மார்ச் 1, 1986க் கு முன்னர் அல்லது *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் செய்த ஆதரவு ஏற்பாடுகளின்படி ஒரு நபரின் எஸ்டேட்டிலிருந்து கண்டிப்பாக தரப்பட வேண்டும்.

நீதிமன்றம் செய்த ஒரு உத்தரவின் கீழ் *குடும்ப சட்ட விதியின்* கீழ் (மார்ச் 1, 1986 அன்று அல்லது அதற்குப் பிறகு) நீங்கள் ஆதரவு பணப்பட்டுவாடாக்கள் பெற்று வந்திருக்கிறீர்கள் என்றால், உஙகள் முன்னாள் வாழ்க்கைத் துணையின் எஸ்டேட், நீதிமன்ற ஆணை வித்தியாசமாகக் கூறினால் தவிர கண்டிப்பாகத் தொடர்ந்து ஆதரவுப் பணப்பட்டுவாடாக்களைச் செலுத்த வேண்டும்.

உங்கள் ஆணை, *விவாகரத்து ஆக்டின்* கீழ் செய்யப்பட்டது மற்றும் பணம் தருபவரது மரணத்திற்குப் பிறகு உங்கள் ஆதரவுப் பணப்பட்டுவாடாக்கள் தொடர்வது பற்றிக் கூறவில்லை என்றால், அல்லது உங்களுக்கு இருந்து வரும் ஆணை எத்தகையது என்று உங்களுக்குத் தெரியா விட்டால், ஒரு வழக்கறிஞரை நீங்கள் ஆலோசிக்க வேண்டும்.

குடும்ப பொறுப்பு அலுவலகம் (எ்ப்ஆர்ஓ), பணம் தருபவரது மரணம் பற்றி எ்ப்ஆர்ஓ வுக்குத் தெரியப்படுத்திய பின் பணம் தருபவரது எஸ்டேட் மீது ஒரு ஆதரவு ஆணையை பிரயோகிக்க முடியாது.

**Q** ***என் மனைவி இறந்த பொழுது, அவளது ஆயுள் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து ஒரு இறப்பு நலன் நிதித் தொகையை நான் பெற்றேன். அந்த பணத்தை நான் சவ அடக்கச் செலவுகளுக்குப் பயன்படுத்தினேன். இப்பொழுது விஷயங்களைப் பற்றி புரிந்து கொள்ள எனக்கு ஒரு வாய்ப்பு உள்ளதால், பிரியும் பொழுது குடும்ப சொத்தைப் பிரிப்பதற்குப் பொருந்தும் விதிகளைப் பயன்படுத்தி குடும்ப சொத்தை நான் பிரிக்க விரும்புகிறேன். இது மிகவும் தாமதமாகி விட்டதா?***

**A** இல்லை. குடும்ப சொத்தைப் பிரிப்பதற்கு, பிரிவில் பொருந்தும் விதிகளை இன்னமும் நீங்கள் உபயோகப்படுத்தலாம். நீங்கள் கண்டிப்பாக காப்பீட்டுப் பணத்தொகையை உங்கள் வாழ்க்கைத் துணையின் எஸ்டேட்டிலிருந்து நீங்கள் பெற இருக்கிற, சமமாக்கும் தொகையிலிருந்து கழிக்க வேண்டும், அவள் எழுத்தால் குறிப்பிட்டிருந்தால் தவிர, நீங்கள் காப்பீட்டுத் தொகை மற்றும் சமமாக்கும் பணத்தொகைகளைப் பெறலாம். சவஅடக்கச் செலவுகளுக்குச் செலவழித்த தொகையை எஸ்டேட் உங்களுக்கு திருப்பி வழங்க நீங்கள் கேட்கலாம்..

# III. குடும்ப வன்முறை

குடும்ப வன்முறை ஒன்டேரியோவில் சகித்துக் கொள்ளப்படுவதில்லை. எல்லா ஒன்டேரியன்களுக்கும் தங்களது வீடுகள் மற்றும் சமுதாயங்களில் பாதுகாப்பாக உணர்வதற்கு உரிமை உள்ளது. பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருமே குடும்ப வன்முறையால் பாதிக்கப்படலாம் என்றாலும், மிகப் பெரும்பான்மையான வன்முறை ஆண்கள் பெண்களை நிந்தனை செய்வதாகும். வன்முறை, பாதிக்கப்பட்டவர்கள் மீது நீடித்திருக்கும் மற்றும் குழந்தைகள் மீது ஒரு சோகமான தாக்கமும் கொண்டது ஆகும்.

மற்ற நபரை மிரட்டுவது, அடிப்பது, உதைப்பது, குத்துவது, தள்ளுவது, மறைந்து பின்தொடர்வது மற்றும் தொல்லை தருவது இவைகள் குற்றங்களாகும். ஒரு நபரின் விருப்பத்திற்கு மாறாக பாலியல் உறவு கொள்வதும் ஒரு குற்றமாகும். திருமணமாகி இருப்பது இதை மாற்றுவதில்லை. இந்த செயல்களைப் புரியும் ஒரு நபரைக் கைது செய்யலாம், குற்றம் சாட்டலாம், தண்டனை அளிக்கப்படலாம் மற்றும் சிறையில் அடைக்கப்படலாம்.

கனடாவின் *கிரிமினல் கோடு* படி இவைகள் குற்றங்களாகக் கருதப்படவில்லை என்றாலும் கூட மனோரீதியில், உணர்வு ரீதியில் மற்றும் நிதி ரீதியில் நிந்தனை சகித்துக் கொள்ளக்கூடாது.

நீங்கள் அல்லது உங்கள் குழந்தைகள் இந்த வகையான நிந்தனைகளில் ஏதேனும் ஒன்றை அனுபவிக்கிறீர்கள் என்றால், நீங்கள் தனிமையில் இல்லை. உங்களுக்கு உதவி கிடைக்கிறது. நீங்கள் மிரட்டப்பட்டால் அல்லது உடல்ரீதியாக அல்லது பாலியல் ரீதியாகத் தாக்கப்பட்டால், போலீஸை அழைக்கவும்.

நீங்கள் போலீஸை அழைக்க விரும்பா விட்டால், அல்லது பிற வடிவிலான நிந்தனைகளை நீங்கள் அனுபவித்து வருகிறீர்கள் என்றால், உங்களுக்கு உதவிட உங்கள் சமுதாயத்தில் வளங்கள் உண்டு. அவற்றில் சில கைப்புத்தகத்தின் பின்பக்கம் பட்டியலிடப்பட்டுள்ளது.

**பக்கம் 59**

உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பாதுகாத்திட நீங்கள் என்ன செய்திடலாம் என்று ஒரு வழக்கறிஞரிடம் பேசுங்கள். உங்கள் மருத்துவர், உங்கள் சமுதாயத் தகவல் மைய மக்கள் அல்லது சமுதாய ஆரோக்கிய மையம் இவர்களிடமும் நீங்கள் பேசலாம். உங்கள் சமுதாயத்தில் உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் உதவிடக் கூடிய சேவைகள் பற்றி அவர்கள் அறிவார்கள். உங்கள் மருத்துவர் உங்கள் காயங்களைக் கவனித்துக் கொள்ளலாம் மற்றும் உங்களது கோப்பில் அவைகளைப் பற்றி ஒரு குறிப்பும் எழுதி வைத்துக் கொள்வார். நீங்கள் தாக்கப்பட்டீர்கள் என்று நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியிடம் நிரூபிப்பதற்கு இந்த பதிவுகள் பயன்படுத்தப்படலாம்.

**பக்கம் 59**

தாக்கப்பட்ட பெண்களுக்கான ஹெல்ப்லைன் ஒரு கட்டணம்-இல்லாத ஆபத்துக்கால, ஒரு நாளில் 24 மணி நேரமும், ஒரு வாரத்தில் ஏழு நாட்களும் மாநிலன்ஸ் முழுவதும் இயங்கும் தொலைபேசிச் சேவை ஆகும். பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் உங்கள் தேர்வுகளை முடிவு செய்ய உதவிடலாம், புகலிடங்கள் மற்றும் பாலியல் தாக்குதல் மையங்கள் போன்ற லோக்கல் ஆதரவுகள் பற்றிய தகவல்களை வழங்கிடலாம் மற்றும் ஒரு உடனடியான பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கவும் உதவிடலாம். 150 மொழிகளில் உடனடி மொழிபெயர்ப்பாளர்கள் அழைப்பவர்களுக்குப் பதிலளிக்கக் கிடைக்கின்றனர். 1-866-863-0511 அழையுங்கள் அல்லது டொரண்டோ அழைப்புப் பகுதியில் 416-863-0511, TTY 1-866-863-7868 அழையுங்கள்.

அத்துடன், பாதிக்கப்பட்டோர் ஆதரவு தொலைபேசிக்கு (VSL) 1-888-579-2888 என்ற எண்ணிற்கு நீங்கள் அழைக்கலாம். இது ஒரு நெருக்கடிநிலைக்கான எண் இல்லை என்றாலும் கூட, விஎஸ்எல் ஊழியர்கள் பொருத்தமான சமுதாய அடிப்படையிலான உதவிச் சேவை எங்குள்ளது என்று கண்டறிந்து உதவி வழங்கிட முடியும். குற்றத்திற்கான நீதி அமைப்பு, கைது, தண்டனை மற்றும் விடுதலைச் செயல்முறைகள் உட்பட அது எப்படிப் பணி புரிகிறது என்பது பற்றிய பதிவு செய்த தகவல்களையும் தொலைபேசியில் அழைப்பவர்கள் பெறலாம்.

உங்கள் வாழ்க்கைத் துணைவர் உங்களை நிந்தனை செய்தார் மற்றும் தற்பொழுது அவர் மாநிலச் சிறையில் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தாலும், நீங்கள் விஎஸ்எல்லை அழைத்து பாதிக்கப்பட்டோர் தெரிவிப்பு அமைப்பில் பதிவு செய்து அந்த நிந்தனை செய்தவரது விடுதலை தேதி பற்றிய தகவலைப் பெறலாம்.

உங்கள் வழக்கு குற்றப்பிரிவு நீதிமன்றத்திற்குச் சென்றால், பல சமுதாயங்களில் பாதிக்கப்பட்டோர்/சாட்சி உதவி திட்ட அலுவலகம் ஒன்று நீதிமன்ற நடைமுறையில் உங்களுக்கு உதவிட உள்ளது. உங்கள் சமுதாயத்தில் குடும்ப வன்முறை நீதிமன்ற திட்டம் ஒன்றும் இருக்கலாம். இதன் பாகமாக, பாதிக்கப்பட்டோர்/சாட்சி உதவி திட்ட ஊழியரிடமிருந்து தகவல்கள் மற்றும் உதவியை நீங்கள் பெறுவீர்கள். அத்துடன், நீதிபதி ஒருவர் குற்றம் இழைத்தவரை ஒரு விசேட 16-வார கல்வி மற்றும் ஆலோசனைத் திட்டத்தில் கலந்து கொள்ள உத்தரவிடலாம்.

உங்கள் சமுதாயத்தில் உள்ள வளங்கள் பற்றித் தெரிந்து கொள்வது முக்கியமாகும். நீங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டி உள்ளது மற்றும் உங்களிடம் பணம் எதுவும் இல்லை மற்றும் தங்குவதற்கு இடமும் இல்லை என்றால், சமூக உதவி, மானியத்துடன் வீடு, சட்ட உதவி மற்றும் இலவச ஆலோசனை இவைகளை நீங்கள் பெறக்கூடும்.

***Q*** ***என் வாழ்க்கைத் துணைவர் நிந்தனை செய்த பொழுது அன்றொரு இரவில் நான் வீட்டை விட்டு வெளியேறி விட்டேன். நான் என் குழந்தைகளை விட்டு விட்டுச் சென்றதால், நான் நீதிமன்றத்தை அனுகினால், என் குழந்தைகளின் பாதுகாப்புப் பொறுப்பைத் தானாகவே என் வாழ்க்கைத் துணைவர் பெற்று விடுவார் என்று என் தோழி கூறுகிறாள். இது உண்மையா?***

***A*** இல்லை. நிந்தனை செய்யும் ஒரு வாழ்க்கைத் துணையை விட்டு நீங்கள் விலகுகிறீர்கள் என்றால், உங்கள் குழந்தைகளின் பாதுகாப்புப் பொறுப்பைக் கேட்பதற்கும் மற்றும் அவர்களுக்கு மற்றும் உங்களுக்கான ஆதரவைக் கேட்பதற்கும் உங்களுக்கு உரிமை உள்ளது. வீட்டை விட்டுச் சென்றது நீங்கள் தான் என்பதால் இந்த உரிமையை நீங்கள் இழக்கவில்லை. குழந்தைகளின் பாதுகாப்பு பொறுப்பு யாரிடம் விடுவது என்பது பற்றி நீதிபதி ஒருவர் முடிவு செய்யும் பொழுது குழந்தைகளின் சிறந்த நலன்களை அவர் பார்க்க வேண்டும். உங்கள் வாழ்க்கைத் துணைவர் நிந்தனை செய்து வந்தார் என்பதை நீதிபதி அறியட்டும். பாதுகாப்பு பொறுப்பு மற்றும் பார்க்க அனுமதி பற்றி முடிவு செய்கையில் நீதிபதி கண்டிப்பாக, ஒரு நபர் தனது வாழ்க்கைத் துணை மற்றும் குழந்தைகளிடம் வன்முறையாளராக அல்லது நிந்தனையாளராக இருந்தாரா என்று பார்க்க வேண்டும். இருந்த போதிலும், உடனே ஒரு வழக்கறிஞரை நீங்கள் பார்த்து பாதுகாப்பு பொறுப்பு பற்றிய கேள்விகளை விரைவில் தெளிவு செய்வது முக்கியமாகும். உங்கள் குழந்தைகள் உங்களுடன் இல்லாமல் கொஞ்ச காலம் உங்கள் வாழ்க்கைத் துணைவருடன் வசித்து வந்திருக்கிறார்கள் என்றால், நீதிபதி ஒருவர் அவர்களது வாழும் சூழலை மாற்ற விரும்பாமல் இருக்கலாம்.

குழந்தைகளுடன் நீங்கள் விலகிச் சென்றாலும், கூடிய விரைவில் பாதுகாப்புப் பொறுப்பை நீங்கள் முடிக்க வேண்டும்.

# நிந்தனையால் பாதிக்கப்பட்டோர்களுக்கான சட்டங்கள்

வன்முறையிலிருந்து உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பாதுகாப்பதற்கு சட்டங்கள் உள்ளன.

### பார்க்க அனுமதிக்கான ஆணைகள்

நீதிபதி ஒருவர், ஒரு நபரின் குழந்தையைக் கவனிக்கும் திறன் பற்றி சிந்திக்கும் பொழுது அந்த நபர் வன்முறையாளராக அல்லது நிந்தனை செய்பவராக இருந்திருக்கிறாரா என்று கண்டிப்பாகக் கருதிப் பார்க்க வேண்டும். ஒன்டேரியோவின் குழந்தை பாதுகாப்புச் சட்டங்கள் குழந்தைகளை உடல்ரீதியான, பாலியல் ரீதியான மற்றும் உணர்வு ரீதியான துன்பத்திலிருந்து காத்திடுகின்றன. இந்த நடத்தையும் ஒரு குற்றமாக இருக்கலாம். மற்றொரு பெற்றோரால் உங்கள் குழந்தை நிந்தனை செய்யப்பட்டு பாதிக்கப்பட்டிருந்தால், நீதிமன்றத்திடம் குழந்தைகளைப் பார்க்க அனுமதி மறுக்கவும் அல்லது கண்காணிப்பின் கீழ் மட்டும் பார்க்க அனுமதியும் கேட்கலாம்.

## தடுக்கும் ஆணைகள்

குடும்ப வன்முறைக்கு ஆளான ஒரு நபர் நீதிமன்றத்திடம் தடுக்கும் ஆணை ஒன்றைச் செய்யக் கேட்கலாம். தடுக்கும் ஆணை ஒன்றை நீங்கள் கேட்கிறீர்கள் என்றால் ஒரு வழக்கறிஞரிடம் பேசுவது ஒரு நல்ல யோசனை ஆகும். தடுக்கும் அந்த ஆணை பொதுவாக இருக்கலாம்-உங்கள் வாழ்க்கைத் துணை உங்களை விட்டு விலகி இருக்க வேண்டும்- அல்லது அது குறிப்பாகவும் இருக்கலாம். உங்கள் இல்லத்திற்கு, உங்கள் குழந்தைகளின் பள்ளிக்கு அல்லது நீங்கள் அடிக்கடி செல்லும் பிற இடங்களுக்கு உங்கள் வாழ்க்கைத் துணை கண்டிப்பாக வரக்கூடாது என்று அது கூறலாம் (உதாரணமாக, நீங்கள் வணங்கச் செல்லும் இடம் அல்லது உங்கள் பெற்றோரின் இல்லம்).

அந்த தடுக்கும் ஆணை உங்கள் வாழ்க்கைத் துணை மீது முடிந்த வரை விரைவில் வழங்கப்பட வேண்டும், ஆனால் நீங்களாகவே வழங்கத் தேவையில்லை. உங்களுக்காக வேறு யாராவது வழங்குவது சிறந்தது ஆகும். அது முடியாவிட்டால், நீதிமன்ற ஊழியர் உங்களுக்கு உதவுவார்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணை அந்த தடுக்கும் ஆணையைப் பணிந்து நடக்கா விட்டால், நீங்கள் போலீஸை அழைக்கலாம். அந்த தடுக்கும் ஆணையைப் பார்க்க போலீஸ் விரும்புவார்கள். எல்லா நேரங்களிலும் உங்களுடனே அதை வைத்திருங்கள். அந்த தடுக்கும் ஆணை பற்றி உங்கள் வாழ்க்கைத் துணை அறிவாரா என்றும் அவர்கள் உங்களைக் கேட்கலாம். உங்கள் வாழ்க்கைத் துணை அந்த தடுக்கும் ஆணையைப் பணிந்து நடந்திருக்கவில்லை என்று போலீஸ் நம்பினால், அவன் அல்லது அவள் கைது செய்யப்படலாம்.

## குடும்ப இல்லத்தின் தனிப்பட்ட கையகப்படுத்தல்

உங்களுக்குத் திருமணமாகி இருந்தால், உங்கள் வீட்டில் வசிக்கும் உரிமைக்காகவும் உங்கள் வாழ்க்கைத் துணையை வெளியே போகச் செல்லவும் நீங்கள் நீதிமன்றத்திடம் கேட்கலாம். வீடு உங்கள் வாழ்க்கைத் துணைவரது பெயரில் இருந்தாலும் உங்கள் வீட்டில் தங்கியிருப்பதற்கு உங்களுக்கு ஒரு சம உரிமை உள்ளது. அந்த குடும்ப இல்லத்தின் தனிப்பட்ட கையகப்படுத்தலுக்கான ஆணையை நீங்கள் நீதிமன்றத்திடம் கேட்கிறீர்கள் என்றால் ஒரு வழக்கறிஞரிடம் பேசுவது நல்ல யோசனை ஆகும்.

நீங்கள் திருமணம் செய்யாமல் இருந்தால், உங்களுக்கு அல்லது உங்கள் குழந்தைக்கான ஆதரவின் ஒரு பகுதியாக, நீங்கள் சேர்ந்து வசித்து வந்த பொழுது நீங்கள் பகிர்ந்து கொண்ட வீட்டில் தங்கியிருப்பதற்கு அனுமதி கோரி நீங்கள் நீதிமன்றத்திடம் கேட்கலாம். அந்த வீடு உங்களுக்குச் சொந்தமானதல்ல என்றாலும் அல்லது உங்கள் பெயர் அந்த லீசில் இல்லை என்றாலும் கூட நீதிபதி இதை ஆணையிடலாம்.

உங்கள் வாழ்க்கைத் துணையை வீட்டை விட்டு வெளியேற ஆணையிடும் முன் நீதிபதி ஒருவர், அந்த உறவுமுறையில் வன்முறை இருந்ததா, நீங்கள் வசித்திட உகந்த இடம் வேறு உள்ளதா, குழந்தைகள் அந்த வீட்டில் தங்குவது அவர்களின் சிறந்த நலன்களுக்கு ஏற்றதா மற்றும் உங்கள் நிதி நிலைமை இவை யாவற்றையும் ஆலோசிப்பார்.

ஒரு தனிப்பட்ட கையகப்படுத்தல் ஆணைக்கு அந்த நீதிபதி சம்மதித்தால், உங்கள் வாழ்க்கைத் துணை கண்டிப்பாக வெளியேறி வீட்டுப் பக்கம் வராமல் இருக்க

வேண்டும். அவர் அல்லது அவள் வர முயற்சி செய்தால், நீங்கள் போலீசை அழைக்கலாம் மற்றும் அவர் அல்லது அவள் கைது செய்யப்படலாம்.

ஒரு வன்முறையான நபர் உங்களைத் துன்புறுத்துவதில் இருந்து தடுப்பதற்கு, தடுக்கும் ஆணைகள் மற்றும் தனிப்பட்ட கையகப்படுத்தும் ஆணைகள் போதுமானதாக இல்லாமல் இருக்கலாம். உங்கள் வாழ்க்கைத் துணை உங்களை அல்லது உங்கள் குழந்தைகளை ஏற்கெனவே நிந்தனை செய்து அல்லது தொல்லைப்படுத்தி சட்டத்தை மீறி வருகிறார் என்றால் அவர் உங்களை மீண்டும் துன்புறுத்தி பிற சட்டங்களையும் மீறத் தயாராக இருக்கலாம்.

இந்த நிலையில் நீங்கள் ஒரு பெண்ணாக இருந்தால், நீங்களும் உங்கள் குழந்தைகளும் சிறிது காலத்திற்கு வசிப்பதற்கு மிகவும் பாதுகாப்பான இடம் உங்கள் சமுதாயத்தில் உள்ள ஒரு பெண்களின் புகலிடம் ஆகும்.

### நிந்தனையைத் தடுத்திடுங்கள்

உங்கள் வாழ்க்கைத்துணையை நீங்கள் உடல்ரீதியாக அல்லது உணர்வு ரீதியாக நிந்தித்து வருகிறீர்கள் என்றால், அதை நிறுத்துவதற்கு நீங்கள் இவற்றில் சிலவற்றைச் செய்யலாம்.

நீங்கள் செய்யலாம்:

- உங்கள் வன்முறை நடத்தை பற்றி ஆலோசகர் ஒருவரிடம் பேசுங்கள்;
- தங்களின் வாழ்க்கைத் துணைகளை நிந்திக்கும் தனிநபர்களுக்கு உதவிடும் பிற குழுக்கள் பற்றி கண்டுபிடியுங்கள்;
- உங்கள் சமுதாயத்தில் உள்ள ஒரு குழுவின் தொலைபேசி எண்ணைப் பெறுவதற்கு உங்கள் மருத்துவர், ஒரு சமுதாயத் தகவல் மையம், ஒரு சமுதாய ஆரோக்கிய மையம், பாதிக்கப்பட்டோர் ஆதரவு லைன் அல்லது ஒரு ஆலோசனைச் சேவை இவைகளை அழைக்கலாம்;
- உங்கள் பணி இடத்திலுள்ள பணியாளர் உதவி திட்ட ஆலோசகரிடம் பேசுங்கள். அவர் உங்களுக்கு உதவக்கூடும்; மற்றும்
- நீங்கள் சொல்லுவதற்கு மற்றும் செய்வதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்.

- நீங்கள் தாக்கப்பட்டு வருகிறீர்கள் என்றால், போலீசை அழைக்கவும். நீங்கள் தாக்கப்பட்டு வருகிறீர்கள் என்று அவர்களிடம் கூறவும்.
- போலீஸ் வரும் பொழுது, தாக்குதல் ஒன்று நடந்திருக்கிறது என்று அவர்கள் நம்பினால் கண்டிப்பாக ஒரு குற்றப்பதிவை அவர்கள் செய்ய வேண்டும்.
- சப்தம் எழுப்புங்கள்: அண்டை வீட்டார் போலீஸை அழைக்கலாம்.
- போலீசை அழைக்க உங்கள் குழந்தைகளுக்கு கற்பியுங்கள்.
- உங்களால் முடிந்தால், நீங்கள் வெளியேறும் பொழுது குழந்தைகளையும் கூட்டிச் சென்று விடுங்கள்.
- பிற்பாடு உங்களுக்குத் தேவையான பொருட்களை எடுக்க உங்கள் இல்லத்திற்குத் திரும்பவும் செல்வதற்கு போலீஸ் உங்களுடன் உடன் வருமா என்று கேளுங்கள்.
- உங்கள் பெயரில் ஒரு வங்கிக் கணக்கு தொடங்குங்கள் மற்றும் வங்கி அறிக்கைகள் உங்களுக்குத் தபாலில் அனுப்பப்படாது என்ற ஏற்பாட்டைச் செய்யவும்.
- உங்களால் முடிந்த வரை சேமிக்கவும்.
- ஒரு டாக்சி கட்டணம் மற்றும் காசு கொடுத்துப் பேசும் தொலைபேசிகளுக்கான குவார்ட்டர்கள் இவைகளைத் தனியே ஒதுக்கி வைக்கவும்.
- உங்களது அவசரக்கால தப்பித்தல்களுக்குத் திட்டமிடவும்.
- அவசரக்கால எண்களை எல்லா நேரங்களிலும் உங்களிடம் வைத்திருக்கவும்.
- கூடுதல் துணிமணிகள், வீட்டுச் சாவிகள், கார்ச் சாவிகள், பணம் போன்றவைகளை ஒரு நண்பரின் வீட்டில் ஒளித்து வைக்கவும்.

**அவசரமாக நீங்கள் வெளியேற வேண்டியிருந்தால், இவைகளை எடுக்க முயற்சியுங்கள்**

- கூடுதல் கார் அல்லது வீட்டுச் சாவிகள்
- பாஸ்போர்ட்டுகள், பிறப்புச் சான்றிதழ்கள், குடியேற்றத்திற்கான தாள்கள், ஆரோக்கிய அட்டை, சமூகக் காப்பீட்டு எண்
- மருந்துப் பரிந்துரைகள் மற்றும் பிற மருந்துகள்
- ஏற்கெனவே அடுக்கிய நிலையில் உள்ள அவசரக்கால சூட்கேஸ், முடிந்தால்
- சில விசேட பொம்மைகள் மற்றும் உங்கள் குழந்தைகளுக்கான வசதிகள்

கூடுதல் விவரங்களுடனான பாதுகாப்புத் திட்டமிடலுக்கு, பார்க்கவும்:
www.shelternet.ca/en/women/making-a-safety-plan அல்லது
www.projectbluesky.ca/english/generalinfo/safetyplan.html

---

[2]ஒன்டேரியோவில் தாக்கப்பட்ட பெண்களின் சேவைகளுக்கான வழிகாட்டி, 1998

# IV. இவைகளைப் பற்றி கூடுதல் தகவல்களைக் கண்டிட…

## பழங்குடியினர் விஷயங்கள்

**கார்ஸ்வெல் பிரசுரித்த அபோரிஜினல் லா ஹேண்ட்புக். உள்ளூர் வாசகசாலை அல்லது நட்பு மையத்தில் பாருங்கள். கார்ஸ்வெல்லிடமிருந்து ஆர்டர் கொடுத்திட, கட்டணமில்லாத தொலைபேசி** 1-800-387-5164 ஐ அழைக்கவும் அல்லது இந்த இணையதளத்திற்கு வருகை தரவும்:*www.carswell.com*

## குழந்தை ஆதரவு வழிகாட்டிகள்

**பெடரல் குழந்தை ஆதரவு வழிகாட்டிகள்:** 1-888-373-2222 என்ற எண்ணை அழைக்கவும் அல்லது இந்த இணையதளத்திற்கு வருகை தரவும்: *www.canada.justice.gc.ca* ("புரோக்ராம்ஸ் மற்றும் இனிஷியேட்டிவ்ஸ்" மற்றும் "குழந்தை ஆதரவு" தேர்வு செய்யவும்)

**மாநில குழந்தை ஆதரவு வழிகாட்டிகள்:** உங்கள் உள்ளூர் குடும்ப நீதிமன்றத்தில் ஒரு தகவல் கையேட்டைப் பெறலாம் அல்லது அட்டர்னி ஜெனரலின் அமைச்சக இணையதளத்திற்கு வருகை தருக: *www.attorneygeneral.jus.gov.on.ca* ("குடும்ப நீதி" மற்றும் "**குழந்தை ஆதரவு வழிகாட்டிகள்** தகவல்" தேர்வு செய்யவும்).

## குழந்தைகள்

**நிந்தனை செய்யப்பட்டிருக்கக்கூடிய குழந்தைகளின் தகவல் மற்றும்/அல்லது உதவிக்கு, உங்களது உள்ளூர் குழந்தைகளின் உதவிக்கான கூட்டுறவு அமைப்பு உங்களுக்கு உதவக்கூடும்.** "சில்ட்ரன்ஸ் எய்ட் சொஸைட்டி" யின் கீழ் உங்கள் தொலைபேசி டைரக்டரியின் வெள்ளைப் பக்கங்களில் தேடிப்பார்க்கவும் அல்லது தொலைபேசி டைரக்டரியின் முன் பக்க அவசரக்கால எண்களில் ஆலோசிக்கவும். தி ஒன்டேரியோ அசோசியேசன் ஆஃப் சில்ட்ரன்ஸ் எய்ட் சொசைட்டிஸின் *www.oacas.org* இணையதளத்திலும் ஒன்டேரியோவின் எல்லா உள்ளூர் குழந்தைகளின் உதவி கூட்டுறவு அமைப்புகள் பற்றிய தொடர்பு தகவல்களையும் தருகிறது.

**குழந்தைகளின் வழக்கறிஞர் அலுவலகம்:** 416-314-8000 அழைக்கவும் அல்லது அட்டர்னி ஜெனரலின் அமைச்சக இணையதளத்திற்கு வருகை தருக: *www.attorneygeneral.jus.gov.on.ca* ("ஆஃபீசஸ் மற்றும் ஏஜென்சிஸ்" மற்றும் "ஆஃபீஸ் ஆஃப் தி சில்ட்ரன்ஸ் லாயர்" தேர்வு செய்யவும்).

**ஒரு குழந்தை உங்கள் சம்மதம் இல்லாமல் கனடாவை விட்டு வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருந்தால்:**

அட்டர்னி ஜெனரலின் அமைச்சகம், சென்ட்ரல் அத்தாரிட்டி பார் ஒன்டேரியோ பார் திஹேக் கன்வென்ஷன் ஒன்டாரியோதி சிவில் ஆஸ்பெக்ட்ஸ் ஆப் இன்டர்நேஷனல் சைல்ட் அப்டக்ஷன். 416-240-2411 அழைக்கவும்.

**பன்னாட்டு குழந்தை கடத்தல்கள்: குழந்தைகளுக்கான ஒரு கையேடு ஆர்டர் செய்திட, வெளிநாட்டு விஷயங்கள் மற்றும் பன்னாட்டு வர்த்தகம் துறையில் கான்சுலார் அ∴பெயர்ஸ்** 1-800-387-3124 **ஐ அழைக்கவும்** அல்லது 1-800-267-6788 **ஐ அழைக்கவும்**, அல்லது இந்த இணையதளத்திற்கு வருகை தரவும்: *www.voyage.gc.ca* (பப்ளிகேஷன்ஸ்" மற்றும் "சில்ட்ரன்ஸ் இஸ்யுஸ்" தேர்வு செய்யவும்).

"**அவர் மிஸ்ஸிங் சில்ட்ரன்" புரோக்ராம்** c/o **நேஷனல் மிஸ்ஸிங் சில்ட்ரன் சர்வீசஸ்**: **ஒன்டேரியோவில் கட்டணமில்லாத இந்த எண்ணை அழைக்கவும்** 1-877-318-3576 அல்லது தொலை நகல் செய்யவும்: 613 993-5430. மேலும் தகவல்கள் மற்றும் கூடுதல் இணைப்புகள் உட்பட பிற உதவிகரமான இணையதளங்களுக்கு இந்த இணையதளத்திற்கு வருகை தரவும்: *www.ourmissingchildren.gc.ca*

---

## குடும்ப சட்டம்

**உங்கள் சமுதாயத்தில் உள்ள குடும்ப இல்லத்தைக் கண்டு பிடிப்பதற்கு, உங்கள் தொலைபேசி டைரக்டரியின் நீலப்பக்கங்களில்** "நீதிமன்றங்கள்" பகுதியில் "இன்டெக்ஸ்-கவர்ன்மெண்ட் லிஸ்டிங்ஸ்" பார்க்கவும். அட்டர்னி ஜெனரலின் அமைச்சக இணையதளத்திற்கு வருகை தருக: *www.attorneygeneral.jus.gov.on.ca* ("நீதிமன்ற முகவரிகள்" தேர்வு செய்யவும்)

**குடும்ப வழக்குகளில் நடவடிக்கைகள்** பற்றிய தகவல்களுக்கு மற்றும் **படிவங்களை எப்படி நிரப்புவது** என்பது பற்றிய குறிப்புகளுக்கு, அட்டர்னி ஜெனரலின் அமைச்சக இணையதளத்திற்கு வருகை தருக: *www.attorneygeneral.jus.gov.on.ca* ("பேமிலி ஜஸ்டிஸ்" தேர்வு செய்யவும் மற்றும் "ஆன்லைன் பப்ளிகேஷன்ஸ்" கீழ் உங்கள் வழக்குக்குப் பொருத்தமான நடைமுறைக்கான வழிகாட்டியைத் தேர்வு செய்யவும்.

**குடும்ப சட்ட தகவல் மையங்கள்:** வழங்கப்படும் சேவைகள் பற்றிய விபரங்களுக்கு, உங்கள் உள்ளூர் குடும்ப நீதிமன்றத்தைத் தொடர்பு கொள்ளவும் அல்லது அட்டர்னி ஜெனரலின் அமைச்சக இணையதளத்திற்கு வருகை தரவும்: *www.attorneygeneral.jus.gov.on.ca* ("பேமிலி ஜஸ்டிஸ்" மற்றும் "பேமிலி கோர்ட் சேவைகள்" தேர்வு செய்யவும்)

**பெற்றோர் தகவல் தொடர்கள்** டொரான்டோவில் சுப்பீரியர் கோர்ட் ஆப் ஜஸ்டிஸின் குடும்ப நீதிமன்றம் மூலமாகவும் மற்றும் குடும்ப நீதிமன்றங்களிலும் வழங்கப்படுகின்றன. இந்த தொடர்கள் குழந்தைகள் மீது பிரிவு மற்றும் விவாகரத்தின் தாக்கத்தை இலவசமாக எடுத்துரைக்கின்றன. கூடுதல் இடங்கள் மற்றும் தகவல்களுக்கு அட்டர்னி ஜெனரலின் அமைச்சக இணையதளத்திற்கு வருகை தரவும்: *www.attorneygeneral.jus.gov.on.ca* ("பேமிலி ஜஸ்டிஸ்" மற்றும் "பேமிலி கோர்ட் சேவைகள்" தேர்வு செய்யவும்)

**பிரிவு மற்றும் விவாகரத்து மீது செப்பரேட் வேஸ் என்ற வீடியோ குடும்ப நீதிமன்றங்கள் மற்றும் பொது வாசக சாலைகள் மூலமாக கிடைக்கின்றன**.

**மூவிங் பார்வர்ட்** என்ற விடியோ ஒரு தம்பதியினர் தங்கள் குடும்ப சட்டத் தீர்வுக்கான பயணத்தையும், பெற்றோருக்கான விஷயங்களையும் பின்தொடர்கிறது மற்றும் தீர்வுக்கு வழக்கு மாநாடு மற்றும் மத்தியஸ்தம் போன்ற விருப்பத் தேர்வுகளையும் விளக்குகிறது. இந்த **வீடியோ குடும்ப நீதிமன்றங்கள் மற்றும் பொது வாசக சாலைகள் மூலமாக கிடைக்கின்றன**.

**வேர் டு ஐ ஸ்டான்ட்: எ சைல்ட்ஸ் கைட் டு செப்பரேசன் அன்ட் டைவர்ஸ் எல்லா குடும்ப நீதிமன்றங்கள் மற்றும் ஒன்டேரியோ பிபசுரங்களிலும் கிடைக்கின்றன**. அட்டர்னி ஜெனரலின் அமைச்சக இணையதளத்திற்கு வருகை தரவும்: www.attorneygeneral.jus.gov.on.ca ("பேமிலி ஜஸ்டிஸ்" மற்றும் "பேமிலி கோர்ட் சேவைகள்" தேர்வு செய்யவும்).

குடும்ப சட்டம் மற்றும் பிற சட்ட விஷயங்களில் துண்டுப் பிரசுரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:

**கம்யுனிட்டி லீகல் எஜுகேசன் ஒன்டேரியோ**
**(Community Legal Education Ontario)**
119 ஸ்படைனா அவென்யு
ஸ்வீட் 600
டொரான்டோ ஒன்டாரியோ M5V 2L1
தொலைபேசி.: 416-408-4420
தொலைநகல்: 416-408-4424
இணையதளம்: www.cleo.on.ca
(மின்-அஞ்சல்: cleo@cleo.on.ca)

விவாகரத்து சட்டம் பற்றிய தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:

**டிபார்ட்மெண்ட் ஆப் ஜஸ்டிஸ் கனடா**
**(Department of Justice Canada)**
284 வெல்லிங்டன் ஸ்ட்ரீட்
ஒட்டாவா ஒன்டாரியோ K1A 0H8
தொலைபேசி.: 1-888-373-2222
இணையதளம்: www.canada.justice.gc.ca

2005 ஜனவரியில், அட்வைசரி ஸ்பவுசல் சப்போர்ட் கைட்லைன்களுக்கான ஒரு வரைவு தீர்மானம் வெளியிடப்பட்டு பெடரல் கவர்ன்மென்ட் இணையதளத்தில் இடப்பட்டது. மேலும் தகவல்களுக்கு, வருகை தரவும்: *www.justice.gc.ca/en/dept/pub/spousal/index.html*.

குடும்ப சட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகளின் மீதான வன்முறை, மற்றும் பிற தலைப்புகளில் பிரசுரங்களின் ஒரு பட்டியலுக்குத் தொடர்பு கொள்ளவும்:

**நேஷனல் அசோசியேசன் ஆப் விமன் அன்ட் தி லா**
**(National Association of Women and the Law)**
1066 சோமர்செட் ஸ்ட்ரீட் வெஸ்ட்
சூட் 303
ஒட்டாவா ஒன்டாரியோ K1Y 4T3
தொலைபேசி..: 613-241-7570
தொலைநகல்: 613-241-4657
இணையதளம்: www.nawl.ca
(மின்-அஞ்சல் info@nawl.ca)

## குடும்ப பொறுப்பு அலுவலகம்

தகவல்களுக்கு, **குடும்ப பொறுப்பு அலுவலகத்திற்கு** (எஃப்ஆர்ஓ) எழுதவும்:

பேமிலி ரெஸ்பான்சிபிளிட்டி ஆபிஸ்
(Family Responsibility Office)
தபால் பெட்டி எண் 220
டவுன்ஸ்வ்யு ஒன்டாரியோ M3M 3A3
தொலைநகல்: 416-240-2401

எஃப்ஆர்ஓ பற்றிய பொதுவான தகவல்களுக்கு மற்றும் எஃப்ஆர்ஓ வினால் பயன்படுத்தப்படும் படிவங்களைப் பெறுவதற்கு, எஃப்ஆர்ஓ இணையதளத்திற்கு வருகை தரவும்: www.theFRO.ca

தி கன்பர்மேஷன் ஆப் அசைன்மென்ட் (ஆங்கில படிவ எண் 006-3006, பிரெஞ்ச் படிவ எண் 006-3007) இந்த இணையதளத்தில் கிடைக்கிறது: www.forms.ssb.gov.on.ca).

ஒரு ஏஜென்டிடம் பேசுவதற்கு, அழைக்கவும்:

தொலைபேசி.: 416-326-1817 (டொரான்டோ மற்றும் பகுதி)
கட்டணம்-இல்லாதது: 1-800-267-4330
TTY டொரான்டோ மற்றும் பகுதி: 416-240-2414
TTY கட்டணம்-இல்லாதது: 1-866-545-0083

எஃப்ஆர்ஓ வுக்கு பணம் வழங்குவதற்கு இங்கு அனுப்பவும்:
தி டைரக்டர், பேமிலி ரெஸ்பான்சிபிளிட்டி ஆபிஸ்
தபால் பெட்டி எண் 2204, ஸ்டேசன் P
டொரான்டோ ஒன்டாரியோM5S 3E9

முக்கியமானது: செக் அல்லது மணி ஆர்டரின் முகப்பில் உங்கள் முதல் மற்றும் கடைசிப் பெயரை, எஃப்ஆர்ஓ வழக்கு எண்ணுடன் அச்சிட நினைவுக்கூறுங்கள்.

உங்கள் வழக்கில் சமீபத்திய பரிவர்த்தனைகள் மற்றும் எஃப்ஆர்ஓ பற்றிய பொதுவான கேள்விகளுக்குப் பதில்களை 24-மணி நேரமும் தானியங்கி தொலைபேசி லைனில் பெற, அழையுங்கள்:

தொலைபேசி.: 416-326-1818 (டொரான்டோ மற்றும் பகுதி)
கட்டணம்-இல்லாதது: 1-800-267-7263

எஃப்ஆர்ஓ சட்டப் பிரிவுக்கு நீதிமன்ற ஆவணங்களை வழங்குவதற்கு, அவைகளை இங்கு அனுப்புங்கள்:

லீகல் சர்வீசஸ்
பேமிலி ரெஸ்பான்சிபிளிட்டி ஆபிஸ்
1201 வில்சன் அவென்யு
பில்டிங் B, 5வது தளம்

டவுன்ஸ்வ்யு ஒன்டாரியோ M3M 1J8
அல்லது தொலைநகல் மூலமாக: 416-240-2402

ஒரு நபர் ஒன்டேரியோவின் வெளியே வசித்தால், இன்டர்ஜுரிஸ்டிக்சனல் சப்போர்ட் ஆர்டர்ஸ் பற்றிய தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:

ஐஎஸ்ஓ யுனிட்
பேமிலி ரெஸ்பான்சிபிளிட்டி ஆபிஸ்
தபால் பெட்டி எண் 640
டவுன்ஸ்வ்யு ஒன்டாரியோ M3M 3A3
தொலைபேசி.: 416-240-2410 (டொரான்டோ மற்றும் பகுதி)
கட்டணம்-இல்லாதது: 1-800-463-3533
TTY டொரான்டோ மற்றும் பகுதி: 416-240-2414
TTY கட்டணம்-இல்லாதது: 1-866-545-0083
ஐஎஸ்ஓ யுனிட் தொலைநகல்: 416-240-2405

எல்லா இன்டர்ஜுரிஸ்டிக்ஷனல் சப்போர்ட் ஆர்டர் படிவங்களும் எஃப்ஆர்ஓவின் இந்த இணையதளத்தில் கிடைக்கிறது: www.theFRO.ca.

## வழக்கறிஞர் ஒருவரைக் கண்டுபிடிப்பது

லா சொசைட்டி ஆப் அப்பர் கனடாவினால்(எல்எஸ்யுசி) (LSUC) வழங்கப்படும் சேவைகள் பற்றிய கூடுதல் தகவல்களைப் பெறுவதற்கு, இந்த இணையதளத்திற்குச் செல்லவும்: www.lsuc.on.ca

**உங்களுக்கு அருகில் உள்ள இடத்துப் பகுதியில் பயிற்சி செய்யும் வழக்கறிஞர் ஒருவரின் பெயரை லாயர் ரெஃபரெல் சர்வீஸ் வழங்கிடும். அந்த வழக்கறிஞர்** அரை மணி நேர ஆலோசனையை இலவசமாக வழங்குவார். இந்த சேவைக்கான தொலைபேசி எண்1-900-565-4577 ஆகும். இந்த சேவையை உபயோகிப்பதற்கு ஒரு நிர்ணயக் கட்டணமாக $6.00 உங்கள் தொலைபேசிக் கட்டணத்தில் வரும்.

**உங்கள் வழக்கை ஒரு வழக்கறிஞர் எவ்வாறு கையாண்டார் என்பது பற்றிய** உங்களது ஒரு புகார் பற்றி எல்எஸ்யுசி ஆய்வு செய்யும்:
தொலைபேசி.: 416-947-3310 (டொரான்டோ மற்றும் பகுதி)
கட்டணம்-இல்லாதது: 1-800-268-7568
இணையதளம்: www.lsuc.on.ca ("பார் தி பப்ளிக்" மற்றும் "கம்ப்ளெயின்ட்ஸ்" தேர்வு செய்யவும்)

**வழக்கறிஞர் ஒருவரது கட்டணம் பற்றி விவாதிப்பது எப்படி** என்ற தகவல்களுக்கு எல்எஸ்யுசியின் இணையதளத்திற்கு வருகை தரவும்: www.lsuc.on.ca ( "பார் தி பப்ளிக்", "கம்ப்ளெயின்ட்ஸ்" மற்றும் "யுவர் லாயர்ஸ் பில் – டு ஹை?" தேர்வு செய்யவும்).

**சட்ட உதவி:** உங்கள் சமுதாயத்தில் உள்ள சட்ட உதவி அலுவலகத்தை அது உங்களுக்கு உதவ முடியுமா என்று பார்க்கத் தொடர்பு கொள்ளவும். தொடர்புத் தகவல்களுக்கு, உங்கள் தொலைபேசி டைரக்டரியின் வெள்ளைப் பக்கங்களில் "சட்ட உதவி" கீழ் பார்க்கவும் அல்லது இந்த இணையதளத்திற்கு வருகை தரவும்: www.legalaid.on.ca

## மத்தியஸ்தம்

குடும்ப மத்தியஸ்தம் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு மற்றும் ஒரு குடும்ப மத்தியஸ்தரைக் கண்டுபிடிப்பதற்குத் தொடர்பு கொள்ளவும்:

**ஒன்டேரியோ அசோசியேசன் பார் பேமிலி மீடியேஷன்**
**(Ontario Association for Family Mediation)**
528 விக்டோரியா ஸ்ட்ரீட் நார்த்
கிட்ச்செனர் ஒன்டாரியோ N2H 5G1
தொலைபேசி.: 1-800-989-3025
தொலைநகல்: 519-585-0504
இணையதளம்: www.oafm.on.ca
(மின்-அஞ்சல்: oafm@oafm.on.ca)

**பேமிலி கோர்ட் ஆப் தி சுப்பீரியர் கோர்ட் ஆப் ஜஸ்டிஸில் குடும்ப மத்தியஸ்த சேவைகள் கிடைக்கின்றன. குடும்ப நீதிமன்றங்களின் இருப்பிடங்கள் உட்பட கூடுதல் தகவல்களுக்கு**, அட்டர்னி ஜெனரலின் அமைச்சக இணையதளத்திற்கு வருகை தரவும்: www.attorneygeneral.jus.gov.on.ca ("பேமிலி ஜஸ்டிஸ்" மற்றும் "பேமிலி கோர்ட் சேவைகள்" தேர்வு செய்யவும்)

## கண்காணிப்பின் கீழ் பார்க்கும் அனுமதி

அட்டர்னி ஜெனரலின் அமைச்சகத்தின் **கண்காணிப்பின் கீழ் பார்க்கும் அனுமதி திட்டம் பற்றிய தகவல்களுக்கு, உங்கள் உள்ளூர் குடும்ப நீதிமன்றத்தைத் தொடர்பு கொள்ளவும் அல்லது அமைச்சகத்தின் இணையதளத்திற்கு வருகை தரவும்**: www.attorneygeneral.jus.gov.on.ca (பேமிலி ஜஸ்டிஸ்" மற்றும் "சூப்பர்வைஸ்ட் அக்சஸ்" தேர்வு செய்யவும்).

## குடும்ப வன்முறை

**தாக்கப்பட்ட பெண்களின் ஹெல்ப்லைன்:** இது கட்டணம் இல்லாது மாநில எங்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரங்களும், ஒரு வாரத்தில் ஏழு நாட்களும் இயங்கும் ஒரு ஆபத்துக்கால தொலைபேசிச் சேவை ஆகும். பயிற்சி பெற்ற ஆலோசகர்கள் உங்கள் விருப்பத்தேர்வுகளை முடிவு செய்ய உதவிடலாம், புகலிடங்கள் மற்றும் பாலியல் தாக்குதல் மையங்கள் போன்ற உள்ளூர் ஆதரவுகள் பற்றிய தகவல்களையும் வழங்கிடலாம் மற்றும் ஒரு உடனடியான பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்கிட உங்களுக்கு உதவிடலாம். 150 மொழிகளில் உடனடி மொழி பெயர்ப்பாளர்கள், அழைப்பவர்களுக்குப் பதிலளிக்கக் காத்திருக்கின்றனர். 1-866-863-0511 அழைக்கவும் அல்லது, டொரான்டோ அழைக்கும் பகுதியில் 416-863-0511 அழைக்கவும். TTY 1-866-863-7868.

**பிரெஞ்ச்-மொழி கிரைசிஸ் லைன்:** வன்முறையை அனுபவிக்கும் பிரெஞ்சுபேசும் பெண்களுக்கு கட்டணம் இல்லாத நேருக்கடிக்கால தொலைபேசிச் சேவை இது ஆகும். அழைக்கவும்1-877-336-2433 (ஒரு நாளைக்கு 24 மணி நேரங்கள், ஒரு வாரத்தில் 7 நாட்கள்).

**ஷெல்ட்டர்நெட்:** கனடா நெடுகிலும் நிந்தனை செய்யப்பட்ட பெண்களுக்கான புகலிடங்கள் பற்றிய தகவல்களை இந்த இணையதளம் அளிக்கிறது. மேலும் இந்த இணையதளம்

வன்முறையை அனுபவிக்கும் பெண்களுக்கு பொதுவான தகவல்கள் மற்றும் உதவிகரமான ஆதாரங்களையும் வழங்குகிறது. குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு ஒரு தனியான இன்டராக்டிவ் பகுதி உள்ளது. இந்த இணையதளம் 10 மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளது (ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், போர்ச்சுகீஸ், போலிஷ், சைனிஷ், வியட்நாமிஸ், அரபிக், பார்சி மற்றும் பஞ்சாபி). இந்த இணையதளத்திற்கு வருகை தரவும் *www.shelternet.ca*.

**எஜுகேஷன் ஒய்ப் அசால்ட், பிரசுரங்கள் உட்பட தகவல்களை அளிக்கிறது. தொடர்பு கொள்ளவும்**:

215 ஸ்படைனா அவென்யு
ஸ்வீட் 220
டொரான்டோ ஒன்டாரியோM5T 2C7
தொலைபேசி.: 416-968-3422
TTY: 416-968-7335
தொலைநகல்: 416-968-2026
இணையதளம்: *www.womanabuseprevention.com*
(மின்-அஞ்சல்: *info@womanabuseprevention.com*)

**நிந்தனை செய்யப்பட்டு வரும் ஒரு பெண்ணை உங்களுக்குத் தெரியுமா? ஒரு சட்ட உரிமைகள் கையேடு**, கம்யுனிட்டி லீகல் எஜுகேஷன் ஒன்டேரியோ (சிஎல்இஓ) (CLEO) 1998. இந்த எண்ணை அழைத்து பிரதிகளுக்கு ஆர்டர் செய்யுங்கள் 416-408-4420 அல்லது இந்த இணையதளத்திற்கு வருகை தரவும்: *www.cleonet.ca*.

**ஸ்டாக்கிங் பப்ளிகேஷன்ஸ், மெட்ரோபாலிட்டன் ஆக்ஷன் கமிட்டி ஒன்டாரியோ வயலன்ஸ் எகெயின்ஸ்ட் விமென் அன்ட் சில்ட்ரன் (எம்இடிஆர்ஏசி)** (METRAC). இந்த எண்ணை அழைத்து பிரதிகளுக்கு ஆர்டர் செய்யுங்கள் 416-392-3135 அல்லது இந்த இணையதளத்திற்கு வருகை தரவும் *www.metrac.org*

---

## பாதிக்கப்பட்டோர் சேவைகள்

அட்டர்னி ஜெனரல் அமைச்சகத்தால் வழங்கப்படும் பாதிக்கப்பட்டோர் சேவைகள் பற்றிய தகவல்களுக்கு இந்த இணையதளத்திற்கு வருகை தரவும்: *www.attorneygeneral.jus.gov.on.ca* ("பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள்" தேர்வு செய்யவும்)

**தி விக்டிம் சப்போர்ட் லைன்:** தி விக்டிம் சப்போர்ட் லைன் என்பது மாநில நெடுகிலும், ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழியில் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வரிசையான சேவைகள வழங்கும் கட்டணம் இல்லாத ஒரு தகவல் லைன் ஆகும்.

தொலைபேசி.: 416-314-2447 (டொரான்டோ மற்றும் பகுதி)
கட்டணம் இல்லாதது: 1-888-579-2888

**தொலைபேசி எண்கள், முகவரிகள் மற்றும் இணையதளங்கள் அச்சிடும் பொழுது உபயோகத்தில் இருந்தவையாகும் மற்றும் மாறக் கூடும்.**

குறிப்புகள்